Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 281 | ஞாயிற்றுக்கிழமை

ஆவணி 20 ஆம் நாள் 05 செப்ரெம்பர் 2021
வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 28 (12+16)
விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# 22 நாட்களுக்கு பின்னர் தொற்று உயிரிழப்பு குறைவு



## தொற்றாளர் எண்ணிக்கையும் வீழ்ச்சி

கொழும்பு, செப்ரெம்பர் 5

இலங்கையில் 22 நாள்களின் பின்னர் உயிரிழப்பு எண்ணிக்கை 150 ஐ விடக் குறைவடைந்துள்ளது. முடக்கம் அறிவிக்கப்பட்டு மூன்று வாரங்கள் கடந்துள்ள நிலையில் உயிரிழப்பு குறைவடையத் தொடங்கியுள்ளது. 11

சங்கக் கடையில்

## சீனித் திருட்டு முறியடிப்பு

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 22ஆம் இலக்க கொழும்புத்துறைக் கிளையில் இடம்பெற்ற சீனித் திருட்டு முறியடிக்கப்பட்டது. 11

## நல்லூர்க்கந்தன் தேர்த் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப். 5

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெ 11

## தள்ளி விழுத்தி சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், செப். 5

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அராலி செட்டி 11

## வடக்கில் 212 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் 102 பேரும், கிளிநொச்சியில் 11

## வடக்கில் 9பேர் சாவு

யாழ்ப்பாணம், செப். 5

கொரோனாத் தொற்றால் வடக்கு மாகாணத்தில் 9பேர் உயிரிழந்துள்ளனர். 11

## வடக்கு மாகாணத்துக்கு வெளியே தொற்றாளர்களின் சடலங்கள் தகனம்

நெருக்கடி நிலைமையால் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 5

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த 52 பேரின் சடலங்கள் சுகாதார கட்டுப்பாடுகளின் கீழ் தகனம் செய்ய முடியாத நிலையில் காணப்ப 11

## மா விலை அதிகரிப்புக்கு அனுமதி வழங்கப்படவில்லை

கொழும்பு, செப். 5

கோதுமை மாவின் விலை 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விலை அதிகரிப்புக்கான அனுமதியை வழங்கவில்லை என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சென‌ரத் நிவுன் 11

## காரைநகரில் 200பேருடன் திருமணம் பங்கேற்ற இருவருக்கு தொற்று

பரிசோதனையின்போது சுகாதார அதிகாரிகளுடன் முரண்பாடு

யாழ்ப்பாணம், செப். 5

காரைநகரில் 200 பேருடன் நடைபெற்ற திருமண நிகழ்வில் பங்கேற்ற இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு நேற்று பி.சி.ஆர். சோதனை 11

## படையினர் - புலிகள் இரு தரப்பும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டன

பான்கிமூன் ஆவணத்தை மேற்கோள்காட்டி கடிதம் அனுப்புகிறது தமிழ் அரசுக் கட்சி

கொழும்பு, செப். 5

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடருக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அனுப்பவுள்ள கடிதத்தால் அந்தக் கட்சிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. 2010ஆம் ஆண்டு அப்போதைய ஐ.நா. பொதுச் செயலரின் ஆவணத்தில் கூறப்பட்ட விடயத்தை, இலங்கைத் தமிழ் 11

## ஐ.நா. தீர்மானத்தின் பின்னரும் தொடரும் அடக்குமுறைகள்!!!

மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் கடிதம்

கொழும்பு, செப். 5

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கடந்த மார்ச் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் இலங்கை அரசின் அடக்குமுறைகள் பல்வேறு வடிவங்களில் தொடர்வதாக ஆதாரங்களுடன் பட்டியலிடப்பட்டு தமிழ்த் தேசியக் கட்சிகளால், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு 11

தங்கமான மனம் இருக்கிற இடத்தில் தான் தங்கத்தை வைக்க வேண்டும்

- செயல்படுத்தும் கட்டணங்கள் அறவிடப்படுவது இல்லை
- நீண்ட வரிசையில் காத்திருக்கத் தேவையில்லை
- விரைவான வாடிக்கையாளர் சேவை
- தங்க ஆபரணங்களை மீட்கும் போது முன்னறிவித்தல் அவசியமில்லை

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ. 87,000/-



செலான் தங்கக் கடன்

*நிபந்தனைகளுக்குட்பட்டது

011 200 88 88 www.seylan.lk

செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொரோனாவால்

## உயிரிழந்தவர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி

கொழும்பு,செப்.5

நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களுக்கு நேற்றுமுன்தினம் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில், எதுல்கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இவ் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது மனைவி ஜலனி பிரேமதாஸ ஆகியோர் விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர். (4)

வடக்கில் மின்தகன எந்திரம் பற்றாக்குறை

# 50 கொரோனா சடலங்கள் தகனத்துக்குக் காத்திருப்பு

## கிளிநொச்சியில் மட்டும் 10 சடலங்கள்

**கிளிநொச்சி, செப். 5**

**மின்தகனத்துக்கான இடப்பற்றாக்குறை காரணமாக வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த 50 சடலங்கள் இன்னமும் எரியூட்டப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 10 சடலங்கள் எரியூட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் கொரோனா காரணமாக உயிரிழப்பவர்களின் சடலங்கள் வவுனியா மாவட்டத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்குவைத்தே எரியூட்டப்படுகின்றன.

இந்த மின்தகன எந்திரமும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பழுதுபட்டு பின்னர் திருத்தப்பட்டது. இதனால் ஏகப்பட்ட சடலங்கள் தற்போது மின் தகனத்துக்காகத் தேங்கியுள்ளன.

தற்போது இறப்புகள் அதிகரித்துள்ளமையால் தகனம் செய்வதில் ஏற்படும் தாமதம் காரணமாக சடலங்கள் பிரேத அறைகளில் காத்துக்கிடக்கின்றன என்று சுகாதாரத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு நாளைக்கு எரியூட்டி நிலையமொன்றில் குறைந்தது 8 உடல்களையே தகனம் செய்யமுடியும். ஓர் உடலைத் தகனம்செய்த பின்னர் 2.30 மணிநேரத்தின் பின்னரே மற்றைய சடலத்தை எரியூட்ட முடியும். இதனால் சுமார் 50 சடலங்கள் எரியூட்டுவதற்காகத் தேங்கியுள்ளன. தற்போது அநுராதபுரம் மாவட்டத்தில் 3 எரியூட்டி நிலையங்கள் உள்ளன.

வடக்கிலுள்ள சடலங்களை அநுராதபுரத்துக்குக் கொண்டுசென்று எரியூட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-6)

## நனோ தொழிநுட்ப முறையில்கொரோனாக் கிருமிகள் அழிப்பு

### விசேட மருத்துவர் கண்டுபிடிப்பு

கொழும்பு, செப். 5

நனோ தொழிநுட்ப முறையின் ஊடாக கொரோனா வைரஸ் கிருமிகளை அழிக்கும், கிருமித்தொற்று நீக்கித் திரவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விசேட மருத்துவ நிபுணர் திலான் ராஜபக்ச இதனைக் கண்டுபிடித்துள்ளார். இந்தக் கிருமித் தொற்று நீக்கித் திரவத்தைப் பயன்படுத்தி, பணப்பைகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பாடசாலைப் பைகள் போன்றவற்றின் மேற்பரப்பில் கிருமிகளை அழிக்கமுடியும்.

குறித்த திரவத்தை ஒரு முறை விசிறினால் 90 நாள்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பை வழங்கும். இதன் நுட்பமான செயற்றிறன், ஒருமுறை ஆடைகளுக்கு விசிறினால் பல வாரங்களுக்கு இருக்கும் என்று மருத்துவர் தெரிவித்துள்ளார். (ம-4)

காலத்திற்கேற்ப மாற்றம்
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
வழங்கும் சிறப்பு செயற்திட்டம்
வீட்டில் இருந்தபடியே ஓடர்கள் வழங்கும் வாய்ப்பு
WhatsApp | Viber | Mail
குறைந்த எண்ணிக்கையிலான அச்சுப்பதிப்புக்கள்
- திருமண விழா, பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் (05 லிருந்து 50 வரை)
- கண்ணீர் அஞ்சலி, நினைவு மலர்கள், டியூறோ படங்கள், கல்லில் பெயர் பதித்தல், அந்தியேட்டி அழைப்பிதழ்கள் (10 லிருந்து 100 வரை)
- துண்டுப் பிரசுரங்கள், போஸ்ரர்கள் (10 லிருந்து 100 வரை)

அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக் கொள்ள முடியும்
FREE DELIVERY
அனைத்துத் தேவைகளுக்கும் அழையுங்கள்
கலர் பிறிண்ட்
பனர் பிறிண்ட்
லேசர் பிறிண்ட்
தொடர்புகளுக்கு : 077 0111 035 / 036 / 040
HOTLINE :- 0777 27 50 83

## ஆபாச வீடியோ பதிவு இருவருக்கும் பிணை

கொழும்பு, செப். 5

பலாங்கொடையிலுள்ள பஹந்துடாவ நீர்வீழ்ச்சிப் பகுதியில் ஆபாசக் காட்சிகளைப் பதிவு செய்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மஹரகம மற்றும் எல்பிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த 34 வயதுடைய ஆணும், 24 வயதுடைய பெண்ணும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இருவரும் எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் கைதுசெய்யப்பட்ட ஆணுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நீர்வீழ்ச்சிப் பகுதியில் இளம் ஜோடியொன்று அநாகரிகமாக நடந்து கொள்ளும் வீடியோ சமூகவலைத்தளங்களில் வெளியானது.

அது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இதனையடுத்து குற்றப் புலனாய்வுப் பிரிவின் கணினி குற்றவியல் பிரிவு, விசாரணைகளை முன்னெடுத்து சந்தேகநபர்களைக் கைதுசெய்தது.

சந்தேகநபர்கள் 50க்கும் மேற்பட்ட இடங்களில் ஆபாச வீடியோக்களை எடுத்துள்ளனர். ஆபாச வலைத்தளங்களுக்காக இது போன்ற வீடியோக்களை உருவாக்கி அதனூடாக, இவர்கள் பணம் சம்பாதித்துள்ளனர் என்று விசாரணைகளின்மூலம் தெரியவந்துள்ளது. (ம-4-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸியில் கொல்லப்பட்ட இலங்கையர் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்!

## விசாரணையில் தகவல்

கொழும்பு, செப். 5

நியூஸிலாந்தின் ஒக்லாந்திலுள்ள பல்பொருள் அங்காடியில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட இலங்கையர் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவர் என்று விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது.

ஒக்லாந்திலுள்ள பல்பொருள் அங்காடியில் மக்கள் மீது தாக்குதல் நடத்திய இலங்கையர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் சித்தாந்தங்க ளால் ஈர்க்கப்பட்டிருந்த அவர், சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ். அமைப்புடன் இணையத் திட்டமிட்டிருந்தார். எனினும், ஒக்லாந்து விமான நிலையத்தில் அவர் கைது செய்யப்பட்டார்.

பின்னர் தனிநபர் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட நிலையில் கைதாகி, கண்காணிப்புக் காலத்தில் இருந்தபோதே பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்டார். இதில் 7 பேர் காயமடைந்தனர். 3 பேர் படுகாயமடைந்துள்ளனர். தாக்குதலை மேற்கொண்ட குறித்த நபர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் மட்டக்களப்பு காத்தான்குடி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த முகமட் சம்சுதீன் ஆதில் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் எட்டு வயதிலேயே கொழும்புக்குச் சென்று அங்கு கொழும்பு இந்துக்கல்லூரியில் கல்வி கற்றுள்ளார். பின்னர் 2011ஆம் ஆண்டு நியூஸிலாந்து சென்றுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையினர் முன்னெடுத்து வருகின்றனர். (ம-4)


நல்லூர் கந்தன் தேர் திருவிழா எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் கந்தன் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.

நல்லைக் கந்தனுக்கு

இன்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை

தேர் திருவிழா



திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

நடராசா கஜந்தன்
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல.38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 221 7878, 021 221 7877
E-mail: newmaithily40@gmail.com

நடராசா கஜந்தன்
சந்தோஷ் ஜுவலர்ஸ்
இல.97 A, 99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 221 1177, 021 221 1188
E-mail: santhoshjewellers1188@gmail.com


## இரு நாள்கள் மட்டும் நாடாளுமன்று கூடும்!

கொழும்பு, செப். 5

செப்ரெம்பர் மாதத்துக்கான நாடாளுமன்ற அமர்வை மட்டுப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இரண்டு நாள்கள் மட்டுமே சபை கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக நாளையை அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்குத் துறைசார் அமைச்சர்களால் பதிலளிக்கப்படும். மறுநாள் முக்கிய விடயங்கள், விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதேவேளை, அவசரகால நிலை பிரகடனம் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் கேள்விக்கணைகளையும் தொடுக்கவுள்ளன. (ம-4,44)

## பெருந்தொகை ஹெரோய்னுடன் வெளிநாட்டுக் கப்பல் சிக்கியது

### 7 பேர் கைது

கொழும்பு, செப். 5

இலங்கையின் தெற்குக் கடற்பரப்பில் பெருந்தொகையான ஹெரோய்னுடன் பயணித்த வெளிநாட்டு மீன்பிடிக் கப்பலொன்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அதில் பயணித்த ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பலில் இருந்து 301 கிலோகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சர்வதேச கடற்பரப்பில் விசேட ரோந்துப் படகுகள் மூலம் கடந்த சில நாள்களாக கண்காணிப்பு நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டனர். இதன் போது குறித்த மீன்பிடிக் கப்பல் சுற்றிவளைக்கப்பட்டது.

கைதானவர்கள் கொழும்புத்துறை முகத்துக்கு அழைத்துவரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். எழுவரில் நால்வர் பாகிஸ்தான் பிரஜைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,44)




50% வரையிலான புலமைப்பரிசில்கள்

இலங்கையிலுள்ள ஒரே கனடிய பட்டப்படிப்பு முதல் தொகுதியினருக்கு

(BCS) Bachelor of Computer Science

(BACS) Bachelor of Applied Computer Science

2+2 முதல் இரண்டு வருட பட்டப்படிப்பு இலங்கையில் இறுதி இரண்டு வருட பட்டப்படிப்பு கனடாவில்

உலகளாவிய முன்னணி IT நிறுவனங்களிலிருந்து சிறந்த வேலைவாய்ப்பு

செப்டெம்பர் 2021 ஆட்சேர்ப்பு

ucltocanada info@ucl.lk www.ucl.lk

0761 586 912

UNIVERSAL COLLEGE LANKA - இல.503, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஏறுது விலை; இறங்குது வேதனம்

அரச ஊழியர்களின் மேலதிகக் கொடுப்பனவு, படிகளை நிறுத்துவது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டிருக்கிறது கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு. நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்துள்ள நிலையில், அரசின் இந்தத் தீர்மானம் நிச்சயம் அதிர்ச்சியளிக்கும் முடிவுதான்.

கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தபோது பல வாக்குறுதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் மீட்பர் என்று கூடச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் நடப்பவை அதற்கு எதிர்மாறாகவே இருக்கின்றன.


அரசின் பின்னடைவுகளுக்கும், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கும் கொரோனா பெருந்தொற்றும் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. அதேநேரம் இந்த நெருக்கடிகளைக் கையாள்வதற்குக் கோத்தாபய ராஜபக்ச அரசு திணறுகின்றது என்பதும் உண்மை. அரசின் நிர்வாகத் திறனின்மையும் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு முக்கியமான காரணம் என்பதையும் மறுக்கமுடியாது.

பொருளாதார நெருக்கடியால் திணறிவரும் ராஜபக்ச அரசு, நெருக்கடியில் இருந்து தப்ப இப்போது அரச ஊழியர்களின் சம்பளத்தில் கைவைத்திருக்கிறது. இப்போதுள்ள பொதுமுடக்கம் நடைமுறையில் உள்ளதால், போக்குவரத்துப் படிகள், மேலதிக கொடுப்பனவுகள் வழங்க முடியாது என்று தனது முடிவுக்குக் காரணம் சொல்லியிருக்கிறது அரசு.

பொதுமுடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அரசு கூறிக்கொண்டாலும், பொதுமுடக்கத்தைக் கூட ஒழுங்கான முறையில் செயற்படுத்தமுடியாத நிலையில்தான் அரச நிர்வாகம் இருக்கின்றது. பொதுமக்கள் சுதந்திரமாக வீதிகளில் திரிகிறார்கள், அதேநேரம் சுகாதார முன்களப் பணியாளர்கள், பணிக்கு அழைக்கப்படும் அரச ஊழியர்கள் தினமும் பணிக்குச் சென்றுகொண்டுதான் இருக்கிறார்கள். இப்படியான நிலைமையில் பொதுமுடக்கத்தைக் காரணம் காட்டி அரச ஊழியர்களின் சம்பளத்தில் அரசு கைவைப்பது முறையானது அல்ல.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைக் காரணம் காட்டி, கோத்தாபய ராஜபக்சவும், மஹிந்த ராஜபக்சவும் தங்கள் சகோதரரான பஸில் ராஜபக்சவை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வந்திருந்தனர். பஸில் ராஜபக்ச பதவிக்கு வந்தபின்னர் அனைத்தும் மாறும் என்று ஆளும் கட்சியினர் பீற்றிக் கொண்டனர். பொருளாதார நெருக்கடிகளைக் காட்டி ராஜபக்ச குடும்பங்கள் பதவிகளைப் பெற்றுக்கொண்டதைத் தவிர, மக்களுக்கு நன்மை எதுவும் நடந்ததாக இல்லை.

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உச்சத்துக்கு சென்றிருக்கின்றன. பல பொருள்களை சந்தையில் காணவேமுடியவில்லை. இப்போது அரச ஊழியர்களின் சம்பளத்துக்கும் வேட்டு வைக்கப்பட்டிருக்கிறது. இது இத்துடன் முடியப்போவதில்லை. எனினும் மக்களின் பொறுமைக்கும் எல்லை உண்டு என்பதை அதிகாரத்தில் உள்ளவர்கள் புரிந்துகொள்ளும் நாள் வெகுதொலைவில் இல்லை.




### கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை

## 4,885 பேருக்குக் கொரோனா 38 பேர் உயிரிழந்துள்ளனர்

### மாவட்டச்செயலர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, செப். 5**

**கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாவால் 38 பேர் உயிரிழந்துள்ளனர். 4ஆயிரத்து 885 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அவர்களில் தற்போது 2 ஆயிரத்து 374பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று கிளிநொச்சி மாவட்டசெயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**



அவர் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய 3ஆயிரத்து 691 குடும்பங்களுக்கு உலருணவு வழங்கப்பட்டுள்ளது. இதற்கென திறைசேரியிலிருந்து 9.4 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது. அதன்படி ஆயிரத்து 590 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
இதுதவிர, அரசின் நடவடிக்கைக்கு அமைய சதொச, கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக நியாய விலைக்கு சீனி விற்பனை செய்யப்பட்டுவருகிறது.
39 ஆயிரத்து 500 கிலோகிராம் சீனி கிளிநொச்சி மாவட்டத்துக்கு எடுத்துவரப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டுவருகிறது - என்றார். (த-214,113)

### கைதடி சாந்தி நிலையத்தில்

## தொற்றுக்குள்ளான முதியவர் உயிரிழந்தார்

### 112 பேர் சிகிச்சையில்

சாவகச்சேரி, செப். 5
கைதடி சாந்தி நிலைய முதியவர் ஒருவர், கொரோனா சிகிச்சை நிலையத்தில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் சாந்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்று இனங்காணப்பட்டதையடுத்து அந்த முதியவர் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்தநிலையில் அவர் உயிரிழந்தார்.
இதேவேளை, சாந்தி நிலையத்தில் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் அங்கு தங்கியிருந்த முதியவர்கள் உட்பட 112 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டிருந்தனர். அவர்கள் சிகிச்சையில் உள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (த-9)

## வங்கிகளில் கடன்கள் சலுகைக்காலம் நீடிப்பு

கொழும்பு,செப்.5
வங்கிகளில் கடன்கள் பெற்ற வர்த்தகர்கள் மற்றும் ஏனையவர்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை சலுகைக்காலம் வழங்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற வணிக நிறுவனங்களுக்கு சுற்றறிக்கைகள் மூலம் இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட தரப்பினர் முன்வைத்த கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
கடன்கள் பெற்ற வர்த்தகர்கள் மற்றும் தனிநபர்களின் கோரிக்கைக்கு அமைய, இந்தச் சலுகையை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையற்ற உடல் வீதியருகில் மீட்பு

கொழும்பு, செப்.5
காலி சமுத்திர மாவத்தையில் வீதிக்கு அருகில், தலையற்ற உடல் மீட்கப்பட்டுள்ளது.
30 தொடக்கம் 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரது உடலே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த உடலத்தை அடையாளம் காண பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-4)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 06 . 1954

மறைவு 06 . 09 . 2010

**நடராஜா கனகலிங்கம்**

(மர அரிவுகாலை, மரக்காலை உரிமையாளர்)

திதி-திரயோதசி

குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே!
இப்பாரினில் எம்மை பரிதவிக்கவிட்டுச்
சென்றாலும் என்றும் விடிவெள்ளியாய்
வழிநடத்தும் எங்கள் அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு மைத்துனி திருமதி அமிர்தகலை அவர்களின்
அன்புக் கணவர்


**திரு.சண்முகம் புவனேந்திரன்**

அவர்களின்

மறைவையிட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.. அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சண்முகநாதன் குடும்பம்
லவ் லேன், உடுவில்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 02 . 1943

மறைவு 03 . 09 . 2021

**கிட்டினன் பரம்சோதி**

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.)

இக்கிரானை கந்தரோடை, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டினன் பரம்சோதி அவர்கள் கடந்த (03.09.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கிட்டினன் - சீதை தம்பதியரின் அன்பு மகனும், மடத்தீன்-மரியாள் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், குணரத்தினத்தின் பாசமிகு சகோதரனும், நாகலோஜினி, சரவணபவானந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் மருத்துவ பீடம்-யாழ் பல்கலைக்கழகம்), பத்மலோஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சிறீரஞ்சன் (மேற்பார்வையாளர் - யாழ் போதனா வைத்தியசாலை), தமயந்தி, மரியசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஜதுர்சன், ரிகாஷன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்-நெடுந்தீவு), துஷாரா, நிதுஷா, பிரணவன், கஜானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.09.2021) சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இக்கிரானை,
கந்தரோடை,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
சரவணபவானந்தன் : 0778210473
நாகலோஜினி : 0773170177
பத்மலோஜினி : 00447506582997

## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலையின் ஆசிரியர்
திரு.முத்துக்கிருஷ்ணன் ஈஸ்வரபவன்
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் பரமேஸ்வரி முத்துக்கிருஷ்ணன்**

அவர்கள் 02.09.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/போக்கட்டி றோ.க.த.க பாடசாலை
கொடிகாமம்.

## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



உருவாய் 14.09.1949

அருவாய் 06.08.2021

**அமரர் செல்லத்துரை சிவஞானம்**

ஓய்வுநிலை அதிபர் SLPS I

(யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்)

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செ.சிவஞானம் கடந்த (06.08.2021) அன்று சிவப்பேறடைந்தார்.
அன்னார் செல்லத்துரை நல்லம்மா தம்பதியரின் மகனும், வே. கந்தசாமி - சறோஸ்மலர் (கனடா) தம்பதியரின் மருமகனும், சுதர்சினியின் அன்புக் கணவரும், தர்சிகா (சுவிஸ்), வித்தகன் (சுவிஸ்), ஆர்த்திகா (கனடா), சாரங்கா, தனுசிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தபேசன், சுமணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், த.ஆதிரன், சு.யான்வி, சு.கதிர் ஆகியோரின் அம்மப்பாவும், சுப்பிரமணியம் (ஓய்வுநிலை அதிபர்), யோகநாதன், கணேசநாதன் (அமரர்), மதிவதனசுந்தரி, யோகம்மா, திருச்செல்வநாதன் (கனடா), தங்கேஸ்வரி (U.K), நவிலகுமாரின் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதர்சன் (சுவிஸ்), தர்சினி (கனடா), சுரேந்திரன் (கனடா), சுதாகரன் (கனடா), சாந்தமலர் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னார் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சையில் இருந்த பொழுது உதவிய வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள் மற்றும் இறுதிக்கிரியைகளில் உதவி சைவ அந்தணக் குருமார்களுக்கும், ஞானதீபம் மலரினை வெளிவர உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
கடந்த (03.09.2021) இல் எமது இல்லத்திலும், கீரிமலையிலும் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்றன.
இன்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் கால சூழ்நிலைக்கேற்றவாறு உரிய சுகாதார நடைமுறைகளுடன் நடைபெறுகின்றன என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

077 4216 598
077 6155 930

தகவல்:
குடும்பத்தினர்.



# வவுனியா நகருக்குள் விசேட சோதனைகள்

வவுனியா, செப். 5
ஊரடங்குச் சட்டதை மீறி, அத்தியாவசிய தேவையின்றி வவுனியா நகருக்குள் நுழைந்த வாகனங்கள் நேற்றுமுன்தினம் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்படும் வாகனங்களைக் கண்காணிக்கும் நோக்குடன் போக்குவரத்துப் பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.
குருமன்காடு மற்றும் மன்னார் வீதிகளில் விசேட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தியாவசிய தேவையின்றி நகருக்குள் பிரவேசித்த வாகனங்களின் சாரதிகள், கடுமையாக எச்சரிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டனர்.
தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயற்பட்ட 10 வாகனங்களின் சாரதிகளுக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். (ஒ-4-18)



# வீதிகளில் நடமாடியோர்மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

## கோப்பாய் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 5
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தைமீறி வீதியில் பயணித்தோருக்கு எதிராக கோப்பாய் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பயணத்தடையைமீறி பொதுமக்கள் வீதிகளில் பயணிக்கின்றனர்.
வீதிகளில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதால் கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரிப்பதற்குரிய வாய்ப்பு காணப்படுகிறது.
இதனைத் தடுக்கும் முகமாக கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கோப்பாய் பொலிஸார் நேற்று சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
இதன்போது, அத்தியாவசியசேவை தவிர்ந்து வீதியில் பயணித்தோர் மற்றும் பயணத்தடை வேளையில் சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது வீதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டோரின் விவரங்கள் பொலிஸாரால் சேகரிக்கப்பட்டன.
அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழமையும் பெருமையும் புதுமையும் பொலிவும் கொண்ட நல்லூர்க் கந்தன் ஆலயம்

வி.இராசநாயகம்

வடஇலங்கையில் பண்டைய வரலாறு, கந்தபுராணக் கலாசாரமிக்க நல்லூரில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் தம் அடியார்களுக்கு அருள் சுரந்து கொண்டிருக்கிறான். நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும் செல்வச் சந்நிதியில் அன்னதானக் கந்தனாகவும் கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும் கோவில் கொண்டருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான். நல்லூர் கந்தன் ஆலய கிழக்கு தெற்கு, வடக்கு வாயில் கோபுரங்கள் அழகிய சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்டு அடியார்களை அருள்சுரந்து வரவேற்கும் வாயில்களாகக் காணப்படுகின்றன. ஆலய உள்மண்டபங்கள் அழகிய வர்ணங்கள் தீட்டப்பட்டு தெய்வீகமாக காட்சி தருகின்றன. ஆலய கண்டாமணியின் நாதம் நாளும் கேட்கும் அடியவர்களது பக்திப் பரவசத்தைக் கூட்டுகிறது. திருவிழாக் காலத்தில் ஆலயப் பகுதியாவும் இந்திரவிழா போலக் காணப்படும். அத்துடன் புனிதம் நிறைந்தும் காணப்படும் ஆலய வீதி நான்கு புறமும் மயில், சேவல் கொடிகளும் பறந்து பக்தியை கூட்டி நிற்கும். நாட்டின் எல்லா இடங்களில் இருந்து வந்து விரதம் அனுஷ்டிப்போரும் வெளிநாடுகளில் இருந்து வந்து இங்கு விரதம் அனுஷ்டிப்போரும் உலகெங்கும் பரவியுள்ள கொடிய கொரோனா நோய்த் தடைகள் பல ஏற்பட்டதன் காரணமாக அந்த அந்த இடத்திலேயே இருந்து விரதம் அனுஷ்டித்து முருகன் திருவருள் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.



பெரியவர்கள், குறிப்பாக இளைஞர்கள் அங்கப்பிரதிட்சை செய்வதும் பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்தி விரதமிருப்பதும் காவடிகள் நேர்த்திக் கடனுக்காக செய்வதும் இம்முறை சுகாதார விதிமுறை களுக்கு அமைய தடைகள் செய்யப்பட்டுள்ளது.


**ஆலய கொடிச்சீலை வரலாறு**

கொடியேற்றத் திருவிழாவுக்கு ஒரு வாரத்துக்கு முதல் நாள் ஆலய சிவாச்சாரியர்கள் மூலமாக கொடிச்சீலை உபயகாரர்களுக்கு காளாஞ்சி கையளிப்பு நிகழ்வு பக்திபூர்வமாக இடம்பெறும். வருடா வருடம் தலைமுறை தலைமுறையாக செங்குந்தர் மரபில் வந்த சிவஞான முதலியார் அவரது பேரன் ம்ற்றும் அவர்களைச் சார்ந்தோரால் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியரது வீட்டில் இருந்து கொடிச்சீலையானது மங்கல வாத்தியங்கள் சகிதம் எடுத்து வரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள கௌரவ வைரவநாதர்- வல்லிபுரச்சாமி அவர்களால் அமைக்கப்பட்ட கொடித்தேர் மடத்தில் கோவில் கொண்டிருக்கும் முருகப் பெருமானுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று மங்கல வாத்திய சகிதம் அடியவர்கள் புடைசூழ கொடிச்சீலையானது மாட்டு வண்டிலில் பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர் ஆலயத்தை வந்தடையும். கொடியேற்றத்துக்கு முதல் நாள் ஆலய சிவாச்சாரி யார்களிடம் காலை பத்து மணியளவில் பக்திபூர்வமாக யைளிக்கப்படும்.

பண்டைய கலாசாரம், பண்பாடு, மரபுகள், இன்னமும் பேணிக்காக்கப்பட்டு வருவதும் இங்கு தனிச்சிறப்பு. இவ்வாலயத்தில் நேரம் தவறாத பூசை வழிபாடுகள், அர்ச்சனைக்கு ஒரு ரூபா மட்டும் அறவிடப்படுகிறது. உற்சவ காலங்களில் முருகப் பெருமான் தினமும் வெவ்வேறு அலங்கார வடிவில் வந்து அருள் பாலிக்கிறான்.

(மறுபக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய சிவாச்சாரியார்கள் உருத்திராட்சை மாலையுடனும் முகக்கவசம் அணிந்தும் பூசை வழிபாடுகளில் இம்முறை ஈடுபடுகின்றார்கள். ஆலயப் பணியாளர்களும் சீரான ஆடையுடனும் முகக் கவசம் அணிந்தும் காணப்படுகிறார்கள். காலை, மாலை, திருவிழா நடைபெற்று முருகப் பெருமான் உள்வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கிறார்.


**நல்லூர் கோவிலின் பூசை வழிபாடுகள்**

ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி, சூரன்போர், இயமசங்காரம், கார்த்திகைத் திருவிழா, கற்பூரத் திருவிழா, தைப்பூசத் திருவிழா, சித்திரை வருடப் பிறப்பு என பல விழாக்கள் நடைபெறுகின்றன. ஆடி அமாவாசை வந்து ஆறாம் நாள் வருடாந்த உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாள்கள் நடைபெறும். ஆறு காலப் பூசைகள் நடைபெறும் ஒரே ஒரு ஆலயம் நல்லூர் என்பது குறிப்பிடத்தக்கது. நல்லூர்க் கந்தன் திருவிழா பல லட்சக்கணக்கான முருகன் அடியார்களுக்கு ஆறுதல் அளித்து அருளைக் கொடுப்பது உற்சவ காலங்களில் அலங்கார வடிவில் மற்றும் தேரில் பவனி வரும் முருகனைக் கண்டு தரிசித்த அடியார்கள் இம்முறை எங்கள் இதயங்களில் அருவமாக இருத்தி வழிபட்டுக் கொள்வோம். தொலைக்காட்சி மூலமாகவும் பார்த்து மனதைத் தேற்றி மனத் திரையில் முருகனை நினைந்து வழிபாடு செய்வோம். யோகர் சுவாமி, செல்லப்பா சுவாமிகள் போன்ற பல சித்தர்கள் நல்லூர் வீதியில் இருந்து முருகனைத் தரிசித்து பேறு பெற்றவர்கள். தேர்த்திருவிழா அழித்தலையும் தீர்த்தத் திருவிழா அருளலையும் குறிக்கும். இந்தத் தேர்த் திருவிழா தினத்தில் தேவர் சிறை மீட்டுக் காத்த முருகப் பெருமானை வணங்கி வழிபட்டு உலகெங்கும் பரவியுள்ள இக்கொடிய கொரோனா நோய் நீங்கி உலக மக்கள் அனைவரும் நல்லருள் நற்பேறு என்பன பெறுவோமாக.

## தேரேறி வந்து எமைத் தேற்றி அருள் தந்திடுக

நல்லை நகருறைந்தாய்
நாடெல்லாம் புகழ் கொண்டாய்
நம்பி வரும் எமக்கு
நற்றுணைவன் நல்லூரா
பொல்லா வினைபோக்கும்
புண்ணியனே பூதலத்தில்
நல்லைப் பதியின்
நாயகனே - நாமுய்ய
தேரேறி வந்து எமைத்
தேற்றி அருள் தந்திடுக

*மானிக்க லீலாவிநோதன்*





நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழா இனிதே நடைபெற பிரார்த்திப்போம்




ஸ்ரீ சிற்சபேசாய மங்களம்

NE
நல்லை எண்டபிரைஸ்





நல்லை பொற்சபைதனில் நல்லருள் புரியும், ரதமேறும் நாயகன்
வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ ஷண்முகரின் பாதம் பணிவோம்!

அனைத்துவிதமான டயர்கள், WORKSHOP, HARDWARE ITEMS,
TRACTOR GENUINE PARTS மற்றும் பல விதமான பொருட்களையும் சேவைகளையும்
தரமாகவும் நியாயமான விலையுடன் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.

அழகிய நல்லை சனங்கள் வாழி
நன்கு தரும் நல்லைநகர் கந்தர் வாழி
நாளாந்த வேலவரெந் நாளும் வாழி

**Nallai Enterprise (Pvt) Ltd,**
No. 43, Stanley Road, Jaffna.
Tel: 021 221 0000

**Branch:**
Panrikkeythakulam, Omanthai, Vavuniya.
Tel: 077 120 4675 / 077 120 4678

நல்லைக் கந்தனின் அருள் ஆசிகளை வேண்டி நிற்கும்
நல்லை எண்டபிரைஸ் நிறுவனத்தினரும் ஊழியர்களும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
# SRI LANKA
# VACANCIES

University of Jaffna will entertain applications to reach us on or before **13th September 2021** from qualified Sri Lankan Nationals for the undermentioned **Temporary posts**.

**FACULTY OF ARTS**

- **Temporary Assistant Lecturer** in Archaeology/ Christian Civilization/ Drama & Theatre Arts/ Economics/ English Language Teaching/ Fine Arts/ Linguistics/ Geography/ History/ Home Economics/ Information and Communication Technology/ Philosophy/Psychology/ Planning/ Political Science/ Sociology/ Tamil/ Translation Studies
- **Temporary Assistant Lecturer** in Law
- **Temporary Demonstrator** in Media studies
- **Temporary Instructor** in Dance(Bharatham)/ Carnatic Music/ Miruthangam for the Department of Dance

**Minimum Requirements/Qualifications:**

1. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours;

**OR**

2. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;

**OR**

3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours,

**and**

(b) a recognized postgraduate degree in the relevant subject

**SALARY AND OTHER BENEFITS**

- **Temp. Demonstrator/ Temp. Instructor** **Rs. 40, 920/- p.m (Fixed)**
- **Temporary Assistant Lecturer** **Rs. 49,860/- p.m (Fixed)**

  In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.
- **Application Form**

Applicants are requested to fill online application form given in the link below:
Application form: https://forms.gle/fyPChZfhqc5aKQhf8

Applicants are required to submit application form along with the scanned copy of the statement of degree and paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to any branch of the People's Bank-in favour of **University of Jaffna Collection Account Number: 970000090000387**of Bursar, University of Jaffna on or before the closing date.

**Submission of Applications will not be entertained in person.** Only short-listed applicants will be called for an interview.

Registrar

## வீடு வாடகைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில். K.K.S. வீதிக்கு அருகாமையில் அனக்ஸ் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **077 9935 844**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப் பெண் தேவை. தொடர்பு: **077 2626944**

## இலங்கை தொழில்சார் கற்கைகள் நிறுவனம்.
## நிகழ்நிலை சட்டமாணி பட்டக் கற்கைநெறி (LL.B.)
## (The Degree of Bachelor of Laws)

இலங்கை தொழில்சார் கற்கைகள் நிறுவனமானது மூன்று வருடங் களையுடைய (06 அரையாண்டுகள்) சட்ட மாணி பட்டக் கற்கைகளிற்காக கல்வியாண்டு 2021 / 2022 நிகழ் நிலை விரிவுரைகளிற்காக விண்ணப்பங் களினைக் கோருகின்றது.

**General Rules Regarding Admission:**

- பொது அறிவு, பொது உளச்சார்பு உள்ளடங்கலாக அனுமதிப் பரீட்சையில் 45 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- சட்டமாணி பட்டக் கற்கை நெறியானது 03 வருடங்களைக் கொண்ட முழு நேரக் கற்கை நெறியாகும். ஒவ்வொரு அரையாண்டு முடிவிலும் பரீட்சைகள் நடைபெறும்.
- தமிழ் விளக்கங்களுடன் "மொழி ஆங்கிலத்தில் விரிவுரைகள் இடம்பெறும். **Viva-voce examination in Practical / Clinical Papers.**

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த உ.தர பரீட்சை தகைமை அல்லது NVQ 4 தகைமை. பட்டதாரிகள்.
- அரச/தனியார் துறை உத்தியோகத்தர்கள்.
- அனுமதிக் குழுவினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய தமைமைகள். இறுதி முடிவு அனுமதிக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

**வயதெல்லை :**

- 20 - 45 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 19.09.2021.**

சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையினை (பெயர், விலாசம், பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம், e-mail) உள்ளடங்கலாக degreeinfo21@gmail.com மின்னஞ்சல் ஊடாக அல்லது 0763784109 இலக்கத்தில் Viber or Whats app ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

**இலங்கை தொழில்சார் கற்கைகள் நிறுவனம்**


**Ho: R.A De Mel Mawatha, Kollupitiya, Colombo03.**

**கிளைகள்:** யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு.

**TP: 0214340229/0763784109**

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 04 . 1951



மறைவு 02 . 09 . 2021

### அமிர்தரட்ணராஜா இராசயோகன்

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவு, இந்தியா தமிழ்நாடு, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தரட்ணராஜா இராசயோகன் அவர்கள் 02.09.2021 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்ரமணியம் நாகேந்திரர் (கொடிவேல் விதானையார்), செல்லம்மா தம்பதிகளின் மூத்த அன்புப் பேரனும், காலஞ்சென்ற அமிர்தரட்ணராஜா (ராசா வாத்தியார்), அமிர்தம் தம்பதிகளின் மூத்த செல்வப் புதல்வரும், காலஞ்சென்ற கந்தப்பிள்ளை, வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும்,நிர்மலாதேவி(பேபி) அவர்களின் அன்புக் கணவரும், அனித்ரா (அனு- லண்டன்), சதீஸ் (இலங்கை), அமிர்தா (கனடா), நாகேந்திரன் (அயன்- இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலலக்சுமி (இலங்கை), பொன்னம்பலம் (ராஜ்- லண்டன்), காலஞ்சென்ற நாகேந்திரர் (சின்னா), இராமநாதன் (மன்னா- லண்டன்), கோகிலலக்சுமி (ஆனந்தி- லண்டன்), றோமகவாணி, முருகதாசன், சாண்டில்யவாணி, கேசவவர்மா, கண்ணப்பன் (கனடா), ஹேமகவாகினி (கொலண்ட்), கிரிநிதாகௌரி, உமாமகேசனா, அமுதவேணி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிரகலாதன் (கண்ணன்- லண்டன்), ஜெஸ்ரின் தங்கராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாரகா, அமிர்தராஜ், யாழினி, நிலானி, அக்ஷயா, கயல், லெமோரியன் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், ஜேந்திரா, யோகேந்திரா, சோபிகா, ஆர்திகா, பிரவின் ஆகியோரின் அன்பு மாமாவும், சந்திரசேகரம்பிள்ளை, வேனுநாயகி, அன்ரன், புஸ்பம், காலஞ்சென்றவர்களான கனகசபை, சிவநாதன், குகராசா மற்றும் வரதராசா, லோகநாதன் (காட்டர்), கோசலாதேவி, குலகலாதேவி, லலிதாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லீசா, சியாரா, யதீரன், யஸ்மின், தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (06.09.2021) திங்கட்கிழமை பி.ப 03:00 மணியளவில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சதீஸ் - மகன் Mobile : +94760543560
பொன்னம்பலம் - சகோதரன் Mobile : +447413139989
மன்னா - சகோதரன் Mobile : +447496379621
ஆனந்தி - சகோதரி Mobile : +447711175539
அனித்ரா - மகள் Mobile : +447424459751
அமுதா - மகள் Mobile : +16474483064
முருகதாசன் - சகோதரன் Mobile : +16477210917
P.ஜெயந்தி (உடன்பிறவா சகோதரி) : 077 6692419

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திரு.சண்முகம் புவனேந்திரன்

கோப்பாயை பிறப்பிடமாகவும், Melbourne, Australia ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சண்முகம் புவனேந்திரன் அவர்கள் கடந்த (03.09.2021) அன்று காலமானார்.

அன்னார் அமிர்தகலையின் அன்புக் கணவரும், பக்தபவித்திரி (பக்தி), ஜெயப்ர மோதினி (ஜெயா) ஆகியோரின் அன்புத்தந்தையும், Thomas இன் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற புகையிரத நிலய அதிபர் சண்முகம் - சிவகொழுந்து அவர்களின் மூத்த புதல்வனும், கொல்லன்கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர்கள் பொன்னம்பலம் - இராசம்மா அவர்களின் மருமகனும், கமலாம்பிகை (Johannesburg), காலஞ்சென்ற குலேந்திரன் (விச்சு), காலஞ்சென்ற மகேந்திரன் (Baby), யோகாம்பிகை (Ranee- இலங்கை), காலஞ்சென்ற கணேசலிங்கம், மாலினி (யசோ- London) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஷஷ்டிவரதன், ஞானதேவி (சென்னை ), செல்வநிதி (கனடா), காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா, சுதர்சனன் (London), ஞானகலை லோகநாதன் (Australia), பரதன் (London), சிவகலை சிவகுமார் (Canada), சத்துருக்கன் (London) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரது ஈமக்கிரியைகள் எதிர்வரும் (07.09.2021) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு 5, Kendall Close, Templestowe Australia இல் நடைபெற்று, தொடர்ந்து Springvale மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு இலக்கம்.**
ஜெயா : 61400642036
ஞானகலை : +61450709861

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 04 . 1978

மறைவு 04 . 09 . 2021

## அமரர் குமரேசன் ராஜ்குமார்

(ஹரிஸ் பிறிண்டர்ஸ் உரிமையாளர்)

வரணியை பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திரு.குமரேசன் ராஜ்குமார் நேற்று (04.09.2021) சனிக்கிழமை சிவனடியில் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமரேசன் மற்றும் வேலாசி தம்பதியரின் அன்பு மகனும், சுமதி அவர்களின் அன்புக்கணவரும், விஜயகுமார் கலா, உதயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஹரிஸ்ராஜ், சாருதன், தீபிகா ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இராமநாதன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் Covid-19 விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 617 6794

தகவல்:
குடும்பத்தினர்.

# 36 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

வன்னேரிக்குளம், செப். 5

கிளிநொச்சியில் கொரோனாத்தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள 36 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங் கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரதிபுரம் மத்தி, பாரதிபுரம் வடக்கு, பாரதிபுரம் தெற்கு, பொன்னகர் வடக்கு ஆகிய கிரா மங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 36 குடும்பங்களுக்கே நவ்வொவ் அமைப்பு உணவுப் பொதிகளை வழங் கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-13)

# மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 09 . 1944

மறைவு 04 . 09 . 2021

## சண்முகம் நித்தியானந்தன்

(ஓய்வுபெற்ற ஊழியர், அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதடி வீதியை பிறப்பிடமாகவும் இராசாவின் தோட்டம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நித்தியானந்தன் அவர்கள் நேற்று (04.09.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், அரியமலரின் அன்புக் கணவரும், பரமானந்தன், தயானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கேதீஸ்வரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், அஞ்சல் திணைக்களம், யாழ்ப்பாணம்) யசோதரா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி தென்மேற்கு பிரதேச சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாமினி (ஆசிரியர், யாழ்/இந்து மகளிர் கல்லூரி), சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்தீபன், சங்கவி, அஷ்வின், கவீனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.09.2021) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

117, இராசாவின் தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## தர்மலிங்கம் லோகநாதன்

திதி-05.09.2021 (சதுர்த்தசி)

முதலாம் ஆண்டு நினைவுநாள் வந்ததுவோ
ஒவ்வொரு நிமிடமும் உம் நினைவுதான் - அப்பா
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அப்பா என
அழைப்பதற்கு நீங்கள் இல்லையே அப்பா
பாசமாய் வளர்த்து பாரினிலே போற்ற
வாழ வழி காட்டினீர்கள் எமதருமை அப்பா
முதலாம் ஆண்டு அல்ல பல யுகங்கள் கடந்தாலும்
ஏதோ வொன்றாய் உமது ஞாபகம் அப்பா
முன்னோக்கி ஓடுகின்ற நினைவுகளை நிறுத்த-அப்பா
உங்களை மறந்தால் தான் நினைப்பதற்கு
உங்கள் அன்பு முகம் தேடும் உதிரங்கள்

மலராக 29.11.1963

சருகாக 16.09.2020

குடும்பத்தினர்.

12/5, சென் ஆன்ஸ் லேன்,
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவும், தம்பியும் கொரோனாவால் சாவு

கொழும்பு, செப். 5
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அக்கா மற்றும் தம்பி ஆகியோர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் பூகொட, யகம்பே பிரதேசத்தில் நடந்துள்ளது.
43 வயதுடைய திருமணமாகாத சகோதரி ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர். 38 வயதுடைய அவருடைய சகோதரர் முச்சக்கரவண்டிச் சாரதி. இருவரும் முதல்நாள் வயிற்று வலிக்குச் சிகிச்சை பெற்றனர் என்று அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களது உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்ற போது, இருவரும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளனர்.
இதனையடுத்து சுகாதாரப் பிரிவினருக்கு குறித்த நபர் அறிவித்துள்ளார். சடலங்கள் வத்துபிடிவல ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டன. அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் குறித்த இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-4)

# மற்றொரு மருத்துவரும் கொரோனாவால் இறப்பு

கொழும்பு, செப். 5
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு, அங்கொட சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மருத்துவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆனமடுவ சுகாதார திணைக்களத்தின் மேலதிக மருத்துவ அதிகாரி மருத்துவர் வசந்த ஜெயசூர்யாவே இவ்வாறு உயிரிழந்தார் என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நீர்கொழும்பு பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சில காலம் பணியாற்றிய இவர். பின்னர் ஆனமடுவ சுகாதார திணைக்கள அலுவலகத்துக்கு இடமாற்றப்பட்டார்.
குறித்த மருத்துவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# வெளிநாட்டுக் கடன்களால் அரசுக்கு பெரும் நெருக்கடி

## ஐ.தே.க. சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப். 5**
**வெளிநாடுகளிடம் பெற்றுக்கொண்ட கடன்களால், நாட்டின் பொருளாதார நிலைமை எதிர்காலத்தில் மேலும் மோசமடையும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களுடன் சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், பங்களாதேஷிடம் பெற்றுக்கொண்ட நிதியை வட்டியுடன் திருப்பிச் செலுத்தவேண்டும். சீனாவிடம் பெற்றுக் கொண்ட கடனை, அமெரிக்க டொலரில் திருப்பிச் செலுத்த நேரிடும். எனினும் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போதுமானதல்ல. எதிர்வரும் நாள்களில் நாட்டின் பொருளாதாரம் மேலும் நெருக்கடிகளை எதிர்நோக்கும். நாட்டின் பொருளாதாரம் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.
இதனை மீளக் கட்டியெழுப்புவதற்கு பெருந்தொகையான அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது. -என்றார். (ம-4)

# போதைப்பொருள் கடத்தல்காரரான சன்ஷைன் சுத்தா சுட்டுக்கொலை

கொழும்பு, செப். 5
பிரபல போதைப்பொருள் வர்த்தகராக கருதப்படும் 'சன்ஷைன் சுத்தா' எனப்படும் அமில பிரசன்ன ஹெட்டிஹேவா துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மாத்தறை, வரக்காபிட்டிய பிரதேசத்தில் வைத்து ஹெட்டிஹேவா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். ஹெட்டிஹேவா, மாகந்துரே மதூசுக்கு மிகவும் நெருக்கமான உதவியாளராக செயற்பட்டவராவார். (எ-இ)

# மரண அறிவித்தல்

மண்ணில் 19.12.1938



விண்ணில் 04.09.2021

## திருமதி துரைஐயா நாகேஸ்வரி

**(கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளரின் தாயார்)**

யாழ் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைஐயா நாகேஸ்வரி அவர்கள் நேற்று (04.09.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சொக்கலிங்கம் நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற துரைஐயா அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ரவிச்சந்திரன், ரஞ்சிதமலர், பிரேமச்சந்திரன் (கமலா ஸ்ரோர்ஸ்), ராமச்சந்திரன், சாந்தினி, ஜெயந்தினி (லண்டன்), யாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாமுண்டேஸ்வரி, அமரர் சக்திவேல் மற்றும் விக்னேஸ்வரி, சாந்தினி, சிவராசா, சதீஸ்குமார், சிவனேந்திரன் ஆகியோரின் மாமியாரும், சந்திரகாந், சிந்துஜா, மிதுலா, அமல்ராஜ், சகிலா, நிரோஷன் (கமலா ஸ்ரோர்ஸ்), மதுஷா, மதுரந்தி, சங்கவி, வேணுஷா, பிரியங்கா, நிவேதா, சஞ்சீவன் (அமெரிக்கா), சாருஜன், கிருஷிகா, கோபிதா, மகிஷா, சந்தோஷ், ரஷிதா, நித்தியானந்தன், யுகந்தன், நிஜானி, வரோதயன், ஆகியோரின் பாசமிகு பேரத்தியும், அக்ஷயன், சபி, சயந்தினி, கிருத்திக், ரம்சிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கல்லுண்டாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
து.பிரேமச்சந்திரன் (மகன்)
(கமலா ஸ்ரோர்ஸ்)
0777 111 412

# மைத்திரியின் உரை இடையில் துண்டிப்பு

## விசாரணைக்கு கோரிக்கை



கொழும்பு, செப். 5
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவின் விசேட உரை இடைநடுவில் துண்டிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கட்சியின் ஆண்டுநிறைவு நிகழ்வை முன்னிட்டு, கடந்த 2ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன, தனது வீட்டிலிருந்தவாறு, சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக, சமூக வலைத்தளங்களில் விசேட உரையொன்றை நிகழ்த்தியிருந்தார்.
தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, பெரும்பாலான கட்சி உறுப்பினர்கள் கூட அவரது உரையைப் பார்வையிட முடியவில்லை.
ஒளிபரப்பு இடைநடுவில் நிறுத்தப்பட்டமையானது, சூழ்ச்சியா அல்லது தொழில்நுட்பக் கோளாறா என்பது குறித்து ஆராயவேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரியுள்ளனர். இனிவரும் காலங்களில் இவ்வாறான இடையூறுகள் ஏற்படாதவாறு விசாரணைகளை நடத்தி, முடிவொன்றை எடுக்குமாறு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தள்ளி விழுத்தி...

யாம்மடம் பகுதியில் பெண் ஒருவரது ஒரு பவுண் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பெண்ணும் அவரது உறவினரும் அராலி வீதியால் யாழ்ப்பாணத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்களைக் கீழே தள்ளி விழுத்திவிட்டு சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். (ஓ.20)

## சீனித் திருட்டு...

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றது. திருடர்கள் குறித்த கிளையின் கதவை உடைத்து உள்ளே சென்று நடமாடுவதை அவதானித்த அயல்வீட்டுக்காரர், சங்கக் கடையின் பணியாளர்களுக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு பணியாளர்கள் வரும்போது திருடர்கள் அங்கிருந்து புறப்பட்டனர். அதனை அவதானித்த பணியாளர்கள் திருடர்களைத் துரத்திச் சென்றனர். சாமியார் வீதியில் தப்பிச்சென்றுகொண்டிருந்த திருடர்கள், சீனி மூடைகளை வீதியில் கைவிட்டு தப்பிச் சென்றனர்.

சங்கக் கடைப் பணியாளர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். பின்னர் சீனி மூடைகள் மீண்டும் சங்கக் கடைக்கு கொண்டுசென்றனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-17)

## நல்லூர் கந்தன்...

றவுள்ளது. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக பக்தர்கள் இம்முறை திருவிழாவுக்கு அனுமதிக்கப்படவில்லை. நல்லூர் கந்தசுவாமி ஆலய யூடியூப் தளத்தில் தேர் உற்சவத்தைப் பார்க்க முடியும். (ஓ.5)

## மா விலை...

ஹெல்ல தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 12 ரூபாவால் அதிகரிப்பதாக பிறிமா நிறுவனம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

டொலரின் பெறுமதிக்கு நிகராக தமது உற்பத்தி செலவு அதிகரித்துள்ளதால், கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதிக்குமாறு கோதுமை இறக்குமதி நிறுவனங்கள் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கடந்த ஜூலை மாதம் வேண்டுகோள் விடுத்திருந்தன.

எனினும், கோதுமை மா விலையை அதிகரிப்பதற்கு எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்தது.

இந்நிலையில், கோதுமை மா விலையை 12 ரூபாவால் அதிகரிப்பதற்கு இறக்குமதி நிறுவனம் எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் ஆராய்வதாக அத்தியாவசிய சேவைகள் தொடர்பிலான ஆணையாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் செனரத் நிவுன்ஹெல்ல தெரிவித்தார். (ஓ.இ)

## காரைநகரில்...

மேற்கொள்ளப்பட்டபோது, சுகாதார மருத்துவ அதிகாரிக்கும் அவர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பு வரையில் சென்றுள்ளது.

கடந்த புதன்கிழமை காரைநகர் அல்வின் வீதியில் திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது. சுகாதார அனுமதிகளுக்குப் புறம்பாக 200பேர் அதில் பங்கேற்றுள்ளனர். அவர்களில் பலர் முகக் கவசம் அணியாமலும் கலந்து கொண்டுள்ளனர். இந்த நிலையில் காய்ச்சல் காரணமாக காரைநகர் பிரதேச மருத்துவமனைக்குச் சென்ற இருவருக்கு அன்டிஜென் சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் திருமணத்தில் பங்கேற்றவர்களை பி.சி.ஆர். சோதனைக்கு வருமாறு நேற்று அழைத்திருந்தனர். காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது.

பி.சி.ஆர். சோதனைக்கான மாதிரி பெறப்படும்போது சுகாதார மருத்துவ அதிகாரிக்கும், அங்கு வந்திருந்த ஒருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு நின்ற ஒருவர், சுகாதார மருத்துவ அதிகாரியைத் தாக்க முற்பட்டுள்ளார்.

இதனால் எஞ்சியோருக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ.5)

## படையினர்...

அரசுக் கட்சி தனது கடிதத்தில் உள்ளடக்கியதே இதற்குக் காரணம் என்று அறியமுடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் இந்த மாதம் ஆரம்பமாகின்றது. ஆணையாளருக்கு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன தவிர்ந்த ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து ஒரு கடிதத்தை நேற்று அனுப்பி வைத்துள்ளன.

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் ஒரு கடிதத்தை அனுப்பவுள்ளது. அந்தக் கடிதத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட மாட்டார்கள் என்று தெரிகின்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சி தயாரித்த ஆவணத்தில், பான்கீ மூனால் 2010 இல் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு தயாரித்த அறிக்கையில், இலங்கை இராணுவமும், விடுதலைப் புலிகளும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள், மனித உரிமை சட்டங்களை மீறியுள்ளனர். இவற்றில் சில போர்க்குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாக கருதப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது என ஆணையாளருக்கு அனுப்பும் கடிதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ5)

## ஐ.நா....

அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் (புளொட்) த.சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா மற்றும் ரெலோவின் செயலர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோரின் கையொப்பத்துடன் விரிவான அறிக்கை ஒன்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46/1 பிரேரணைக்குப் பின்னராகத் தமிழர் தாயகத்தில் இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பு, தொல்லியல் சார்ந்த ஆக்கிரமிப்பு, நினைவேந்தல்களுக்கான தடைகள், பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படையிலான கைதுகள், தடுத்து வைத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்தல், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேட வேண்டிய அவசியம் இல்லை என்ற அரசினுடைய நிலைப்பாடு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி பயணத்தின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள், கைதுகள், அண்மையில் அரசால் அறிவிக்கப்பட்ட அவசரகால சட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாய நிலைகள் என்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ஓ.26)

## 22 நாட்களுக்குள் ....

நேற்றுமுன்தினம் 145பேர் மாத்திரமே உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது அதேபோன்று 3 ஆயிரத்து 333 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் கடந்த மாதம் 12ஆம் திகதிக்குப் பின்னர் தினசரி இறப்பு 150 ஐ விடக் குறைவடையவில்லை. 22 நாள்களின் பின்னர் நேற்றுமுன்தினம் முதல் தடவையாக 150 ஐ விடக் குறைவடைந்து 145 என்று பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் உயிரிழந்தவர்களில் 68 பெண்களும், 77 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் ஆண்கள் மூவரும், பெண் ஒருவரும் என 4 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 19 ஆண்கள், 5 பெண்கள் என்று 24 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 117 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 55 ஆண்களும், 62 பெண்களும் அடங்குகின்றனர். (ஓ.5,22)

## வடக்கில் 212 ....

முன்னெடுக்கப்பட்ட அன்டிஜென் சோதனையில் 110 பேருமாக வடக்கில் 212 தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 437 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 102பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முசலி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 24 பேருக்கும்,

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், இரணைமடு விமானப் படை முகாமில் ஒருவருக்கும், பளை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், முழங்காவில் கடற்படை முகாமில் ஒருவருக்கும், பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், மாந்தை கிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3பேருக்கும், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவருக்கும், மல்லாவி ஆதார மருத்துவமனையில் 6 பேருக்கும், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 2 பேருக்கும்,

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 12பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 9 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும்,

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 8 பேருக்கும், பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், ஓமந்தை ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒருவருக்கும், மாமடுவ பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் என 102 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ.5)

## வடக்கு ....

டுவதால், அவற்றில் யாழ்ப்பாணத்திலிருந்து 3 சடலங்கள் ஹிக்குராவைக்கும், கிளிநொச்சியிலிருந்து 5 சடலங்கள் பொலனறுவைக்கும் கொண்டு செல்லப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் தொற்றால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தினசரி யாழ்ப்பாணத்தில் 5 சடலங்களும் வவுனியாவில் 7 சடலங்களும் எரியூட்டப்படுகின்றன. எனினும்; உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது.

அதனால் ரோக்கன் அடிப்படையில் மருத்துவமனைகளில் இருந்து சடலங்கள் பெறப்பட்டு மின் தகனம் செய்யப்படுகின்றன. எனினும் தேக்க நிலை காணப்படுவதால் உறவினர்களிடம் ஒப்புதல் பெற்று மாகாணத்துக்கு வெளியில் சடலங்களை அனுப்பி எரியூட்டும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரத் துறையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ.26.159)

## வடக்கில் 9பேர் ....

யாழ்ப்பாணத்தில் 5பேரும், வவுனியாவில் 4 பேருமாக 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியாவில் உயிரிழந்தவர்களில் 3பேர் வீடுகளிலேயே உயிரிழந்துள்ளனர். அவர்கள் திடீர் சுகவீனமுற்ற நிலையில் உயிரிழந்துள்ளனர். அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. ஒருவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார். வவுனியாவில் உயிரிழந்தவர்களில் ஒருவர் 32 வயது பெண்ணாவார். யாழ்ப்பாணத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 2பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 91 வயது மூதாட்டி ஒருவர் சுகவீனம் என்று மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். மற்றையவர் 77 வயது முதியவர், பருத்தித்துறை மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார். மேலும், தெல்லிப்பழை மருத்துவ மனையில் ஒருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இருவரும் உயிரிழந்துள்ளனர். (ஓ.26.110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரி20 உலகக்கிண்ணத் தொடர்

# இந்தியாவைத் தோற்கடித்து எமது பயணம் ஆரம்பிக்கும்

### பாகிஸ்தானின் தலைவர் பாபர் அசாம் நம்பிக்கை

**டுபாய், செப். 5**
**ரி20 உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியைத் தோற்கடித்து எமது வெற்றிப் பயணத்தைத் தொடங்குவோம் என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அசாம் தெரிவித்தார்.**



ரி20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன. இந்த இரு அணிகளும் இடம்பிடித்துள்ள குழுவின் முதலாவது ஆட்டமே இந்தியா - பாகிஸ்தான் ஆட்டத்துடன்தான் ஆரம்பிக்கின்றது. இந்த நிலையிலேயே தொடர் தொடர்பில் இவ்வாறு தெரிவித்தார் பாபர் அசாம்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


என்னைப் பொறுத்தவரை ரி20 உலகக் கோப்பை போட்டியில் இந்திய அணியைவிட பாகிஸ்தான் அணிதான் சற்று வலிமையாக, அதிகமான சாதக அம்சங்களுடன் இருக்கிறது என நம்புகிறேன். இந்த உலகக் கோப்பைப் போட்டியில் பாகிஸ்தான் அணியுடன் ஒப்பிடும்போது, எங்களுடன் விளையாடும் இந்திய அணிதான் அதிகமான நெருக்கடியுடனும், அழுத்தத்துடனும் இருக்கும்.

இந்தியாவைத் தோற்கடித்து எங்கள் பயணத்தைத் தொடங்குவோம். ஐக்கிய அரபு அமீரகத்தில் நடக்கும் போட்டி எப்போதும் பாகிஸ்தானுக்கு சாதகமாக இருக்கும்.

அங்கிருக்கும் ஆடுகளங்கள், மைதானம் பற்றி நன்கு தெரியும், பழகியிருக்கிறோம். எங்கள் சொந்த மைதானம் போல்தான் அதை உணர்ந்து விளையாடுவோம் என்றார். (ம)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 . 08 . 1928



மறைவு 06 . 08 . 2021

### அமரர் செல்லையா புண்ணியமூர்த்தி

தொண்டமனாறை பிறப்பிடமாகவும், கூத்தன்சீமா அளவெட்டி வடக்கை சேர்ந்தவரும், 189/1, 3/4 மகாவித்தியாலய மாவத்தை கொட்டாஞ்சேனை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல பிரசித்த நொத்தாரிசரும் பதிவாளரும், வவுனியா மாவட்ட உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற பதில் நீதவானும் ஆகிய செல்லையா புண்ணியமூர்த்தி அவர்களின் 31ஆம் நாள் நிகழ்வுகள் இன்று (05.09.2021) ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலமும் வேறு வழிகளிலும் அனுதாபம் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

குடும்பத்தினர்.

## அமெரிக்கப் பகிரங்கம் சிட்சிபாஸ் படுதோல்வி

வொஷிங்டன், செப். 5

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் படுதோல்வியடைந்து வெளியேறினார் தரப்படுத்தலில் மூன்றாம் நிலை வீரரான சிட்சிபாஸ். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மூன்றாம் சுற்று ஆட்டத்தில் கீரஸைச் சேர்ந்த சிட்சிபாஸை எதிர்த்து ஸ்பெய்னின் அல்கராஸ் மோதினார். ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் இரு அணிகளின் வீரர்களும் சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

முதலாவது செற்றை 6:4 எனக் கைப்பற்றினார் அல்கராஸ். இரண்டாவது செற் 6:3 என்ற செற் கணக்கில் சிட்சிபாஸிடம் சென்றது. மூன்றாவது செற்றை 7:6 என்ற அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் அல்கராஸ். நான்காவது செற்றை 6:0 என்று வென்று 2:2 என்றாக்கினார் சிட்சிபாஸ். இதனால் ஐந்தாவதும் இறுதியானதுமான செற்றில் வெற்றியாளரைத் தீர்மானிக்க வேண்டியநிலை ஏற்பட்டது. அந்த செற்றை அல்கராஸ் 7:6 என்ற அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து 2:3 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார் சிட்சிபாஸ். (ம)





## அமெரிக்கப் பகிரங்கம் முன்னேறினார் கெர்பர்

வொஷிங்டன். செப். 5

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் நட்சத்திர வீராங்கனையான கெர்பர். ஜேர்மனி வீராங்கனை கெர்பரை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸ் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தை 5:7, 6:2, 6:3 என்ற செற் கணக்கில் கைப்பற்றி காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார் கெர்பர். (ம)

**Personal English Classes**
யாழ் நகரில் தனி வகுப்புகள்
Spoken: பேச வைத்தல்
Grammar Grade 7 - G.C.E O/L, A/L,
பட்டதாரிகள், தொழில் புரிவோர்.
K.Ganesh B.A
0777668725

**காணி விற்பனைக்குண்டு**
நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 M தூரம்.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை. (தரகர் தேவையில்லை)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 814 7389, 077 614 7333**



## டெல்லியின் தலைவராக தொடர்வாரா ரிஷப் பண்ட்?

ஐ.பி.எல். தொடர் இன்னும் சில நாள்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடரில் டெல்லி அணியின் தலைவராக பண்ட் தொடர்வாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. முதலாவது பாதியில் டெல்லி அணியின் தலைவர் ஸ்ரேயாஸ், காயமடைந்த காரணத்தால் பண்ட் அணித் தலைவராகச் செயற்பட்டார். அவருடைய வழிநடத்தலில் டெல்லி அணி சிறப்பாகவே செயற்பட்டது. பின்னர் கொரோனா காரணமாக தொடர் இடைநடுவில் கைவிடப்பட்டு எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகின்றது. தற்போது ஸ்ரேயாஸ் உடல்நலம் பெற்றுள்ளார். எனவே பண்ட் அணித் தலைவராகத் தொடர்வாரா அல்லது ஸ்ரேயாஸ் தலைவராக நிய மிக்கப்படுவாரா என்பது தொடர்பில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05. 09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

Registered as a Newspaper

பக்கங்கள்: 16


பொருளை எடுத்துப் பதுக்கி
பொறுப்பிலா விதத்தில் அமுக்கி
தெருவினில் சனத்தை
திண்டாட விட்டவனிறை
அருளையிழந்து அழிவான்விழி பிதுக்கி!
–காரைக்கவி


மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆவணி 20 ஞாயிற்றுக்கிழமை (05.09.2021) சிகரம் : 63




# புலிகளுக்கு ஒரு நியாயம்; தலிபான்களுக்கு இன்னொரு நியாயமா?

அ.நிக்ஸன்

ஆப்கானிஸ்தானின் வெளியுறவு அமைச்சராக பதவியேற்கலாம் என்று கருதப்படும் இந்திய இராணுவ அக்கடமியின் முன்னாள் மாணவர் ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிக்ஜாய் (Sher Mohammad Abbas Stanikzai) கட்டார் தலைநகர் டோகாவில் இருந்து தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்தியா, பாகிஸ்தான் தொடர்பான தமது அமைப்பின் நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

பாகிஸ்தானுடன் கூடுதல் உறவைப் பேணி,தலிபான்கள் இந்தியா மீது தாக்குதல் நடத்தக்கூடும் என்று இந்திய ஊடகங்கள் விமர்சித்து வரும் நிலையில், எந்தவொரு நாட்டோடும் தலிபான்கள் நெருக்கமான உறவைப் பேணமாட்டார்களென ஷேர் முகமது அப்பாஸ் உறுதியளித்திருக்கிறார்.

அத்தோடு அமெரிக்காவை மையமாகக் கொண்ட நேட்டோ நாடுகளுடனும் தலிபான்கள் உறவைப் பேணுவார்களென்றும் அவர் கூறுகின்றார்.

அதேநேரம் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் மோதலுக்காக ஆப்கானிஸ்தானை பயன்படுத்தக்கூடாதென்றும் சேஷர் முகமது அப்பாஸ் வித்தியாசமான கருத்தொன்றைக் கூறுகிறார்.

சீனாவோடு உறவைப் பேணிக் கொண்டு இந்தியாவுக்குத் தலிபான்கள் தொந்தரவு கொடுக்கலாமெனவும் அல்லது அமெரிக்காவுக்கு விசுவாசமாகச் செயற்பட்டு சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடிய முறையில் தலிபான்கள் பயன்படுத்தப்படலாமெனவும் இந்திய மற்றும் மேற்கத்தைய ஊடகங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்ட விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில், எந்தவொரு நாடுகளோடும் உறவைப் பேணமாட்டோமென சேஷர் முகமது அப்பாஸ் கூறியிருக்கின்றமை தலிபான்கள் தொடர்பான கேள்விகளை முன்வைக்கின்றன.

ஆப்கானில் புதிய அரசாங்கம் அறிவிக்கப்படும் போது, அமெரிக்கா உட்பட பிராந்தியத்துடன் தொடர்புடைய அனைத்து நாடுகளும் தங்களை ஆதரிப்பார்கள் என ஷேர் முகமது அப்பாஸ் நம்புகிறார். இந்திய அரசின் உதவித் திட்டங்கள், முதலீடுகளை தலிபான்கள் வரவேற்பார்கள் எனவும், படை விலகலினால் பாதியில் விட்டுச் சென்ற அபிவிருத்தித் திட்டங்களைச் செய்து முடிக்குமாறும் சேஷர் முகமது அப்பாஸ் டில்லிக்கு அழைப்பும் விடுத்திருக்கிறார்.

இந்த நேர்காணலின் பின்னரே ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிக்ஜாயை , கட்டார் நாட்டுக்கான இந்திய தூதர் தீபக் மிட்ட டோகாவில் சந்தித்துப் பேசியிருக்கிறார் போலும். சந்திப்புக் குறித்து டோகாவில் உள்ள இந்தியத் தூதரகம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. குறிப்பாக இந்தியாவுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்கள் எந்த வகையிலும் நடைபெறக்கூடாதென ஷேர் முகமது அப்பாஸிடம் இந்தியத் தூதுவர் கேட்டிருக்கிறார்.

ஆனால் இந்தியாவில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான ஜெய்இமுகமது (JeM) தலைவர் மசூத் அசார் சமீபத்தில் ஆப்கானிஸ்தானில் தலிபான் தலைவர்களைச் சந்தித்து, ஜம்முகாஷ்மீரில் தாக்குதல்களை ஊக்குவிப்பதில் அவர்களது ஆதரவை கோரியுள்ளதாக 'சீநியூஸ் இந்தியா' என்ற செய்தித் தளம் கூறுகின்றது. தலிபான்கள் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தை இந்திய அமைச்சர்கள் பலரும் வெளியிட்டுள்ள நிலையில் இந்தச் சந்தேககத்தை வியாழக்கிழமை குறித்த செய்தித்தளம் வெளியிட்டிருக்கிறது.

"ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியதை அடுத்து, 20 ஆண்டுகளாக அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்த பக்ராம் விமானப்படைத்தளத்தை சீனா கைப்பற்ற முயற்சிக்கின்றது. சில பிரதேசங்களைச் சீனா தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, பாகிஸ்தானைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு எதிராக வலிமைபெறவும் முனைகின்றது" என ஐ.நாவுக்கானஅமெரிக்காவின் முன்னாள் தூதுவர் நிக்கி ஹேலி எச்சரிக்கையும் விடுத்துள்ளமையும் அந்தச் சந்தேகங்களுக்கு காரணமாக இருக்கலாம். ஐ.நா. வுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் நிக்கி ஹேலி, புதன்கிழமை 'பொக்ஸ்' செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இந்தத் தகவலைக் கூறியிருக்கிறார். "பயங்கரவாத எதிர்ப்பு முயற்சியை சர்வதேச மட்டத்தில் மேற்கொள்வதை அமெரிக்கா உறுதி செய்ய வேண்டும். ஏனெனில் தற்போது தலிபான்கள் பெற்றுள்ள வெற்றியால் சர்வதேசரீதியில் ஜிகாதிகளின் ஆட்சேர்ப்பு பிரசாரம் பெரியளவில் நடைபெறக்கூடிய வாய்ப்புண்டு. இதைச் சமாளிக்க தயாராக இருப்பதுடன் பாதுகாப்பாக இருப்பதையும் அமெரிக்கா உறுதி செய்ய வேண்டும்" என அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

"குறிப்பாக அமெரிக்காவின் சைபர் பாதுகாப்பு பலமாக இருக்கவேண்டும். ஏனென்றால் ரஷ்யா போன்ற நாடுகள் தொடர்ந்து அமெரிக்க இணைய இணைப்புகளை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி எடுத்து வருகின்றனர். ஆகவே சீனாவை நன்கு அவதானிக்க வேண்டும் .ஏனெனில் பக்ராம் விமானப்படைத்தளத்தை தன் வசப்படுத்துவதில் சீனா கடும் பிரயத்தனம் செய்கின்றது" என்றும் அவர் சுட்டிக் காட்டியிருக்கிறார். ஆகவே இந்தியா உள்ளிட்ட தனது கூட்டாளி நாடுகளை அமெரிக்கா பலப்படுத்த வேண்டுமெனவும் நிக்கி ஹேலி வலியுறுத்தியிருக்கிறார்.

மறுபுறத்தில் படைகளை வலிமைப்படுத்துவதோடு நில்லாமல் அமெரிக்காவின் மூலோபாயச் செயற்பாட்டிலும் சீனா கவனம் செலுத்த வேண்டுமென குளோபல் ரைம்ஸ் செய்தித் தளம் கடந்த புதன்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளது. மூலோபாய மற்றும் புவிசார் அரசியல் விளையாட்டை நடத்த அமெரிக்காவுக்குச் சீனா இடமளிக்கக் கூடாதெனவும் அந்த செய்தித்தளம் கூறுகின்றது. சீனாவுக்கு எதிராகத் தலிபான்களை பயன்படுத்த முயற்சிக்கும் அமெரிக்கா அதில் தோல்வியடையும் என்ற தொனியில் அந்த செய்தித்தளம் நம்பிக்கையும் வெளியிட்டிருக்கிறது.



இந்த நிலையில் தலிபான்களுடன் உறவை மேம்படுத்த வேண்டிய அவசியமிருப்பதாக பிரித்தானிய வெளியுறவுத்துறைச் செயலாளர் டொமினிக் ராப் கூறியுள்ளார். கட்டார் வெளியுறவு அமைச்சர் கே முகமது பின் அப்துல் ரகுமான் அல் தனியை டோகாவில் சென்ற வியாழக்கிழமை சந்தித்த பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், தலிபான்கள் அமைக்கவுள்ள புதிய அரசாங்கத்தை பிரித்தானியா ஏற்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளதாக விபரித்தார். ஆகவே ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படை விலகிய பின்ன

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வக்சினே சரணம்?

○ நிலாந்தன்

அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையே கொரோனா வைரஸ் நிலைமை மோசமடைவதற்கு காரணம். கொரோனாவுக்கு எதிரான போராட்டத்துக்கு மருத்துவ நிபுணர்கள் தலைமை தாங்கவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான எரான் விக்கிரமரட்ண. எனது கடந்த வாரக் கட்டுரையில் குவிமையப்படுத்திய விடயமும் இதுதான். "இலங்கை ஒரு சிறிய தீவு எங்களால் பாதிப்பைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். அரசாங்கம் உணர்வுபூர்வமாக இருக்காததால் மருத்துவ நிபுணர்கள் தலைமை வகிக்க முடியாமல் போய்விட்டது" எனவும் எரான் தெரிவித்துள்ளார்.


ஆனால் அரசாங்கம் வைரஸுக்கு எதிரான போராட்டமும் உட்பட நாட்டின் எல்லாத் துறைகளையும் இராணுவமயப்படுத்தி வருகிறது. பைஸர் வக்சினை கையாளும் பொறுப்பு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பைஸர் தடுப்பூசியை கையாள்வதில் சிவில் தரப்புக்கள் போதிய அளவுக்கு வினைத்திறனுடன் நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. கொழும்பு லேடி ரிஜ்வே மருத்துவமனையில் மிக முக்கியமான பிரமுகர்களுக்கு பைஸர் தடுப்பூசிகள் இரகசியமாக விநியோகிக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு எழுந்தது. தமிழ்ப்பகுதிகளில் மன்னாரில் பைஸர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. தடுப்பூசிகளைப் பெறுவதற்காக யாழ்ப்பாணம் , புத்தளம்,சிலாபம் போன்ற இடங்களிலிருந்து பலர் மன்னாருக்கு சென்றதாகத் தெரிய வருகிறது. குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு அடிக்கடி பயணம் செய்வோரும் சீன ,இந்தியத் தடுப்பூசிகளை நம்பாதவர்களும் பைஸர் தடுப்பூசிகளை பெறுவதற்காக மன்னாருக்கு சென்று அங்கே பொய்யான ஆவணங்களைக் கையளித்து தடுப்பூசிகளைப் பெற்றிருப்பதாக குற்றம்சாட்டப்படுகிறது.

இவ்வாறான விமர்சனங்களின் விளைவாக அரசாங்கம் பைஸர் தடுப்பூசியை இராணுவத்திடம் கொடுத்து விட்டது. அதாவது ஒரு குறிப்பிட்ட வகை தடுப்பூசியை இனி படைத்தரப்பிடம் மட்டும் தான் பெற்றுக்கொள்ளலாம். மேற்கத்திய நாடுகள் சீனத் தயாரிப்பு தடுப்பூசிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே மேற்கத்திய தயாரிப்பான பைஸர், மொடோர்னா போன்ற தடுப்பூசிகளை பெற்றால்தான் மேற்கத்திய நாடுகளுக்கு பயணம் செய்யலாம். இதனால் அடிக்கடி மேற்கு நாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் பைஸர் தடுப்பூசியை விரும்புகிறார்கள். இவ்வாறானவர்கள் இனிமேல் இராணுவத்திடம் போய்த் தான் அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

"பைஸர் தடுப்பூசியை இராணுவத்துக்கு மாத்திரம் கொடுக்கும் தீர்மானத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இராணுவத்துக்குத் தடுப்பூசியை வழங்குவதானால், போரின் போது சுகாதாரத்துறைக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்கவேண்டும்" என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்திய நிபுணர் நவீன் டி சொய்சா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதாரத்துறையினரும் மருத்துவத்துறையும் போதிய அளவுக்கு வினைத்திறனோடு முன்னெடுக்கவில்லை என்று கூறி அதனைப் படைத்தரப்பு பொறுப்பேற்றது. இதன் மூலம் மருத்துவ ஊழியர்களால் மருத்துவ சுகாதார நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட வேண்டிய தடுப்பூசி போடும் நடவடிக்கை ஒரு இராணுவ நடவடிக்கைபோல முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அடுத்தமாதம் நடுப்பகுதிக்குள் முப்பது வயதுக்கும் மேலான அனைவருக்கும் தடுப்பூசி போட்டு முடிக்கப்பட்டுவிடும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதற்காக இரவு பகலாக தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை படைத்தரப்பு ஓய்வு ஒழிச்சலின்றி முன்னெடுக்கிறது. எனவே தடுப்பூசிபோடும் நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய தவறுகளுக்கு படைத்தரப்பும் அரசாங்கமும் தான் பொறுப்பே தவிர சுகாதாரப்பிரிவினர் அல்லர் என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.




இவ்வாறாக கடந்த 20 மாதங்களுக்கு மேலான இராணுவ மயமாக்கலின் அடுத்தகட்டமாக அரசாங்கம் கடந்த வாரம் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய அத்தியாவசிய உணவு விநியோகத்துடன் சம்பந்தப்பட்ட அவசரகால விதிமுறைகளைப் பிரகடனப்படுத்தியுள்ளது. சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை நிலையை இயல்புநிலையில் பேணுவதற்குத் தேவையான நெல், அரிசி, சீனி உள்ளிட்ட ஏனைய நுகர்வுப்பொருட்களை விநியோகிப்பதை ஒருங்கிணைப்பதற்காக, அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகமாக, மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி. நிவுன் ஹெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.




> தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதாரத்துறையினரும் மருத்துவத்துறையும் போதிய அளவுக்கு வினைத்திறனோடு முன்னெடுக்கவில்லை என்று கூறி அதனைப் படைத்தரப்பு பொறுப்பேற்றது. இதன் மூலம் மருத்துவ ஊழியர்களால் மருத்துவ சுகாதார நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட வேண்டிய தடுப்பூசி போடும் நடவடிக்கை ஒரு இராணுவ நடவடிக்கைபோல முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தலாம் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. அரசாங்கம் அறிவித்திருக்கும் முழுமையற்ற சமூக முடக்கம் காரணமாக விலைகள் மேலும் அதிகரிக்கின்றன.

அரசாங்கம் இதற்கு முன்னரும் சில பொருள்களுக்கு விலைகளை நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அவ்வாறு விலைகளை நிர்ண யிப்பதன் மூலம் வணிகர்களை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதே கடந்தகால அனுபவமாகக் காணப்படுகிறது. இம்முறையும் அறிவிக்கப்பட்டிருக்கும் சமூக முடக்கமானது சமூகத்தை முழுமையாக முடக்கவில்லை.

"மகாநாயக்க தேரர்களின் வேண்டுகோளை நிராகரிக்க முடியாத காரணத்தால் தான் நாடு முடக்கப்பட்டது. அந்த நேரத்தில் அரசாங்கம் நாட்டை முடக்குவதற்கு தீர்மானித்திருக்கவில்லை" என்று கூறியிருக்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த. அப்படியென்றால் அரசாங்கம் துறைசார் நிபுணர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொருள். அதாவது துறைசார் நிபுணர்களின் நோக்குநிலையிலிருந்து இந்த சமூக முடக்கம் அறிவிக்கப்படவில்லை.

அரசாங்கத்தின் பொருளாதார நோக்கு நிலையிலிருந்தே இந்த சமூகமுடக்கம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அரசாங்கம் அண்மைய மாதங்களில் அறிவித்த சமூகமுடக்கங்களுக்கு வெவ்வேறு பெயர்களை வைத்தது. சில மாதங்களுக்கு முன் அறிவிக்கப்பட்ட முடக்கம் , பயணக்கட்டுப்பாடு என்று அழைக்கப்பட்டது. இப்பொழுது அறிவிக்கப்பட்டிருப்பது தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்று அழைக்கப்படுகிறது. மேலும் 'ஹைபிரிட் சமூக முடக்கம் 'என்ற ஒரு பெயரையும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தார். அதாவது இது முழுமையான அர்த்தத்தில் சமூக முடக்கம் அல்ல என்று பொருள். மருத்துவ நோக்கு நிலையிலிருந்து இது அறிவிக்கப்படவில்லை. பொருளாதார நோக்கு நிலையிலிருந்தே இது அறிவிக்கப்பட்டிருக்கிறது. சமூக முடக்ககாலத்தில் அத்தியாவசிய சேவைகள் என்ற பட்டியலின் கீழ் ஒரு தொகுதி தொழிற்துறைகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இதை வசதியாகப் பயன்படுத்தி சனங்கள் வீட்டுக்கு வெளியே வருகிறார்கள். நகரங்களின் மையங்களில் தான் சனநடமாட்டம் குறைவாகஇருக்கிறது. புறநகர் பகுதிகளிலும் கிராமப்புறங்களிலும் ஜனங்கள் வழமைபோல நடமாடுகிறார்கள். சந்தைகள் மூடப்பட்டதால் தற்காலிகச் சந்தைகள் எல்லாக் கிராமங்களிலும் திறக்கப்பட்டுவிட்டன.

இந்தச்சந்தைகளில் பொருள்களின் விலைகள் வழமையைவிட அதிகமாகக் காணப்படுகின்றன. உதாரணமாக திருநெல்வேலிச் சந்தையில் இருந்து கிட்டத்தட்ட ஒரு மைல் தூரத்தில் தெருவோரங்களிலும் உள்வீதிகளிலும் திறக்கப்பட்டிருக்கும் சந்தைகளில் பொருள்களின் விலை வழமையைவிட அதிகமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இது நல்லூர் திருவிழாக்காலம். இந்தக்காலகட்டத்தில் மரக்கறி விலை பொதுவாக கீழே வந்துவிடும். ஆனால் இம்முறை கோயிலும் பூட்டு. சந்தையும் பூட்டு. ஆனால் விலைகளோ உச்சத்தில். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வைரஸ் தொற்றிவிடும் என்ற அச்சத்தோடு வீட்டுக்கு வெளியேவரும் சனங்கள் ஒருபுறம் வைரஸை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னொருபுறம் விலையேற்றத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அனர்த்த காலத்தை தமக்கு வசதியாக பயன்படுத்தி வர்த்தகர்கள் உழைக்கத் தொடங்கிவிட்டார்கள். சில பொருள்கள் பதுக்கப்பட்டதற்கும் பெருமளவுக்கு வணிகர்களே காரணம். எதிர்காலத்தில் குறிப்பிட்ட பொருள்களின் விலைகள் உயரலாம் என்று ஊகத்தின் அடிப்படையில் வணிகர்கள் பொருள்களை பதுக்குகிறார்கள்.

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரழிவின் பரவுகை

ந.பரமேஸ்வரன்

தலிபான்களின் மீள்வருகை முழு உலகிற்கும் அச்சுறுத்தல் என்றுதான் சொல்ல வேண்டும். தலிபான்கள் ஆப்கானிஸ்தானை இஸ்லாமிய அமீரக ஆப்கானிஸ்தான் ("Islamic Emirate of Afghanistan") என பிரகடனம் செய்துள்ளனர். அமீரகம் (Emirate) என்றால் முஸ்லிம் அரசர்களின் நாடு என்று பொருள். தலிபான்களின் மீள்வருகையால் பயங்கரவாதிகளின் பாதுகாப்பான துறைமுகமாக ஆப்கானிஸ்தான் மாறக்கூடும் எனவும் இஸ்லாமியப் பயங்கரவாதிகளின் உற்பத்தி ஸ்தானமாக ஆப்கனிஸ்தான் மாறும் எனவும் மேற்குலக இராஜதந்திரிகள் எச்சரித்துள்ளனர். தற்போது உள்ள நவீன தொலைத்தொடர்பு வசதிகள் ஊடாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் ஆப்கானிஸ்தானிலிருந்து இஸ்லாமியத்தீவிரவாதம்பரப்பப்படும் அபாயம் உள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க பாதுகாப்புச் செயலர் லொயிட் ஒஸ்டின் இன்னும் இரண்டு வருடங்களில் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களான அல்கெய்தா, ஐ.எஸ், தலிபான் என்பன ஒன்றிணைந்து அமெரிக்காவுக்கு எதிராகச் சதி செய்யக்கூடும் என அமெரிக்க செனட்டர்களிடம் கூறி யுள்ளார்.

"ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மீண்டும் தலையிட வேண்டிவரும்; அங்குள்ள பெண்களின் உரிமைகளையோ மனித உரிமைகளையோ பாதுகாப்பதற்காக அல்ல இஸ்லாமியப் பயங்கரவாதிகளின் ஒன்றிணைவைத் தடுப்பதற்காக "என கிங்ஸ் கல்லூரி இராணுவ ஆய்வாளர் பீட்டர் நியூமன் கூறியுள்ளார். தங்களது நோக்கம் தமது நாட்டில் இஸ்லாமிய இராச்சியத்தை ஸ்தாபிப்பதேயன்றி தாங்கள் வேறெந்த நாட்டையும் ஆக்கிரமிக்கப்போவதில்லையென தலிபான்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியம் என இராணுவ ஆய்வாளர்களும் மேற்குலக இராஜதந் திரிகளும் கௌரவிக்கப்படுகின்றனர்.

இவர்களது கூற்றை நிரூபிப்பதுபோல் கடந்த 26 ஆம்திகதி காபூல் விமான நிலையத்தில் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடுவதற்காக காத்திருந்த ஆப்கான் பிரஜைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ.எஸ். உரிமை கோரியுள்ள விடயத்தைச் சொல்லலாம். ஆப்கானிஸ்தானை உலகம் தனிமைப்படுத்தக்கூடாது அவ்வாறு தனிமைப்படுத்தினால் அது உலகத்துக்கு பெரும் அனர்த்தமாக மாறும் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் தெரிவித்துள்ளார். அதேபோன்று தலிபான்களின் மீள்பிரவேசத்தை சீனா வரவேற்றுள்ளது இது 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற பழமொழியை நினைவுபடுத்துவதாக உள்ளதாக சர்வதேச ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சீனாவைப் பொறுத்தமட்டில் சீனாவின் பட்டுப்பாதை திட்டத்துக்கு ஆப்கானிஸ்தான் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது . அத்துடன் ஆப்கானிஸ்தானின் வளங்களை சூறையாடுவதற்கும் சீனாவுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்தக் கண்ணோட்டத்திலேயே சீனா தலிபான்களின் வருகையைப் பார்க்கிறது. ஆப்கானிஸ்தான் விடயத்தில் சீனாவும் ரஷ்யாவும் ஒன்றிணையக் கூடும் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. ஆப்கானிஸ்தானை கட்டியெழுப்ப உலகம் முன்வர வேண்டும் என ரஷ்யாவும் கோரிக்கை விடுத்துள்ளது. தலிபான்களுக்கு ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் வைத்து ஈரான் ஆயுத உதவிகளைச் செய்து வருகிறது. பாகிஸ்தானும் தலிபான்களுக்கு ஆதரவளித்து வருகிறது. "தலிபான்களின் வெற்றி இஸ்லாத்தின் வெற்றி " என பங்களாதேஷிகள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.





ஆப்கானிஸ்தானில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதையடுத்து இந்தியாவில் வாழ்ந்து வரும் ஆப்கானிஸ்தான் பெண்மணி ஒருவருக்கு மரணதண்டனை விதித்துள்ளனர் தலிபான்கள். ஹயத் என்ற அந்த ஆப்கான் பெண்மணி தற்போது டெல்லியில் வசித்துவருகிறார். இவரது கணவர் ஒரு தலிபான் உறுப்பினர். நான்கு பெண் பிள்ளைகளில் இரண்டு பேரை கணவர் தலிபான்களுக்கு விற்றுவிட்டார். ஏனைய இரண்டு பெண்பிள்ளைகளுடன் ஹயத் டெல்லியில் ஜிம் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகிறார் இவரது தந்தை தற்போது ஈராக்கில் வசித்து வருகிறார்.

தந்தைக்கு தலிபான்கள் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ள தால் ஹயத்தை ஆப்கானுக்கு திரும்பிச் செல்லுமாறு தந்தை கூறியுள்ளார். ஆனால் " நான் ஒருபோதும் ஆப்கானுக்கு திரும்பிச் செல்லமாட்டேன் :எனது இரண்டுபெண்பிள்ளைகளும் என்ன ஆனார்களோ தெரியாது .

நான் தற்போது இந்தியாவில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்துள்ளேன். அகதி அட்டை கிடைத்ததும் நான் இந்தியாவிலேயே தொடர்ந்து வாழ விரும்புகிறேன் "என அவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் முதலாவது முஸ்லிம் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினரும் பெண் உறுப்பினருமான அனார்கலி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இவர் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற முன்னர் தனது தாய்நாட்டு மண்ணை எடுத்துக் கொண்டே விமானம் ஏறியுள்ளார். தான் தொடர்ந்தும் ஆப்கான் பெண்களின் உரிமைகளுக்காக ஆப்கானிஸ்தானுக்கு வெளியே இருந்து போராடப் போவதாக தெரிவித்துள்ளார்.

சீக்கிய குருவான ஸ்ரீ குருதெக்பகதூரின் 400 ஆவது பிறந்ததின நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இந்தியாவுக்கு (குருத்துவரத்திற்கு)விஜயம் மேற்கொள்ள முனைந்த 140 இந்துக்களையும் ,சீக்கியர்களையும் தலிபான்கள் தடுத்து நிறுத்தி யுள்ளனர். தாங்கள் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் தலிபான்கள் தங்களைப் போக அனுமதிக்கவில்லை என இந்த யாத்திரை ஏற்பாட்டாளரான பத்ரப்சிங் தெரிவித்துள்ளார். இவர் ஆப்கானை பூர்வீகமாக கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

25 இந்திய ஐ.எஸ்.தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானுக்குள் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து இந்தியா தனது 43 விமான நிலையங்கள், துறைமுகங்கள், புகையிரத நிலையங்கள் யாவற்றிலும் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் மெஹபூதா "ஆப்கானிஸ்தானில் என்ன நடக்கிறது என்பதை பிரதமர் நரேந்திரமோடி புரிந்து கொள்ளவேண்டும்; ஜம்மு - காஷ்மீர் பிரதேசத்துக்கு உரிய அதிகாரங்களை திரும்ப வழங்க வேண்டும் "என எச்சரித்துள்ளார். அதேவேளை , ஆதிசங்கரர் ஸ்தாபித்த நான்கு பீடங்களில் ஒன்றானதும் காஷ்மீர சைவம் தோற்றம் பெற்ற பிரதேசமுமான காஷ்மீரில் அமர்நாத் யாத்திரை செல்லும் பக்தர்கள் இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கொல்லப்படுகின்றனர்.

தமிழ்நாட்டு முஸ்லிம் ஒருவரும் தலிபான்களின் மீள்பிரவேசத்தை வரவேற்று முகநூலில் பதிவிட்டுள்ளார். மொத்தத்தில் தலிபான்களின் மீள்பிரவேசத்தை இஸ்லாமிய சமூகம் வரவேற்கிறது என்பதில் ஐயமில்லை. கட்டார், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகள் விரைவில் தலிபான்களை அங்கீகரிக்கக் கூடும். தலிபான்களின் மீள்எழுச்சி இலங்கைக்கும் அச்சுறுத்தலாக அமையலாம்.

இஸ்லாமிய ஊடுருவலின் பின்னரே ஆப்கானிஸ்தானில் இஸ்லாமிய அடிப்படைவாதம் தோற்றம் பெற்றது. அலெக்சாண்டரின் ஆட்சியில் கிரேக்க- பௌத்த கலாசார நிலையமாக ஆப்கானிஸ்தான் விளங்கியது. அதற்கு முன்னர் இந்து பௌத்த கலாசாரமே ஆப்கானிஸ்தானில் காணப்பட்டது. ஆப்கானிஸ்தானுக்குள் இஸ்லாமிய ஊடுருவல் இடம் பெறாவிட்டால் இலங்கை, நேபாளம், போன்ற தெற்காசிய நாடுகளைப்போல் ஆப்கானிஸ்தானும் இந்து பௌத்த கலாசாரத்தின் குறியீடாக விளங்கியிருக்கும்.



ஆப்கானிஸ்தானில் மீண்டும் பன்மைத்துவ கலாசாரத்தை உருவாக்க சர்வதேசத்தால் முடியுமா? நிச்சயமாக முடியாது. ஆப்கானிஸ்தானிலிருந்து புற்றுநோய் போல இஸ்லாமிய அடிப்படைவாதம் ஏனைய நாடுகளுக்கு பரவாதிருப்பதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ளவேண்டும். இல்லாவிடின் பேரழிவொன்றை உலகம் சந்திப்பதை எவராலும் தடுக்கமுடியாமல் போய்விடும்.


நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிக்கு இரையான குடும்பம்!



மயூ

இந்தியாவின் ஹரியானா மாநிலம். ஜய் நகரில் உள்ள ஒரு வீடு. ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி.

வழமையாக சத்தமும் சந்தடியுமாக சந்தோசத்தில் திளைக்கும் அந்த வீடு அன்று அமைதியாக இருந்தது. வழமைக்கு மாறான அந்த அமைதி. அக்கம் பக்கத்தாருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒருவர் அதை ஆராய ஆரம்பித்த் சிறிது நேரத்தில் அந்த இடமே பரபரப்பானது.

அந்த வீட்டில் இருந்த பிரதீப் மாலிக், அவரது மனைவி சந்தேஷ் பப்ளி, இவர்களது மகள் நேகா, பப்ளியின் தாய் ரோஷினி தேவி என நால்வரும் வீட்டுக்குள் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அதைப் பார்த்த அயலவர்கள் அலறியடித்துக்கொண்டு பொலிஸாருக்குத் தகவல் கொடுக்க ஓடினார்கள்.

பொலிஸார் அந்த இடத்துக்கு வந்து விசாரணைகளை ஆரம்பித்தபோது 17 வயதான நேகாவுக்கு உயிர் இருப்பதை அறிந்து கொண்டனர். அவள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள். ஏனைய மூவரும் ஏற்கனவே இறந்திருந்தனர்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸாருக்கு ஆரம்பமே பெரும் தலையிடியாக இருந்தது. வீட்டில் இருந்த அனைவரும் துப்பாக்கியால் சுடப்பட்டிருந்தனர். ஆனால் அக்கம் பக்கத்தில் எவருக்கும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்கவில்லை. அனைவருக்கும் இது பெரும் புதிராகவே இருந்தது.

45 வயதான பிரதீப் மாலிக் ரோத்தக் நகரில் காணிகள் வாங்கி விற்பர். அவரது மனைவி சந்தேஷ் பப்ளிக்கு வயது 40. அவர் வீட்டைக் கவனித்து வந்தார். இவர்களின் இளைய மகள்தான் நேகா. அவளுக்கு 17 வயது. இவர்களுடன் பப்ளியின் தாய் ரோஷினி தேவியும் ஒன்றாக வசித்தார். பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இவர்களுக்கு எதிரிகள் என்று எவரையும் இனங்காண முடியவில்லை. இதற்கிடையே மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நேகாவும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துவிட, இரு தனிப்படை பொலிஸ் குழுக்கள் களத்தில் இறக்கி விடப்பட்டன.

எந்தத் தடயமும் கிடைக்காது திணறிக் கொண்டிருந்த பொலிஸாருக்கு அப்போதுதான் ஒரு தகவல் கிடைத்தது. பிரதீப் மாலிக்குக்கு அபிஷேக் என்றொரு ஒரு மகன் இருக்கிறார் என்பதும், அவர் குடும்பத்தினருடனான முரண்பாட்டு தனியே வசிக்கிறார் என்பதுதான் அந்தத் தகவல்.

கல்லூரியில் கற்றுவரும் அபிஷேக் குடும்பத்தினரைப் பிரிந்து விடுதியில் தங்கியிருந்தார். அபிஷேக்கிடம் விசாரணைகள் மேற்கொண்ட பொலிஸாருக்கு முதலில் எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. ஆனால் அபிஷேக்கிடம் ஒரு தடுமாற்றம் இருப்பதை பொலிஸார் அவதானித்திருந்தனர்.

மறுபுறத்தில் பொலிஸார் அபிஷேக்குக்கும், குடும்பத்தினருக்கும் இடையிலான பிரச்சினையை அலச ஆரம்பித்தனர். தந்தையின் தொழில் தொடர்பான முரண்பாடு முற்றி அவர்களிடையே பெரும் பிணக்கு ஏற்பட்டிருந்தது பொலிஸாருக்குத் தெரிந்தது. ஆனால் அந்தப் பிரச்சினை கொலையளவுக்குச் சென்றிருக்குமா என்பதும் சந்தேகமாகவே இருந்தது. அந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்புக் கமராக்களின் பதிவுகள் அனைத்தும் ஆராயப்பட்டன. அதைப்போன்று அபிஷேக் தங்கியிருந்த விடுதிக்கு அண்மையாகவுள்ள பாதுகாப்புக் கமராப் பதிவுகளும் ஆராயப்பட்டன. அவற்றில் பதிவாகியிருந்த அபிஷேக்கின் நடமாட்டங்கள் அசாதாரணமாக இருக்க, அபிஷேக்கைச் சுற்றி வட்டமிட்டார்கள் பொலிஸார்.

அபிஷேக்கிடம் தொடர்ச்சியாகப் பல பொலிஸ் குழுக்கள் விசாரணையை ஆரம்பித்தன. முதலில் ஒரே பல்லவியைப் பாடி வந்த அபிஷேக், மெல்ல மெல்ல ஒவ்வொரு பொலிஸ் குழுக்களிடம் ஒவ்வொன்றை உளர ஆரம்பிக்க, ஒரு கட்டத்தில் பொலிஸார் அபிஷேக்தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்ற உறுதியான முடிவுக்கு வந்தனர். அதன்பின்னரான விசாரணைகளைத் தாங்க முடியாத அபிஷேக் உண்மையை ஒப்புக் கொண்டு விட்டான்.

தந்தையின் தொழில் விடயங்களில் இருந்த முரண்பாட்டால், குடும்பத்தினரை விட்டுப் பிரிந்த அபிஷேக், அதன்பின்னரும் குடும்பத்தினருட்ன் அடிக்கடி முரண்பட்டுக் கொண்டு இருந்துள்ளான். அண்மையில் அவன் குடும்பத்தினரிடம் 5 லட்சம் ரூபா கேட்டுள்ளான். அவன் இவ்வாறு பல முறை பணம் வாங்கியிருந்ததால் குடும்பத்தினர் பணம் கொடுக்க மறுத்திருக்கின்றனர்

குடும்பத்தினர் மீதுள்ள ஆத்திரமேலீட்டால் வீட்டில் இருந்தவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தேன் என்று தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளான் அபிஷேக். ஆனாலும் பொலிஸாருக்கு இன்னும் பல விடயங்களில் தெளிவின்மை இருக்கின்றது.

இந்தக் கொலைகளில் அபிஷேக் தவிர வேறு பலருக்கும் தொடர்பு இருக்கின்றது என்று நம்புகின்றோம் எனக் கூறுகிறார் விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸ் அதிகாரி.

துப்பாக்கிச் சத்தம் கேட்கவில்லை என்று அக்கம் பக்கத்தார் கூறுகின்றனர். ஆனால் அபிஷேக் அது பற்றி தெளிவாக எதுவும் கூறவில்லை. இறந்தவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டே இறந்திருக்கிறார்கள். அதனால் வேறு பலரும் இதில் தொடர்புபட்டிருக்கலாம் என்று அந்த அதிகாரி கூறுகிறார்.

விசாரணைகளைத் தீவிரப்படுத்தியிருக்கிறோம். இந்தக் கொலையுடன் தொடர்புடைய எவரும் தப்பிவிட முடியாது என்றும் அந்த அதிகாரி உறுதியாகத் தெரிவிக்கிறார்.

இந்தக் கொலைச் சம்பவம்இந்தியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. தனது குடும்பத்தினரைக் கல்லூரியில் கற்கும் 20 வயது இளைஞர் ஒருவர் கொடூரமாகக் கொன்றிருப்பது நினைத்தும் பார்க்க முடியாது.

இன்றைய கால இளைஞர்கள் தங்கள் மனவெழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக மாறியுள்ளமையே சமூகத்தில் பல வன்முறைச் சம்பவங்களுக்குக் காரணமாகியிருக்கின்றது. இந்தியா மட்டுமல்ல, இலங்கையில், யாழ்ப்பாணத்தில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கும் இதுவே காரணம். இளையோர்களின் மனமாற்றத்துக்கான காரணத்தைத் தேடி, அதைக் களையாதவிடத்து பெரும் விபரீதங்கள் ஏற்படும் என்பதற்கு இந்தக் கொலைச் சம்பவமும் ஓர் உதாரணம்.

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

# வக்சினே...

இது சாதாரண ஜனங்களுக்கு சமூக முடக்கத்தை வேதனை மிகுந்த ஒன்றாக மாற்றிவிட்டது. இப்படிப்பட்ட சூழலில்தான் அரசாங்கம் அத்தியாவசிய பொருள்களுக்கு என்று ஒரு மேஜர் ஜெனரலை பொறுப்பாக நியமித்திருக்கிறது. எனவே தொகுத்துப் பார்த்தால் தடுப்பூசிக்கும் இராணுவம்தான் பொறுப்பு. அத்தியாவசியப் பொருள்களுக்கும் இராணுவம் தான் பொறுப்பு. அரசாங்கம் நம்புகின்றது வேகமாக தடுப்பூசியை போடுவதன் மூலம் நோய்பரவும் வேகத்தையும் இறப்பு விகிதத்தையும் குறைக்கலாம் என்று.

இந்த இலக்கை முன்வைத்து தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் படையினரிடம் தரப்பட்டிருக்கின்றன. அடுத்த மாதம் நடுப்பகுதியளவுக்குள் நாட்டிலுள்ள முப்பது வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டுவிடும் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துவிட்டது. 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிபோடும் திட்டத்தின்படி அரசாங்கம் கிட்டத்தட்ட அறுபது வீதத்துக்கு மேல்முன்னேறி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னரே பாடசாலைகளையும் அலுவலகங்களையும் முழுமையாகத் திறக்கலாம் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது.

இது விடயத்தில் சில மேற்கத்திய நாடுகளின் முன்னுதாரணத்தை பின்பற்றி தடுப்பூசிகளை வேகமாக போட்டு, முடித்தால் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று அரசாங்கம் நம்புகின்றது. சீனாவைப் போலவே வக்சினேற்றும் நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கமும் சாதனை படைக்க முயற்சிக்கிறது

ஆனால் தடுப்பூசி போடுவதற்கான தேசியக் கொள்கையின்படி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போட்டு முடிக்காமல் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி போடுவது என்று அரசாங்கம் கொள்கையை மாற்றியது என்றும் இது தொடர்பில் சுகாதாரப் பிரிவுடன் அரசாங்கம் கலந்தாலோசிக்கவில்லை என்றும் ஜே.வி.பி. குற்றம்சாட்டுகிறது. இவ்வாறு திட்டத்தை மாற்றியதால் தான் அதிகளவு முதியோர் அண்மைக்காலங்களில் இறந்தார்கள் என்றும் அந்தக்கட்சிகூறுகிறது. ஓகஸ்ட் மாதம் மொத்தம் 4850 பேர் கொவிட்



தொற்றினால் இறந்திருக்கிறார்கள் அவர்களின் 3000 பேர் தடுப்பூசி போடாத 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களே என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது. முதியோரை அதாவது ஓய்வூதியர்களைச் சாகவிட்டால் அதனால் அரசாங்கத்துக்கு இலாபமுண்டு. ஏனென்றால் சேமிப்பில் உள்ள ஓய்வூதியம் அரசாங்கத்துக்கு கிடைக்கு.ம் அதேநேரம் இளவயதினரை பாதுகாத்தால் அதனாலும் இலாபம் உண்டு. ஏனென்றால் அவர்களுடைய உழைப்பால் வருமானம் கிடைக்கும். எனவே தடுப்பூசிக் கொள்கையை அரசாங்கம் திட்டமிட்டே மாற்றியிருக்கலாம் என்று ஓர் அரசு ஊழியர் கூறினார்.

வைரஸ் புதிய திரிபுகளை அடையும் பொழுது தடுப்பூசி மட்டும் ஒரு தீர்வு அல்ல என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்."தடுப்பூசிகளை மாத்திரம் நம்பியிருப்பதால் கொள்கை வகுப்பாளர்களும் பொதுமக்களும் பெருந்தொற்றை தடுப்பதற்குத் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறுகின்றனர்" என்று கொழும்பு பல்கலைகழக பேராசிரியர் மனுஜ் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

" தடுப்பூசி செலுத்திக்கொள்வது மிகவும் அவசியமானது. அது உயிரிழப்புகளை குறைத்து நோயின் தீவிரத்தன்மையைக் குறைக்கின்றது. ஆனால் நீங்கள் பாதிக்கப்படுவதையோ அல்லது ஏனையவர்களுக்கு நோய் தொற்றச் செய்வதையோ தடுப்பூசிகள் தடுக்காது. எந்தவொரு வைரஸையும் சமாளிப்பதற்கு சமூகத்தின் நோய் எதிர்ப்புசக்தியை அதிகரிப்பது அவசியம். கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் தடுப்பூசிகள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. ஆனால் அவை மாத்திரமே தீர்வல்ல. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு தடுப்பூசி மாத்திரம் போதுமானது என நினைத்தால் நாங்கள் ஏனைய முக்கியமான நடவடிக்கைகளை முன்னெடுக்க மாட்டோம், மக்கள் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து அவர்களுக்கு நாங்கள் அறிவூட்டமாட்டோம்" என பேராசிரியர் மனுஜ் வீரசிங்க தெரிவித்துள்ளார். மருத்துவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளை பெருமளவுக்கு புறக்கணித்துவிட்டு ஆகக்கூடியபட்சம் தடுப்பூசியைப் போடுவதன் மூலம் நிலைமையைக் கட்டுப்படுத்தலாம் என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. நாடு முழுவதும் தடுப்பூசிபோட்டு முடிக்கப்படுவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இழப்புகளைத் தாங்கினால் சரி என்று அரசாங்கம் சிந்திக்கின்றது. இது விடயத்தில் அரசாங்கம் திட்டமிடுவது போல நாடு முழுவதும் தடுப்பூசி போடப்பட்ட பின் நிலைமை கட்டுக்குள் வருமா? வைரஸ் வைக்கும் சோதனையில் அரசாங்கம் சித்தி பெறுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

1505-1948 வரை

### கப்டன் மேஜர் (Captain Major)

யாழ்ப்பாண பட்டணத்தின் அதி உயர்பதவியாக (Chief Executive Officer) கப்டன் மேஜர் என்ற பதவி விளங்கியது. கப்டன் மேஜருக்கு சுயமாக முடிவெடுக்கும் அதிகாரம் இருந்தது. கப்டன் மேஜருக்கு 300 மிலரிஸ் 30 ரிஸ் சம்பளமாக வழங்கப்பட்டது. காலாண்டுக்கொரு முறை இந்தச் சம்பளம் வழங்கப்பட்டது.

கப்டன் மேஜரின் பாதுகாப்புக்கென நான்கு ஆராய்ச்சிகளின் கீழ் 80 உள்ளூர் வீரர்கள்(lascarines) நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் வெளியூரைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தவர்கள் நியமிக்கப்படவில்லை. யாழ்பாணத்தவர்களை நியமித்தால் அவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக சதி செய்யக்கூடும் என்ற அச்சம் காரணமாகவே ,யாழ்ப்பாணத்தவர்களை நியமிக்காமல் வெளியூர்ரைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பு வீரர்களாக்கப்பட்டனர். உள்ளூர் வீரர்களுக்கு மாதமொன்றுக்கு ஒரு சேர்பிம் (Xerphim) சம்பளமாக வழங்கப்பட்டது. யானைகளை வேட்டையாடுபவர்களிடமிருந்து யானைகளைப் பாதுகாப்பதும் இவர்களின் கடமையாக இருந்தது. இரு உள்ளூர் மெய்ப்பாதுகாவலர்கள் (lascarines) மூன்று பறை அறிவிப்பவர்கள், ஆறு பொதி சுமப்போர் ஆகியோர் கப்டன் மேஜரின் ஊழியர்களாக அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக மாதமொன்றுக்கு 99 சேர்பிம் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதைவிட கப்டன் மேஜரின் கணக்குப்பிள்ளைக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் 3 சேர்பிம் சம்பளமாக வழங்கப்பட்டது.

### பிரதம நீதியரசர் (Alcayde Major)

அரசரின் (போர்த்துக்கல்) பிரதிநிதியாக பிரதம நீதியரசர் விளங்கினார். இவருக்கு காலாண்டுக்கொரு முறை 120 மிலரிஸ் அல்லது 444 சேர்பிம் சம்பளமாக வழங்கப்பட்டது. திறைசேரிப் பொறுப்பாளராகவும் கணக்காய்வாளராகவும் இவர் கடமையாற்றினார். சகல திணைக்களங்களிலும் தலையீடு செய்யும் அதிகாரம் இவருக்கு இருந்தது. சகல நிர்வாக நடவடிக்கைகளும் இவரது அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தன. இவரது வீட்டு வாடகைக்கென மாதமொன்றுக்கு 8 சேர்பிம் அனுமதிக்கப்பட்டிருந்தது. இவரது செயலாளருக்கு 148 சேர்பிம் காலாண்டுக்கொரு முறை சம்பளமாக வழங்கப்பட்டது.

### நீதிபதி (Ouvidor)

நீதிபதிக்கு 120 மிலரிஸ் சம்பளமாக வழங்கப்பட்டது. இலங்கை முழுவதிலும் இருந்த நீதிமன்றங்களில் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள் யாவும் கொழும்பிலிருந்த மருத்துவமனைப் பராமரிப்புக்கென பிரதம நீதியரசர் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டன. பிரதம நீதியரசருக்கு, நீதிபதிகளின் வரி அறவீடுகள் தொடர்பாக எதாவது முறைப்பாடு கிடைத்தால் அவர்களது சம்பளத்தை நிறுத்தி வைக்கும் அதிகாரமும் இருந்தது.

தேடுதல்களை மேற்கொள்வதற்கும் ,ஆவணங்களைப் பதிவு செய்வதற்கும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆவணங்களைப் பதிவு செய்வதற்கு ஆறு பணமும் ,தோம்புச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு பணமும் கட்டணமாக அறவிடப்பட்டது. நகரப்பகுதியில் ஒரு காணியை அடையாளப்படுத்துவதற்கு ஆறு தங்காஸ் (tangas ) கட்டணமாக அறவிடப்பட்டது. நகருக்கு வெளியே என்றால் நான்கு பணம் கட்டணமாக அறவிடப்பட்டது. (பணம் என்பதும் தங்காஸ் என்பதும் ஒரே அளவு பெறுமதி என நினைக்கிறேன்) குறித்த உத்தியோகத்தர் கடமை நிமித்தம் நகருக்கு வெளியே தங்க நேர்ந்தால் அவருக்கு 2 சேர்பிம் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. மேலதிக செலவுகள் ஏதாவது ஏற்பட்டால் கப்டன் மேஜரின் செயலரின் அனுமதியுடன் கப்டன் மேஜரின் கையொப்பத்துடன் கணக்குப் புத்தகத்தில் பதியப்படவேண்டும்.



### இராணுவம்

சார்ஜன்ட், கப்டன் தர அதிகாரிகளை உள்ளடக்கிய தலா 50 சிப்பாய்களைக் கொண்ட மூன்று படையணிகள் கோட்டைக்குள் கடமையிலீடுபட்டிருந்தன. இவற்றில் இரண்டு படையணிகளில் யாழ்ப்பாண வீரர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை. மூன்றாவது படையணியில் திருமணமான சிப்பாய்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். கப்டன் மேஜரால் நியமிக்கப்பட்ட கப்டன் ஒருவர் ஆயுதங்களுக்குப் பொறுப்பாக இருந்தார். பீரங்கிக்கு பொறுப்பாக பீரங்கி சுடும் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவருக்கு காலாண்டுக்கொரு முறை 16 சேர்பிம் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

ஊர்காவற்றுறைக் (ஊருண்டி) கோட்டையில் 50 சிப்பாய்களைக் கொண்ட ஒரு படையணியும் இரண்டு பீரங்கிகளும் இருந்தன. இவற்றுக்கு பொறுப்பாக கப்டன் ஒருவர் இருந்தார் இவருக்கு 200 சேர்பிம் வருடாந்த சம்பளமாக வழங்கப்பட்டது. இவர்களது தேவைக்காக பெருமளவு அரிசி கொள்வனவு செய்யப்புட்டது.

ஏனைய தேவைகளுக்காக சிப்பாய்களுக்கு 12 பணமும் சார்ஜண்டுக்கு 24 பணமும் வழங்கப்பட்டது. இவர்களைவிட அவசர தேவையின் பொருட்டு கடமையில் ஈடுபடுத்தும் நோக்குடனும் சில சிப்பாய்கள் இருந்தனர். ஊர்காவற்றுறைக் கோட்டையில் இராணுவப் பயிற்சிகளும் இடம்பெற்றன. பயிற்சியின்போது சிப்பாய்களுக்கு பசி ஏற்பட்டால் கிராமத்தவர்களின் வளர்ப்புவிலங்குகளை பிடித்து சாப்பிடாமல் இருப்பதை தடுக்கும் நோக்குடன் போதியளவு உணவுப்பொருள்களை கையிருப்பில் வைத்திருக்க வேண்டியதும் கப்டனின் கடமையாக இருந்தது. இந்தியாவிலிருந்து ஆயுதக் கப்பல்கள் ஏதாவது வந்து ஊர்காவற்றுறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் பட்சத்தில் கப்பலில் கடமையில் ஈடுபடும் சிப்பாய்களுக்கு (கடற்படையினருக்கு) மாதமொன்றுக்கு ஐந்து பணம் மேலதிக கொடுப்பனவாக (batta) வழங்கப்பட்டது.

*(வரலாறு நீளும்)*

இராகவன்



## புதினம் - 4

அண்டைக்கு நேசறி தொடங்கேக்குள்ள பேபி அக்கா, "பிள்ளையள் இங்கை கவனியுங்கோ! நேற்று நான் உங்களை அமைதியாய் இருக்கச் சொல்லிப்போட்டு வெளில போய் வாறதுக்கிடையில எல்லாரும் ஓடிட்டிங்கள். நான் நில்லுங்கோ! பிள்ளையள்! ஓடாதேங்கோ! என்டு சொன்னதையும் கேட்காமல் ஓடிட்டீங்கள். இனி மேல் இப்படி ஓடக்கூடாது. சரியோ? நீங்கள் ஓடினாப் போல உங்கடை அம்மா, அப்பாக்கள் உங்களைத் தேடி வந்து திரும்பிப் போனவை. இனி இப்படிச் செய்யக் கூடாது. விளங்கிச்சுதா?" எண்டு ஒரு நீண்ட விளக்கந் தந்தா. நேசறி முடியிற நேரம் நெருங்கேக்குள்ள அப்பன் சொன்னதை நினைச்சு எனக்கு வயித்தைக் கலக்கத் தொடங்கிச்சுது. என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல. அழுகை வந்திட்டுது. நேசறி முடிஞ்ச உடனே நான் கொஞ்சம் மசுகினேன். அதுக்கிடையில சிவாவின்ர தமையன் அவனை ஏத்திக் கொண்டு போக சைக்கிள்ள வந்து நிண்டிருக்கிறார். இதை அப்பன் காணேல்ல. சிவா முதலே கண்டிட்டான் இது எனக்குத் தெரியாது. மசுக்கிக் கொண்டு நிண்ட என்னைப் பார்த்து அப்பன், "முதல்ல இவரைக் கவனிச்சுட்டு உன்னைத் தனியாக் கவனிக்கிறன்" என்று உறுமிக்கொண்டு சிவாவைக் கலைச்சுக் கொண்டு போனான். சிவா ஓட்டமும் நடையுமா வெளில

## ஊர்ப்புதினம்



போனான். நான் அவங்களுக்குப் பின்னால மெதுவாகப் போனேன். அப்பதான் பிள்ளையார் கோவில் அரச மரத்துக்கு முன்னால சிவாவின்ர தமையன்காரன் சைக்கிள்ள நிக்கிறது தெரிஞ்சுது. சிவா தமையனுக்குக் கிட்ட ஓடிப் போய் விஷயத்தைச் சொல்லிப் போட்டான். இதைக்கண்டிட்டு அப்பன் 'சடின் பிறேக்' போட்டு நின்றான். எனக்கு அப்பதான் நெஞ்சுக்குள்ள தண்ணி வந்தது.

"வாடா இங்கை" எண்டு அப்பனைச் சிவாவின்ர தமையன் காரன் கூப்பிட்டார். அப்பன் தன்ர வீட்டுப் பக்கம் ஓட வெளிக்கிட்டான். அதுக்கிடையில் அந்தாள் சைக்கிள்ள வந்து அப்பனுக்கு முன்னால நிப்பாட்டி "டேய்! நீதானே நேற்று வீடு தேடி அடிக்க வந்த சண்டியன்?" எண்டு உறுக்கிச்சுது. 'இல்லையண்ணா! சிவாதான் தன்ர வீட்டை சிங்கம்,புலி,கரடி, யானை எல்லாம் நிக்குதெண்டும் இண்டைக்கு ஒட்டகச்சிவிங்கி வருகுதெண்டும் சொல்லிக் கூட்டிக் கொண்டு போனவன்" எண்டு அழுதழுது அப்பன் சொல்ல எனக்கு சரியான புளுகம். "இல்லையண்ணா! நான் இவனை வரச் சொல்லிக் கேக்கேல்ல. இவனாய்த்தான் வந்தவன்" எண்டு சிவா குறுக் கறுத்தான்.

"இல்லையண்ண்ா! இல்லையண்ணா..." எண்டு அப்பன் தொடங்க முதலே சிவாவின்ர தமையன், "பொத்தடா வாயை! அதுக்குச் சண்டித்தனம் காட்டப் போறியோ? நீ என்ன பெரிய சண்டியனோ? என்னடா பல்லுக் கழட்டி கையில தருவேன் எண்டு சொன்னியாம். நீ என்ன பல்லு டாக்குத்தரோ?" எண்டு உறுக்க "இல்லையண்ணா! இல்லையண்ணா" எண்டு அப்பன் திரும்ப அழுதழுது தொடங்க, "பொத்தடா வாய். இனி வாய் திறக்கக்கூடாது. வாயில விரல வை" எண்டு அந்தாள் வெருட்ட, அப்பன் நடுங்கி நடுங்கி வாயில விரலை வைச்சு விம்மிக் கொண்டு நிண்டதைப் பார்க்க எனக்குப் பரிதாபமாயிருந்திச்சுது. சிவா இடுப்பில கையள வைச்சு அதை ரசிச்சுக் கொண்டு நிண்டான்.

"சரி இப்ப உன்ர வீட்டைக் காட்டு. நான் வந்து உன்ரை அம்மா, அப்பாவைச் சந்திக்க வேணும். முன்னுக்கு நடவடா" எண்டுட்டு " தம்பி நீ வந்து சைக்கிள்ள ஏறு "எண்டு அந்தாள் சிவாவைக் கூப்பிட்டுது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொட்டு சரணம் கச்சாமி!

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம், கூட்டணி அரசெனக் கூறப்பட்டாலும் அதற்குள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மொட்டுக்கட்சி) ஆதிக்கமே கோலோச்சியுள்ளது.


12 பங்காளிக்கட்சிகள் நேசக்கரம் நீட்டியிருந்தாலும் அவற்றுக்கான கவனிப்பு இரண்டாம் பட்சமே என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக நிலவிவருகின்றது. இது தொடர்பில் பங்காளிக்கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் வெளிப்படையாகவே உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்திவந்தனர். குறிப்பாக அரச கூட்டணியில் இரண்டாவது பெரிய பங்காளியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஊடகச் சந்திப்புகளை நடத்தியும் மொட்டுக் கட்சிமீது விமர்சனங்களை முன்வைத்திருந்தது.

தேர்தல் கால வாக்குறுதிகள் மீறப்பட்டு வருகின்றன எனவும், கிராமிய மட்டத்தில் தமது கட்சி புறக்கணிக்கப்படுவதாகவும் சு.க. உறுப்பினர்கள் ஒப்பாரி வைத்தனர். அதுமட்டுமல்ல அவ்வப்போது மத்திய குழு, நிறைவேற்றுக்குழு என மேல் மட்ட கூட்டங்களை அவசரமாக கூட்டி, அரசியலிலிருந்து வெளியேறுவது குறித்து எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுவந்தன.

ஆனால் மொட்டுக் கட்சி மசியவில்லை. "முடியுமென்றால் இரு, இல்லையேல் வெளியேறு "என்ற தொனியில் கட்டளைகள் பறந்தன. இதனால் தற்போது வாலை சுருட்டிக்கொண்டுள்ள சுதந்திரக்கட்சி, மொட்டுக் கூட்டணியில் நீடிக்கும் முடிவை எடுத்துள்ளது. புதிய அரசியல் கூட்டணி, தனிவழி என்றெல்லாம் தகவல்கள் பரப்பப்பட்டு வந்தாலும் மொட்டுடனான பயணத்தையே அது விரும்புகின்றது. சிலவேளை உள்ளாட்சி மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் தனிவழி சென்றாலும் மத்தியில் கூட்டாட்சி என்ற முடிவிலேயே இருக்கின்றது.



# அறிந்தும் அறியாமலும்



○ சுழியன்

## மகுடம் யாருக்கு?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்ட உறுப்பினர்கள் இருவருக்கிடையில் பதவிக்கான பனிப்போர் மூண்டுள்ளதாக மலையக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. தலைமைப்பதவிக்கு தெரிவாகக்கூடும் என கருதப்படும் இருவரே இவ்வாறு பனிப்போரில் ஈடுபட்டுள்ளனர் எனவும், சங்கத்துக்குள் தமக்கான ஆதரவை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

ஒருவர் ஏதேனும் ஒரு விடயத்துக்காக ஊடக அறிக்கை விடுத்தால் மற்றையவர் மறுநொடியே இன்னொரு அறிக்கை விடுவது, முக்கிய சந்திப்புகளை நடத்துவது, கூட்டங்களை ஏற்பாடு செய்வது என தரமான சிறப்பான சம்பவங்கள் அரங்கேறிவருகின்றன. பார்ப்பவர்களுக்கு அட, இருவரும் கட்சிக்காக தீயாக வேலை செய்கின்றனர் எனத் தெரிந்தாலும், அது அடுத்தக்கட்ட நகர்வுக்கான முதலீடாகவே பார்க்கப்படுகின்றது. ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்கு பின்னர் இ.தொ.காவுக்கு இன்னும் புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. அந்தப்பதவி வெற்றிடமாகவே காணப்படுகின்றது.

## 'ஒன்லைன் பேரணி'

கொரோனாப் பெருந்தொற்றால் அரசியல் நடவடிக்கைகள்கூட இன்று 'ஒன்லைன்' மயமாகிவிட்டன. கட்சி மாநாடு, கூட்டங்கள் என எல்லாம் 'ஒன்லைன்' ஊடாகவே இடம்பெறுகின்றன. இந்நிலையில் 'ஒன்லைன்' ஊடாக இரு பேரணிகளை நடத்துவதற்கு ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளது.

விவசாயிகளை மையப்படுத்தி ஒரு பேரணியும், அரசின் அடக்குமுறை மற்றும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை கண்டித்து மற்றுமொரு பேரணியும் நடத்தப்படவுள்ளன. இதற்கான 'ஒன்லைன்' ஏற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகவும், இது புதுவித அனுபவத்தை தரக்கூடும் எனவும் நம்பப்படுகின்றது.

அதேவேளை, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினர்கள், விசேட மருத்துவர்களுடன் ஆலோசனை நடத்தி, அடுத்தக்கட்டமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் யோசனைத் திட்டமொன்றை தயாரித்து வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது.



## 2024 இல் ஐ.தே.க. ஆட்சி?

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய கூட்டமொன்று கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தலைமையில் நடைபெற்றது. கட்சி மாநாடு, கட்சியின் அடுத்தக்கட்ட நகர்வுகள் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் இதன்போது அலசி ஆராயப்பட்டுள்ளது. அப்போது, " 2024 இல் ஆட்சியைப் பிடிப்போம் என்று நீங்கள் அடிக்கடி கூறிவருகின்றீர்கள். அதற்கான திட்டம் என்ன, இது உண்மையா?" என உறுப்பினர் ஒருவர் வஜிரவிடம் வினா எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த வஜிர அபேவர்தன, " ஆம். 2024 இல் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி அமைக்கும். இதனைத் தெளிவாக டயரியில் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். வியூகம் பற்றி இப்போதே கூறமுடியாது." என்றாராம். அதேவேளை, கடந்தவாரம் ஆளுங்கட்சி கூட்டமொன்றும் நடைபெற்றுள்ளது. இதன்போது அரிசி மற்றும் சீனி மாபியாக்களுக்கு கட்டாயம் முடிவு கட்ட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரமே ஜனாதிபதியால் சில அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவாம்.

# கருமை...

திறன் பேசியில்
அனந்த விஜய
பேரொலி முழங்க
ஐவிரல் கரம்
விசையினை அழுத்த
எதிர்முனை மொழி கேட்டு
இயங்கலை சென்று
கட்செவி அஞ்சல் வழி
கண்ணாளனின்
முகம் பார்த்தாள்
கண் இமைப் பொழுதில்
கட்டவிழா கமலவுள்ளம்
கட்டவிழக் கண்டாள்

அண்ணல் முகம்
அகத்தின் ஆழம் செல்ல
இமைக்கரம் கொண்டு
கருவிழிகளுக்கு நன்றியுரைத்து
அளக்கொண ஆனந்த ஆழியில்
அமிழ்ந்திப் போனாள்
புகைப்படம் பார்த்து
பிடித்துப்போய்
பூவை பார்க்கும்
படலம் அரங்கேற
நாணம் எனும்
நரம்பால் பின்னப்பட்டு
நாயகன் விரல் நகம் மட்டும்
பார்த்தபடி நின்றிருந்தாள்
'சிவப்பு நிறம்' இல்லை என்று
அகச்சிவப்பு அறியாதவனின்
அலைபேசி செய்தி கேட்டு
அகம் மிக உடைந்து போனாள்
அறைக்குள் அடைப்பட்டும் போனாள்
அடுத்தொரு அவமானம்
அடைந்திட விரும்பாதவளாய்
அடியோடு மறுக்கின்றாள்
பெண் பார்க்கும் படலத்தை!

- தூவல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாய் சொல்லை தட்டாதே



ஒரு குளத்தில் அம்மா மீனும் அதனுடைய குட்டி மீனும் இருந்தன. அம்மா மீன் குட்டி மீனுக்கு நீந்த கற்றுக்கொடுத்தது. நாளாக ஆக அம்மா மீனுக்கு வயதானதால், அதனால் வேகமாக நீந்த முடியவில்லை.

ஆனால் குட்டி மீனோ அதி வேகமாக நீந்த ஆரம்பித்தது. அதனால் அதற்கு கர்வம் ஏற்பட்டது. அம்மா மீனை கிண்டல் செய்தது. உன்னால் உன் உணவை பெறக்கூட நீந்த முடியவில்லை, ஆனால் என்னைப்பார், எவ்வளவு அழகாக நீந்துகிறேன் என டைவ் எல்லாம் அடித்து நீந்தியது. அம்மா மீன் சொல்வது எதையும் குட்டி மீன் கேட்பதில்லை.

ஒரு நாள் மீன் பிடிப்பவன் ஒருவன் மீன் பிடிக்க தூண்டிலுடன் வந்தான். கரையில் அமர்ந்து சிறு புழுவை தூண்டிலில் சொருகி குளத்தில் வீசினான்.

புழுவைத் தூண்டிலில் பார்த்ததும் அதை பிடித்து உண்ண குட்டி மீன் விரைந்தது. உடனே தாய் மீன் அதனிடம் போகாதே அது உன்னைப் பிடிக்க வைக்கும் தூண்டில், அதில் மாட்டினால் நீ இறந்து விடுவாய் என்றது.

உனக்கு முடியாததால் எதைப்பார்த்தாலும் நீ சந்தேகப்படுகிறாய், அந்தப் புழுவை நான் பிடித்து வருகிறேன் பார் என்றது குட்டி மீன். அதற்குள் வேகமாக வந்த வேறொரு மீன் தூண்டிலைக் கவ்வி அதில் மாட்டிக்கொண்டு உயிரிழந்தது. பயத்துடன் குட்டி மீன் தாயைப்பார்த்தது. பின் "அம்மா நீ சொன்னது உண்மை. உன் பேச்சைக் கேட்காமல் நான் தூண்டிலைக் கவ்வியிருந்தால் அந்த மீனுக்கு ஆன கதியே எனக்கும் ஆகியிருக்கும். உன்னால் என் உயிர் காப்பாற்றப்பட்டது" என அம்மா மீனிடம் மன்னிப்புக் கேட்டது.

## பிஞ்சு தூரிகை




## விடுகதைகளும் விடைகளும்

1. உடம்பு முழுவதும் முள். அது என்ன?
2. கையும் இல்லை, காலும் இல்லை. ஓடிக்கொண்டே இருப்பேன். நான் யார்?
3. வெள்ளை மணலுக்குள்ளே தங்கம். அது என்ன?
4. பச்சைப் பேருந்துக்குள் சிவப்பு பயணிகள். அவர்கள் அணியும் தொப்பி கறுப்பு. அது என்ன?
5. உன்னை எங்கு சென்றாலும் தொடர்ந்து வருவான். அவன் யார்?

*1. சீப்பு, 2. நேரம், 3. முட்டை, 4. தர்பூசணி, 5. நிழல்*



## வழிகாட்டுவோம்



## பூனை



1. பூனைகள் நாளொன்றுக்கு 16 மணிநேரம் வரை தூங்குகின்றன. அவை தங்களின் வாழ்க்கையில் சுமார் 70 சதவீதத்தை தூங்கிக் கழிக்கின்றன. அமெரிக்காவின் அலஸ்கா மாகாணத்தில் உள்ள டல்கீட்னா என்ற நகருக்கு, ஸ்டம்ப்ஸ் என்ற பூனை 20 ஆண்டுகள் மேயராக இருந்துள்ளது.
2. 1963ஆம் ஆண்டில், ஃபெலிகே என்ற பூனை விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.
3. புலிகளின் குணாதிசயத்தில் 95 சதவீதத்தை பூனைகள் கொண்டுள்ளன.
4. வீட்டில் வளர்க்கும் பூனைகளால், மணிக்கு 30 மைல் வேகத்தில் ஓட முடியும்.
5. பூனைகளால் தங்கள் காதுகளை 180 டிகிரி வரை சுழற்ற முடியும். பூனைகளுக்கு 230 எலும்புகள் உள்ளன.
6. பூனைகளால் தங்கள் உயரத்தைவிட 5 மடங்குஅதிக உயரம் வரை குதிக்க முடியும்.

குட்டிப் பூனைகளுக்கு 26 பற்களும், பெரிய பூனைகளுக்கு 30 பற்களும் இருக்கும்.

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

# புலிகளுக்கு...



ரான சூழலில் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற சந்தேகங்கள் வல்லாதிக்க நாடுகள் மத்தியில் வலுத்திருக்கின்றன. இந்தோ பசுபிக் மற்றும் தென் சீனக்கடல் விவகாரத்தில் சீனாவின் கவனத்தைத் திசை திருப்பவே ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகள் விலக்கப்பட்டன என்பது கண்கூடு. இதனையே அமெரிக்க- பிரித்தானிய அரசுகள் தலிபான்களுடன் ஏற்படுத்தி வரும் தொடர்புகளும் காண்பிக்கின்றன.

இந்த நகர்வுகள் சீனாவுக்கும் நன்கு தெரிந்த ஒன்றுதான். ஆனாலும் அமெரிக்காவின் அரசியல் நகர்வுகளை முந்திக் கொண்டு தலிபான்களைத் தமது கட்டுப்பாட்டில் அல்லது குறைந்தபட்சம் தம்மோடு இசைந்து வரக்கூடிய நகர்வுகளை சீனா மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதால், இந்தியாவுக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

இதனாலேயே ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டானிக்ஜாயை கட்டாரில் உள்ள இந்தியத் தூதுவர் சந்தித்துப் பேசியிருக்கிறார் என்பதும் வெளிப்படை. இந்தநிலையில், எந்தவொரு நாடுகளின் பக்கமும் தலிபான்கள் நிற்க மாட்டார்களென ஷேர் முகமது அப்பாஸை இந்தியா சொல்ல வைத்ததா என்ற கேள்விகளும் எழாமலில்லை.

தூரநோக்குப் புவிசார் அரசியல் பார்வையோடு அமெரிக்கா செயற்பட்டாலும், இந்தியாவைப் பொறுத்தவரை சீனாவுடனான எல்லைப் பிரச்சினை உள்ளிட்ட அரசியல் பகைமை என்பது மிகவும் கிட்டிய தூரத்தில் இருக்கும் விவகாரமாகும். அதிகரித்துவரும் பாகிஸ்தான் - சீன உறவும் புதுடில்லிக்கு ஒவ்வாமைதான். இதனால் ஆப்கானிஸ்தான் படை விலகலுக்குப் பின்னரான சூழலில் சீனாவுக்கு எதிரான அமெரிக்கப் புவிசார் அரசியல் நகர்வுகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், சீனா மேற்கொள்ளும் நகர்வுகளைப் போன்று முன்ஏற்பாடுகளைத் தானும் செய்ய வேண்டுமென இந்தியா கருதியிருக்கலாம்.

ஆகவே கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதைபோன்றது தான் இந்தியாவின் தற்போதைய நிலை. அமெரிக்காவோடு அளவுக்கு அதிகமான உறவை வளர்த்துக் கொண்டதனால் உருவான வலியாகவும் இதனை அவதானிக்கலாம். இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவைத் தனித்து நின்று எதிர்க்கத் திராணியற்ற நிலையில், ஆமெரிக்காவை புதுடில்லி அணைத்துக் கொண்டது. இதனைப் பயன்படுத்தி அமெரிக்காவும் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னரான கடந்த நான்கு வருடங்களில் இந்தியாவுடன் மூன்று ஒப்பந்தங்களைச் செய்துமுள்ளது. இதனால் அமெரிக்காவிடம் இருந்து விலக முடியாத சூழலில், ஆப்கானிஸ்தான் படை விலகலுக்குப் பின்னர், சீனாவுக்கு எதிரான சில தனிப்பட்ட முடிவுகளை இந்தியா மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் பின்னால் நின்று ஆப்கானிஸதானில் தலிபான்களை சீனா,ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தும் விவகாரத்தில் ஈடுபட்டாலும், தலிபான்களினால் இந்தியாவுக்கு ஆபத்து உண்டு என்ற முன்னெச்சரிக்கை புதுடில்லிக்கு உண்டு. ஆனால் இந்தியாவுக்கு வரவுள்ள ஆபத்தை எந்தளவு தூரத்துக்கு அமெரிக்கா தடுக்கும் அல்லது தடுக்க உதவிபுரியும் என்பதும் கேள்விக்குறியே. சிறிய நாடான இலங்கையிலும் சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவைக் கடந்து அமெரிக்கா, சீனாவுடன் சமாந்தரமாக உறவைப் பேண வேண்டுமென எதிர்பார்க்கும் நிலையில், அதற்கு அமெரிக்கா இடம்கொடுத்துமிருக்கிறது. இந்தோ-பசுபிக் மற்றும் தென் சீனக்கடல் பகுதிகளில் சீனா ஆதிக்கத்தைத் தவிர்த்து ஏனைய நாடுகளின் கடல் பாதையாக மாத்திரமே இருக்க வேண்டுமென்ற அமெரிக்கச் சிந்தனைக்கு இலங்கை ஒத்துழைக்கக்கூடிய வாய்ப்பும் இல்லாமலில்லை. ஈழத்தமிழர் விவகாரத்தைக் கையெலுடுத்துச் சிங்கள ஆட்சியாளர்களோடு எப்படிப் பேரம் பேசலாம் என்ற அனுபவம் இந்தியாவுக்கு இருப்பதைவிடத் தற்போது அமெரிக்காவுக்கே அதிகமுண்டு. முன்னாள் வெளியுறவுச் செயலாளர் மைக் பொம்பியோ கடந்த ஆண்டு கொழும்புக்கு வந்தபோதே அந்த அனுபவத்தின் உச்சத்தை அமெரிக்கா தொட்டுவிட்டது.

இதனை டில்லியும் அறிந்திருக்கும். ரஷ்யாவோடு இராணுவ ஒத்துழைப்புக்கான கலந்துரையாடல் ஒன்றை இலங்கை சென்ற வியாழக்கிழமை மொஸ்கோவில் நடத்தியிருந்தது. இந்த உரையாடல் சீனாவுக்கான ஒத்துழைப்பாக இருக்கலாமென்பதைவிட அமெரிக்காவை மேலும் தங்கள் பக்கம் ஈர்ப்பதற்கான கொழும்பின் உத்திகளில் ஒன்றாகவே இதனைக் கருதலாம். இந்த மாதம் ஜெனீவா அமர்வு உண்டென்பதும் கொழும்புக்கு நல்ல ஞாபகம்.

இலங்கை குறித்த ஜெனீவா விவகாரத்தில் அமெரிக்காவுடன் சேர்ந்து இயங்கும் பிரித்தானியா புலிகள் மீதான தடையை வியாழக்கிழமை மேலும் நீடிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இஸ்லாமிய அடிப்படைவாதத் தலிபான்களை சர்வதேசப் பயங்கரவாதிகளாக அறிவித்த இந்த வல்லாதிக்க நாடுகள் தமது புவிசார் பூகோள அரசியல் நோக்கில், தற்போது தலிபான்களைப் பகிரங்கமாக ஆதரிக்கின்றன. ஆனால் தேசிய இனம் ஒன்றின் அரசியல் விடுதலைக்கான அதுவும் போர் இல்லாதொழிக்கப்பட்ட சூழலிலும், புலிகள் மீதான தடை நீடிக்கப்படவுள்ளது. எவ்வளவு பெரிய அபத்தம் இது? தலிபான்களுக்கு ஒரு நியாயமும்,புலிகளுக்கு இன்னொரு நியாயமும் காட்டுவது வல்லாதிக்க நாடுகளின் தனிப்பட்ட நலன்களைப் பொறுத்ததே என்பது மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே தலிபான் விவகாரத்தைச் சுட்டிக்காட்டி தமிழ்த்தேசியக் கட்சிகள் நியாயம் கோர வேண்டும். இறைமை, சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட அரசியல் விடுதலை நடவடிக்கைகள், ஒருபோதும் பயங்கரவாதம் அல்ல. இதனை முன்நின்று செயற்படுத்த வேண்டிய இந்தியாவோ . அமெரிக்கப் புவிசார் அரசியல் நகர்வுகளுக்குள் தமக்கும் நன்மையிருப்பதாகக் கருதிச் சிக்கியிருப்பதுதான் காலக் கொடுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்து மதுவருந்துவதன் பலாபலன்


# கணைய அழற்சி

## (Pancreatitis)

இது கணையத்தில் ஏற்படும் அழற்சி. இது திடீரென தோன்றி சில நாட்களுள் ஏற்படும். Acute Pancreatitis ஆகவோ அல்லது பல வருடங்களாகவோ காணப்படும். நாட்பட்ட Chronic Pancreatitisஆக இருக்கலாம்.



மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)



கணையம் எங்கே இருக்கிறது?' என்று கேட்டால், பலரும் யோசிப்பார்கள். காரணம், கணையம் குறித்த விழிப்புணர்வு படித்தவர்களிடம் கூட இல்லை. மது குடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிற இக்கால கட்டத்தில் கணையத்தின் அவசியம் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும்.

நலம் அறிய...

### கணையம் Pancreas

நம் வயிற்றில், இரைப்பைக்குக் கீழே, சிறிது பின்புறமாக, முன்சிறுகுடலுக்கு இடது பக்கமாக, மாவிலை வடிவத்தில், ஊதாவும் மஞ்சளும் கலந்த நிறத்தில், தட்டையாக ஓர் உறுப்பு உள்ளது.

நீளம் அதிகபட்சமாக 20 செ.மீ. எடை 100 கிராம் வரை இருக்கும்.

இது ஒரு கலப்படச் சுரப்பி (Dual Gland). இதில் நாளமுள்ள சுரப்பிகளும் உள்ளன. நாளமில்லா சுரப்பிகளும் உள்ளன. நாளமுள்ள சுரப்பிகள், என்சைம்கள் அடங்கிய உணவுச் செரிமான நீர்களைச் சுரக்கின்றன. இந்தச் செரிமான நீர்கள் 'கணைய நாளம்' வழியாக முன்சிறுகுடலுக்குச் சென்று, கொழுப்பு, புரதம், மாப்பொருள் ஆகிய உணவுச்சத்துகள் செரிப்பதற்கு உதவுகின்றன.

கணையத்தில் 'லாங்கர்ஹான்ஸ் திட்டுகள்' (Islets Of Langerhans) எனும் சிறப்புத் திசுக்கள் ஆங்காங்கே பரவிக்கிடக்கின்றன.

ஆரோக்கியமாக உள்ள நபரிடம் சுமார் 10 லட்சம் திட்டுகள் உள்ளன. ஒவ்வொரு திட்டிலும் 3000 முதல் 4000 வரை செல்கள் உள்ளன.

இந்த செல்கள் ஆல்பா, பீட்டா, டெல்டா என்று 3 வகைப்படும். இவற்றில் 'பீட்டா' செல்கள் இன்சுலினையும், ஆல்பா செல்கள் குளுக்ககான் ஹார்மோனையும், டெல்டா செல்கள் சொமோட்டோஸ்டேடின் ஹார்மோனையும் சுரக்கின்றன. இவை 'நாளமில்லா சுரப்பிகள்' என்பதால், தாம் சுரக்கின்ற ஹார்மோன்களை குருதியில் நேரடியாகவே சேர்த்துவிடுகின்றன. இப்படி ஒரே நேரத்தில் இரு வேலைகளைச் செய்கிற உறுப்பு நம் உடலில் வேறு எதுவும் இல்லை.




### பொதுவான அறிகுறிகள்:

மேல்வயிறு அல்லது வயிற்றின் இடது மேற்புறம் கடுமையான எரிச்சல் தரக்கூடிய வலி, முதுகுப்புறமாகப் பரவுதல், குமட்டல், உணவு உண்டபின் மோசமாகும் வாந்தி, உடலின் உட்புறத்தில் ஏற்படும் இரத்தக் கசிவு மற்றும் அதன் தீவிரத்தைப் பொருத்து வலி, குருதி அழுத்தம் அதிகரிக்கலாம். இதயத் துடிப்பு, சுவாசவீதம் ஆகியவை அடிக்கடி அதிகரித்துக் காணப்படும்.

சாதாரணமாக, வலி ஏற்பட்டுள்ளதைப் போலல்லாமல் குறைந்த அளவில் வயிறு மிருதுவாகக் காணப்படும். காய்ச்சல் அல்லது மஞ்சள் காமாலை காணப்படலாம்.

### பரிசோதனைகள்

குருதியில் அமைலேஸ் அளவு அதிகரித்தால் கணைய அழற்சி ஏற்பட்டுள்ளது என்று நிர்ணயித்துவிடலாம்.

இதன் இயல்பு அளவு 40லிருந்து 100 யூனிட்.

கணைய அழற்சியில் இதன் அளவு 1000 யூனிட்டுகளுக்கு மேல் அதிகரிக்கும். ரத்தத்தில் லைப்பேஸ் அளவும் அதிகரிக்கும்.

வயிற்று எக்ஸ்ரே,
அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்,
சி.டி. ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் போன்றவையும் கணைய அழற்சியை உறுதி செய்ய உதவும்.

### சிகிச்சை முறைகள்

கணைய அழற்சியை ஆரம்ப நிலையிலேயே கவனித்து விட்டால் மருந்துகள் மூலமே குணப்படுத்தி விடலாம். கணையம் அழுகி விட்டாலோ அல்லது அதில் குருதிப்போக்கு ஏற்பட்டு விட்டாலோ அறுவை சிகிச்சை தேவைப்படும்.

### பித்தக்கற்கள்

மது அருந்துவது (80%) கணைய அழற்சிக்குக் காரணமாகிறது. பொதுவாக, கடுமையான கணைய அழற்சிக்குப் பித்தக்கற்களும் நாட்பட்டக் கணைய அழற்சிக்கு மது அருந்துவதும் முதன்மைக் காரணிகளாக விளங்குகின்றன

### கணையத்தை காப்பது எப்படி?

1. தொடர்ந்து மது அருந்துவதை அறவே தவிர்க்கவும்.
2. பித்தப்பையில் கற்கள் உருவானால் உடனே அறுவை சிகிச்சை செய்து கொள்ளவும்.
3. மஞ்சள் காமாலை, அம்மைக்கட்டு, ருபெல்லா நோய்களுக்கு குழந்தைப் பருவத்திலேயே தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.
4. நீங்களாக மருந்துக்கடைகளில் மருந்து, மாத்திரைகள் வாங்கிச் சாப்பிடுவதை நிறுத்தவும்.
5. புகையில் வாட்டி தயாரிக்கப்படுகின்ற உணவுகளை ஓரங்கட்டுங்கள்.
6. கலப்பட எண்ணெயை சமையலுக்குப் பயன்படுத்த வேண்டாம்.
7. ஒருமுறை பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் மீண்டும் சூடுபடுத்திப்பயன்படுத்தாதீர்கள்.
8. நாற்பது வயதுக்கு மேல் உள்ளவர்கள் கொழுப்புணவுகளைக் குறைத்துக் கொள்ளவும்.
9. புகைப்பதை நிறுத்தவும்.
10. பழங்கள், காய்கறிகள் நிறைந்த ஆரோக்கிய உணவுப் பழக்கத்தைப் பின்பற்றுங்கள்.



- கணையத்தில் சுரக்கும் செரிமான நீர்கள் மிகவும் கடுமையானவை. தங்கள் இயல்பை மீறி கணையத்தில் இவை தேங்குமானால், கணையத்தையே அழித்துவிடுகின்ற அளவுக்கு மோசமானவையும்கூட.
- கணையம் சில காரணங்களால் திடீரென்றோ, நாள்பட்டோ பாதிக்கப்படலாம்.
- அப்போது கணையம் வீங்கிவிடும். பிறகு அழுகிவிடும். இறுதியாக கணையத்தில் குருதிப்போக்கு ஏற்படும். அந்த நிலைமையைக் 'கணைய அழற்சி' (Pancreatitis) என்கிறோம்.
- சமிபாட்டுக்குத் தேவையான கணைய நொதிகள் (குறிப்பாக டிரிப்சின் நொதியம்) சிறுகுடலில் செயற்பாடு அடைவதற்குப் பதிலாகக் கணையத்திலேயே செயற்றிறன்மிக்கதாக மாறிவிடுவதால் இந்நோய் உருவாகிறது.
- நாட்பட்ட கணைய அழற்சி நீரிழிவு நோய் அல்லது கணையப் புற்று நோய்க்கு வித்திடலாம்.

கணைய நொதிகள் போதிய அளவு இல்லாமையால் சமிபாடு பாதிக்கப்பட்டு உடல் எடை குறைவு ஏற்படலாம்.

முன்பக்கமாகச் சாய்ந்து உட்கார்ந்தால் வலி சிறிது குறையும். படுத்தால் வலி அதிகரிக்கும். இந்த நோய்க்கு இது ஒரு முக்கிய அறிகுறி. குமட்டல், வாந்தி இருக்கும். வயிறு உப்பும். நீங்கள் கவனிக்க வேண்டிய விடயம். இது இரைப்பைப் புண் உள்ளவர்களுக்கும் இதே போன்றுதான் வயிற்றுவலி இருக்கும். ஆனால், அவர்களுக்கு வாந்தி எடுத்த பின்னர் வயிற்று வலி குறைந்துவிடும். கணைய அழற்சி உள்ளவர்களுக்கு வாந்தி எடுத்தாலும் வயிற்றுவலி குறையாது.


### கணையப் புற்றுநோய்

மிகை மது மற்றும் புகைப்பழக்கம் காரணமாக கணையத்தில் புற்றுநோய் ஏற்படவும் அதிக வாய்ப்புண்டு. இதன் அறிகுறிகளும் கணைய அழற்சிக்குரிய அறிகுறிகளும் ஏறக்குறைய ஒன்றுபோலவே இருக்கும். இது ஒரு கொடுமையான புற்றுநோய்.

மருத்துவ சிகிச்சை, அறுவை சிகிச்சை கதிர் வீச்சு சிகிச்சை என்று எதற்கும் கட்டுப்படாது. நோயாளி சீக்கிரத்தில் உயிரிழப்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனைத் தப்பிச் செல்ல விடுமாறு யாரும் கட்டளையிடவில்லை!



இலங்கையில் இந்திய அமைதி காக்கும்படை நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் (1987 ஜூலை– 1990 மார்ச்)இந்திய இராணுவப் புலனாய்வுப்பிரிவின் தலைவராக பணியாற்றிய கேணல் ஹரிகரன் இனப்பிரச்சினை உட்பட இலங்கை அரசியல் நிலைவரங்கள் குறித்து தொடர்ச்சியாக எழுதிவருகிறார்.அண்மையில் அவுஸ்திரேலிய முகநூல் வலைத்தளமான ' ஃபோக்கஸ்தமிழுக்கு ' (Focusthamil) வழங்கிய நேர்காணலின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

தமிழில் : அபர்ணா

**கேள்வி : இலங்கையில் நடைபெற்றது ஒரு இனப்படுகொலை என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு அது தொடர்பில் பல்வேறு முயற்சிகள் பல தரப்புக்களாலும் முன்னெடுக்கப்படுகின்றன.இதன் சாத்தியப்பாடுகள் மற்றும் இந்தியாவின் பங்களிப்புகள் பற்றி..?**

**ப:** சர்வதேச அரசியலில் உயர்ந்த கொள்கைகளை விடவும் யதார்த்தமாக ஒவ்வொரு நாடும் அதன் நலன்களின் அடிப்படையின் நடைமுறைப்பின்னணியிலேயே நடந்துகொள்கின்றன ; நடத்தப்படுகின்றன.எத்தகைய குற்றங்கள் சர்வதேசக் குற்றங்களாக கருதப்பட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்யப்படவேண்டும் என்பதை ஐ.நா. பாதுகாப்பு சபையில் ' வீட்டோ' அதிகாரமுடைய நிரந்தர உறுப்புநாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றில் பெரும்பான்மை பக்கபலமே நிர்ணயிக்கும்.ஆகவே இலங்கை இனப்படுகொலைகள் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னிலையில் கொண்டுவரப்படுவதற்கு இந்த ஐந்து நாடுகளின் பெரும்பான்மையானவற்றின் உதவி தேவை.அத்தகைய குற்றங்கள் என்று கருதப்பட்ட ருவாண்டா இனப்படுகொலைகள், பொஸ்னிய போரில் சேர்பியா, குரோஷியா ஆகிய நாடுகள் நடத்திய இனப்படுகொலைகள், லைபீரியப் போரில் அந்தநாட்டின் முன்னாள் ஜனாதிபதி நடத்திய கொலைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டன.

அவை யாவும் பல வருடங்களாக பல நாடுகளினால் ஐ.நா.வில் விவாதிக்கப்பட்டு, விசாரிக்கப்பட்ட பின்னரே சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் வந்தன.அரசியல் அழுத்தம் அதிகரித்தபோது குற்றம் புரிந்ததாக கருதப்பட்ட நாடுகளே அந்த நீதிமன்ற விசாரணைகளுக்கு ஒத்துழைத்தன என்பது குறிப்பிடத்தக்கது.அத்தகைய விசாரணைக்கு இலங்கை விவகாரத்தில் சூழ்நிலை இல்லை என்பது எனது கருத்து.

இந்தியா ஐ.நா. பாதுகாப்பு சபையில் தற்காலிகமான ஒரு சாதாரண உறுப்புநாடாகவே இருக்கிறது.ஆகவே இலங்கைப் போர்க்குற்றங்கள் சர்வதேச அளவில் விசாரிக்கப்படுவதற்கு இந்தியாவினால் எந்தளவுக்கு உதவ முடியும் என்பது கேள்விக்குறியே. பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரமுடைய நாடுகளிடையே இந்த விசாரணைக்கு ஒரு உந்துதல் தேவை.

**கே: இலங்கையின் போர்க்குற்றங்கள்,மனித உரிமைமீறல்கள் விவகாரத்தை கையாளும் அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுடன் ஒத்துழைத்து இந்தியா ஒரு முழுமையான பங்களிப்பை வழங்கமுடியாதிருப்பதற்கான காரணம் எனன? இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் இடம்பெற்ற சில சம்பவங்கள் உதாரணமாக யாழ்ப்பாண மருத்துவமனைப் படுகொலைகள்,வல்வெட்டித்துறைப் படுகொலைகள் காரணமாக இருக்கமுடியுமா?**

**ப:** இல்லை.ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறும் விவாதங்களில் இந்தியா எடுக்கும் நிலைப்பாடுகளுக்கு பல்வேறு அழுத்தங்கள் உள்ளன.உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய நாடுகளின் தலையீடு பற்றிய இந்தியாவின் கொள்கை அவற்றில் ஒரு முக்கியமான அங்கமாகும்.ஏனெனில் அவ்வாறான தலையீடுகள் ஒரு நாட்டின் அடிப்படைச் சுதந்திரத்தைப் பாதிக்கக்கூடாது என்று இந்தியா திடமாக நம்புகிறது.

மேலும் அவ்வாறான தலையீடுகள் அந்த நாட்டின் அங்கீகாரத்துடன் நிகழ்ந்தால் உண்மையான பயனுண்டு என்பது இந்தியாவின் அடிப்படைச் சித்தாந்தமாகும்.நீங்கள் குறிப்பிட்ட இரு சர்ச்சைக்குரிய சம்பவங்களும் துல்லியமாக விசாரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது எனது கருத்து. ஆனால், அத்தகைய முடிவை எடுக்கும் அதிகாரம் என் கையில் அப்போது இருக்கவில்லை என்பதை நான் குறிப்பிட்டாகவேண்டும்.

**கே: இந்தியப் படைகள் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் ஒவ்வொரு முறையும் பிரபாகரனை பத்திரமாக தப்பிச்செல்ல அனுமதிக்குமாறு உத்தரவு வழங்கப்பட்டதாக இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதியும் தற்போதைய வெளிவிவகார இணையமைச்சருமான ஜெனரல் வீ.கே.சிங் கூறியிருந்தார்.அந்த உத்தரவுகள் எங்கிருந்து அல்லது யாரிடமிருந்து வந்தன? இறுதியில் விடுதலை புலிகளை இல்லாமல் செய்யும் முடி வுக்கு ஏன் இந்தியா வரவேண்டியிருந்தது?**

**ப:** இந்தியப்படைகள் இலங்கைக்கு வந்தது முதல் வெளியேறும் வரை அதன் தலைமையகத்தில் நான் பணியாற்றினேன்.அந்தக் காலகட்டத்தில் ஜெனரல் வீ.கே.சிங்கை நான் சந்தித்ததே இல்லை. மேலும் பிரபாகரனை தப்பிச்செல்ல அனுமதிக்குமாறு அப்போது எங்களுக்கு உத்தரவு எதுவும் வரவுமில்லை. எமது தலைமையும் அவ்வாறான உத்தரவு எதையும் அறிவிக்கவும் இல்லை.அதற்கு மாறாக, பிரபாகரனைப் பிடிப்பவருக்கு அல்லது அவர் இருக்குமிடம் பற்றிய தகவலை அளிப்பவருக்கு பத்து இலட்சம் ரூபா பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.ஆகவே இந்தக் கேள்விக்கு விடை காண நீங்கள் வீ.கே.சிங்கையே அணுகவேண்டும்.

" இறுதியில் விடுதலை புலிகளை இல்லாமல்செய்ய" என்று நீங்கள் கூறுகிறீர்கள்.இந்தியா எந்த காலகட்டத்தில் அத்தகைய முடிவை எடுத்ததாக நீங்கள் கூறுகிறீர்கள் என்று எனக்கு புரியவில்லை.இந்தியாதான் புலிகளுக்கும் மற்றைய இலங்கைத் தமிழ் போராட்ட இயக்கங்களுக்கும் 1983=1987 காலகட்டத்தில் புகலிடமும் ஆதரவும் அளித்தது.அந்த ஆதரவால்தான் புலிகள் இயக்கம் வளர்ந்தது. இது மறக்கமுடியாத உண்மை.

இந்திய - இலங்கை சமாதான உன்படிக்கையின் பிரகாரம் புலிகள் தங்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்து இடைக்கால நிர்வாகத்தில் மற்றைய இயக்கங்களை தவிர்த்தால் தான் தாங்கள் பங்கேற்போம் என்று பிடிவாதம் செய்தனர்.ஆகையால்தான் அந்த சுமுகமான சூழ்நிலையை - இந்திய முயற்சியை - நடைமுறைப்படுத்த முடியவில்லை. புலிகள் மற்றைய இயக்கங்களை தாக்க ஆரம்பித்த பிறகுதான் அவர்களுக்கு எதிரான இந்தியப் போர் தொடங்கியது என்பதை மறந்துவிடக்கூடாது.

(15ஆம் பக்கம் பார்க்க)



**இந்தியா ஐ.நா. பாதுகாப்பு சபையில் தற்காலிகமான ஒரு சாதாரண உறுப்புநாடாகவே இருக்கிறது.ஆகவே இலங்கைப் போர்க்குற்றங்கள் சர்வதேச அளவில் விசாரிக்கப்படுவதற்கு இந்தியாவினால் எந்தளவுக்கு உதவ முடியும் என்பது கேள்விக்குறியே. பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரமுடைய நாடுகளிடையே இந்த விசாரணைக்கு ஒரு உந்துதல் தேவை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

05 செப்ரெம்பர் 2021

# என்னைக் கொல்லாதே...



மானிப்பாய் சுதன்

சில நாள்களாக என் மனதில் இனம்புரியாத ஓர் இருப்புக்கொள்ளாமை ஏற்பட்டிருந்தது. எதற்கெடுத்தாலும் சினப்படல், தனிமையை நாடுதல், எதிலும் திருப்தியின்மை, பதகளிப்பு, மனம் சோர்வடைதல் என மாறிமாறி உணர்வுகள் நிலையில்லாமல் மாறிக்கொண்டிருந்தன.

இவ்வாறு தோன்றும் போதெல்லாம் அவற்றில் இருந்து மீண்டுகொள்ள சமூகவலைத்தளங்களை நாடினேன். ஆனால் தற்காலிக மீட்சியே கிடைத்தது. மீண்டும் மீண்டும் சமூக வலைத்தளங்களை நோக்கியே மனம் போனது. ஆனால் மனநிலை மாற்றங்கள் அதிகரித்தனவேயொழிய வேறு எதுவும் நிகழவில்லை. சொல்லப்போனால் கோளாறுகள் அதிகரித்த வண்ணமே இருந்தன. காலையில் எழும்பும் போது கூட எனக்கு உடற்சோர்வும், குத்துளைவுகளும் ஏற்படத் தொடங்கியிருந்தன. கண்கள் குழி விழத்தொடங்கியிருந்தன. முகநூல் தரவுகளின் அடிப்படையில் எனக்கு கொரோனாவோ? அதன் குறிகுணங்கள் தான் இவையோ? என சந்தேகங்கள் எனக்கு ஏற்படத் தொடங்கியிருந்தன. பல மருத்துவர்களிடமும் போய் வந்ததுதான் மிச்சம், குழப்பங்கள் தீரவில்லை. மிகவும் மனச்சோர்வு ஏற்படத் தொடங்கியிருந்தது. என்ன செய்யலாம்? என்று குழம்பியிருந்தவனை, மகளின் குரல், "அப்பா போனையே நோண்டிக் கொண்டிராமல் நித்திரையைக் கொள்ளுங்கோ" என்ற அதட்டும் போதுதான் பார்த்தேன், என்னையறியாமல் நான் முகநூலில் லைக்குகளும், பின்னூட்டங்களும் கொடுத்துக் கொண்டிருந்தேன். சட்டென்று போனை வைத்துவிட்டு நித்திரை கொள்ள முனையும் போது, மகள் கொட்டக் கொட்ட முழித்தபடி என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஏன் நித்திரைகொள்ளவில்லை?"

"நான் "குட்நைட்" சொன்னனான் நீங்க இன்னும் சொல்லவில்லை"

"நீ சொன்னதைக் கவனிக்கவில்லை. சரி சரி குட்நைட்"

"எல்லாரும் வந்தால்தான் நித்திரை கொள்ளுவேன், அவங்களையும் வரச்சொல்லுங்கோ"

மனிசியும், மாமியும் சீரியல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், எப்படிக் கூப்பிட்டாலும் வரமாட்டார்கள். மாமியார் சீரியல் பார்க்க துணைக்கு மகள் இருக்கவேணும். இதில் நான் கூப்பிட்டு எங்கே....?

"அம்மாவைக் கூப்பிடு அப்பா"

"சரி சரி" என்றவாறே கூப்பிட்டேன் என்பதைவிட கத்தி அழைத்தேன். எந்தவித பின்னூட்டமோ சலனமோ இல்லை. ஏற்கனவே இருந்த எரிச்சலில்,

"இதுகள் ரீவியை கட்டிக்கொண்டு அழட்டும். நான் வீட்டைவிட்டுப் போகப்போகிறேன்" என்றேன்.

"பிறகு சோத்துக்கு எங்கே போறது. இங்கே தானே வர வேணும்" மகள் சீரியஸாக முகத்தை வைத்துக்கொண்டு சொன்னாள், இவள் நல்லவளா? கெட்டவளா என நாயகன் திரைப்படத்தில் கமலைப் பார்த்து கேட்பது போல் கேட்க வேண்டும்போல் இருந்தது. ஆனாலும் முறைத்துப் பார்த்தேன்.

" அதுசரி, நீ சைக்கோலஜிஸ்ற்றா வரப்போகிறேன் எண்டு தானே சொல்றாய்.,எனக்கு என்ன பிரச்சினை எண்டு சொல் பார்ப்போம்" என்று எனது உணர்வுக் குழப்பங்களைச் சொன்னேன். அவளோ, "இதுக்கோ ஆஸ்பத்திரிக்கெல்லாம் போனீங்க? முதலே என்னிடம் கேட்டிருக்கலாமே "என்றாள்.

"சரி என்ன பிரச்சினை சொல்லு" என்றேன்.

"உங்கட பிரச்சினையை தீர்த்தா எனக்கு கதைப்புத்தகம் வேண்டித் தருவீங்களா?"

"சரி!"

"உங்கட வருத்தம் சோசியல் மீடியா அடிக்சன்"

"என்னடி சொல்றாய்?"

"எப்ப பார்த்தாலும் போனையே நோண்டிக் கொண்டிருந்தால், இப்படித்தான் வரும். முதலில் ஆட்களுடன் கதைப்பது குறையும் பிறகு இப்ப உங்களுக்கு இருக்கிற பிரச்சினை எல்லாம் படிப்படியாக வரும்"

"அப்ப கொரோனா இல்லையா? நான் அதுதான் வரப்போகுதோ என்று பயந்திட்டன்"

"இது கொரோனாவைவிட மோசம்.அதுபோகிற போக்கில் சிலரைக் கொன்று விட்டுபோய்விடும். இது உயிரோட வைத்தே கொன்று கொண்டிருக்கும். சுருக்கமாகச் சொன்னால் நடைப்பிணமாக்கும். மனிதனின் டி.என்.ஏ ஆட்களின் முகத்துக்கு முகம் நேராகப் பார்த்து தொடர்பாடவே வடிவமைக்கப்பட்டுள்ளது என்று" றொம் கேஸ்றிங்" என்ற உளவள சிகிச்சையாளர் சொல்லுறார். தேவையான நேரம்,அல்லது ஒரு நாளைக்கு குறைந்தது ஒரு ரண்டு மணித்தியாலங்கள்தான் திரையைப் பார்க்கலாம். ரீவி,போன்,கொம்பியூட்டர் திரைகள் எல்லாவற்றையும் சேர்த்து"

"உனக்கு எப்படி இதெல்லாம் தெரியும்?"

"நான் என்ன உங்கள மாதிரி பேஸ்புக்கிலும் ,வட்ஸ்அப்பிலும் ஆதாரமில்லாத போலிச் செய்திகளையே பார்க்கிறனான்?" 'குமாரு இது ஒரு ஆபத்தான விலங்கு,தப்பி ஓடு'என்று நினைத்தவாறே ஒரு முடிவெடுத்தேன், இன்றிலிருந்து சமூகவலைத்தளங்களுக்கு ஒரு வார பயணத்தடை . வேண்டாம் முழுவிடுமுறை.

◎ ◎ ◎ ◎ ◎ ◎

காலை கண்முழித்ததும் படுக்கையில் இருந்தவாறே ஒரு பத்து நிமிடமாவது பேஸ்புக்கையும்,வந்திருக்கும் வட்ஸ் அப்,வைபர் தகவல்களையும் பார்ப்பது வழமை. ஆனால் இரவு எடுத்த முடிவினை செயற்படுத்த அதனைவிட்டு, படுக்கையை விட்டு எழுந்து காலைக் கடன்களை முடித்து வீட்டு வேலைகளைப் பார்க்கத் தொடங்கினேன்.

இன்று வீட்டுவேலைகளில் முழுமையான கவனம் செலுத்தக் கூடியதாக இருந்தது. வேலைகள் விரைவாக முடிய ஆறுதலாகக் குளித்து, உடைமாற்றி,போனில் நோண்டிக் கொண்டு சாப்பிடாமல் நிதானமாக சுவையறிந்து உண்டு, பதற்றமில்லாமல் அலுவலகத்துக்கு கிளம்பக் கூடியதாக இருந்தது.

அலுவலகத்தில் நண்பர்கள் கதைக்கும் கதைகள் தொடர்ச்சிகள், விபரங்கள் விளங்கவில்லை. ஏதோ எனக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லாத மாதிரி இருந்தது. ஒவ்வொருவரது கணினித் திரையிலும் மேலதிகமாக அவரவர் பேஸ்புக் திரைகள், சிலரதில் நேரடி பார்வையிலும்,சிலரதில் அவ்வப் போது பார்க்கக் கூடியதாக பார்வைப்புலனில் இருந்து மறைந்தும் இருந்தன.

"லவன் கேள்விப்பட்டியா? பார்த்தாயா? "என்ற கேள்விகளுக்கு "இல்லை "என்ற ஒற்றைச் சொல்லில் பதில் கொடுத்தேன். ஒரு பத்து மணியளவில் என்னுள் ஏதேதோ மாற்றங்கள். ஒருவித இருப்புக் கொள்ளாமையைத் தொடர்ந்து பதகளிப்பு, மற்றவர்களிடம் இருந்துவிலகிப் போகின்றோமோ என்ற உணர்வு,வேலையில் கவனம் செலுத்த முடியாமல் போனது. யாரும் ஏதும் கதைத்தால் சினம் ஏற்பட்டது.

ஒருவாறு மாலை வீடு வந்து சேர்ந்தேன். வீட்டில் அனைவரும் என்னை ஒரு மாதிரியாக பார்ப்பதுபோல் இருந்தது.

"என்னப்பா ஒரே பதற்றமாக இருக்கிறீங்கள்?" மனைவியின் கேள்வி சினத்தை இன்னும் அதிகரிக்க கோபமாக கத்தினேன். மகனோ, டிஸ்கவரி சனலில் வருவதுபோல், " அப்பாவுக்கு கோபம் வந்துவிட்டது அனைவரும் பாதுகாப்பான இடத்தை நோக்கி ஓடுங்கள்" என்றவாறு ஓடிவிட்டான். மகள் மட்டும் ஒரு ஜந்துவைப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தாள். "ஏன் கோபப்பட்டேன்?" என யோசித்தவாறே சற்று அமைதியானேன். ஆனால் மனமோ பரபரத்துக் கொண்டிருந்தது.

மகள் மெதுவாகக் கேட்டாள், "அப்பா இன்றைக்கு பேஸ்புக் பார்க்கேலையோ?"

"இல்லை.."

அமைதியாக அவ்விடத்தைவிட்டு அகன்றாள். அவள் போவது குடிகாரனிடம் பேசிப் பயனில்லை என்பது போல் இருந்தது.

மறுநாளும் இதேநிலை. இரண்டு நாளாக பேஸ்புக்கில் இல்லாததை யாரும் விசாரிக்கின்றார்களா என்று பார்த்தேன். இல்லை, என்னை எல்லோரும் மறந்துவிடுவார்களோ என்று நினைக்கத்தோன்றியது, சரி இருக்கும் மூவாயிரம் பேரில் நேரடியாகத் தெரிந்தவர்கள் எத்தனைபேர், ஒரு ஆயிரம். அதிலும் நெருக்கமானவர்கள் ஒரு நூறு பேர்? உறவினர்கள்,எவரும் இந்த இரண்டு நாட்களில் கேட்கவில்லை. மனம் வெறுமையானது. மனச்சோர்வுடன் உடலும் சோர்ந்துபோனது. ஆனால் போனைத் தொடுவதில்லை என்ற எண்ணம் மட்டும் விறைப்பாகநின்றது.

வழமைபோல் போனை சார்ஜ் போட எடுத்தேன். என்ன ஆச்சரியம் காலையில் போட்ட சார்ஜ் அப்படியே இருந்தது. "இதுநாள் வரை ஐபோன் சார்ஜ் நிற்காதது என்று பிதற்றியதெல்லாம் பொய்யா கோபாலு பொய்யா?"என்று திரைப்பட வசனம் மனதில் தோன்றியது. வீட்டினுள் இருப்பதற்கு எரிச்சலாக இருக்க, வெளியில் சற்று உலாவத் தொடங்கினேன். மகளும் சேர்ந்துகொண்டாள்.

"அப்பா, இன்றும் பேஸ்புக் பார்க்கவில்லையா?"

"இல்லை" என்றவாறு முறைத்தேன்.

"அதுதான் விசயமா?" என்றாள்.

என்ன என்பதைப்போல் பார்த்தேன் மகளை!

"இல்லை, உங்களுக்கு இப்ப இருக்கிற பிரச்சினை சோசியல் மீடியா அடிக்சன் வித்றோவல் சிம்ப்ரம்ஸ்அதுதான் இப்படி இருக்கிறீங்கள். ஒரு ரண்டு தொடக்கம் மூன்று கிழமை அப்படித்தான் இருக்கும். படிப்படியாக சரியாகிவிடும் அப்பா"

"அப்படியா? அப்ப நான் என்ன அதுக்கு அடிமையாகியே இருந்தனான்?" கோபத்துடன் கேட்டேன்.

"அதுதான் உண்மை. இதுவும் கள்ளு,சாராயம்,போதைப் பொருட்கள் போன்று எங்களுக்கு தெரியாமலேயே அடிமையாக்கக்கூடிய ஒன்றுதான்"

"அப்ப சமூகவலைத்தளங்களைப் பார்க்கவே கூடாதா?"

"இல்லை. பார்க்கலாம்,தேவைக்கேற்ப அப்பப்ப கொஞ்சம் ,நேரம் இருக்கும்போது சுயகட்டுப்பாட்டுடன் பார்க்கலாம்.

பார்த்தீங்களா? இன்றுபோனைத் தொடாமல் இருந்ததால்தானே என்னோட இப்படி கதைத்துக் கொண்டிருக்கிறீங்கள்?"

சிறுகதை



"உண்மைதான். நீ ஒரு சைக்கோலஜிஸ்றதான். சரி வா அம்மா என்ன செய்கிறா எண்டு பார்ப்பம்"

அவளோ மேசைக்கும் சுவருக்கும் இடையில் சுவருடன் பல்லிபோல் ஒட்டிக்கொண்டு போனை சார்ஜ் போட்டபடி, வட்ஸ் அப்பில் மெசேஜ் பார்த்துக்கொண்டிருந்தாள்.

மகள் என்னைப் பார்த்த பார்வையில் தெரிந்தது அவள் சொல்லவந்தது. "எனது அடுத்த கிளைன்ற் "என்று. மகள் தந்தைக்கு கொடுத்த உபதேசத்துடன் நித்திரைக்குப்போனேன். நீண்ட நாட்களுக்குப்பின் நல்லதொரு ஆழ்ந்த நித்திரை. காலை எழும்பும் போது உடம்பு லேசாக இருந்தது. மனம் தெளிந்த நீரோடையாக இருந்தது. உற்சாகத்துடன் குளியலறையில் பாடிய படியே குளித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரம் ஆண்டு பழைய சுமை எங்களுக்கு...

○ ம.பா. மகாலிங்கசிவம்

“தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கோர் குணமுண்டு” என்று கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பாடினார். கவிஞர் பாடிய தமிழனுக்குரிய குணங்களில் நல்ல குணங்கள் மட்டுமன்றி கெட்ட குணங்களும் உள்ளடக்கம். தமிழர்க்குரிய குணங்களுள் முக்கியமானது பழமை போற்றும் பண்பாகும்.

**“முன்னோர் மொழி பொருளே அன்றி
அவர் மொழியும்
பொன்னேபோற் போற்றுவம் என்பதற்கும்
முன்னோரின் வேறு நூல் செய்தும் எனும்
மேற்கோள் இல் என்பதற்கும்
கூறு பழம் சூத்திரத்தின் கோள்.”**

என்னும் நன்னூற் சூத்திரம் முன்னோர் கூறிய பொருளை மட்டுமல்லாமல் வார்த்தைகளையும் பொன்போற் பாதுகாக்க வேண்டும். அதற்காக முன்னோர் கூறிய விடயங்களை மேற்கோள்களாக எமது நூலில் எடுத்துக் கூறவேண்டுமெனத் தெரிவித்துப் பழமையைப் போற்றுகிறது.
தமிழருடைய பழமை என்பது சில நூற்றாண்டுகளுக்கு உட்பட்டதன்று. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டது. இந்த இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எம்மை அழுத்துவதனாலே தான் நாம் முன்னேறாமல் உலகில் பின்தங்கி விட்டோமா என்ற சிந்தனையின் விளைவாக உருவான கவிஞர் இ.முருகையனின் இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு என்ற கவிதை இன்றைய தேன்கூட்டை அலங்கரிக்கிறது.




இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு.

மூட்டை முடிச்சு முதலியன இல்லாதார்
ஆட்டி நடந்தார், இரண்டு வெறுங்கையும்.
பாதை நடையின் பயணத் துயர் உணரா
மாதிரியில் அந்த மனிதர் நடந்தார்கள்.
ஆபிரிக்கப் பாங்கில் அவர்கள் நடந்தார்கள்.

மற்றும் சிலரோ வலிமையுள்ள ஆயுதங்கள்
பற்றி, முயன்று, பகை களைந்து,மேலேறி
விண்வெளியை எட்டி வெளிச்செல்லு முன்பாக
மண்தரையில் வான வனப்பைச் சமைப்பதற்கும்,
வாய்ப்பைச் சமனாய்ப் பகிர்ந்து சுகிப்பதற்கும்
ஏய்ப்பை ஒழித்தே இணைந்து நடப்பதற்கும்
நெஞ்சம் இசைந்தார்.
நிகழ்த்தினார் நீள்பயணம்.

பின் முதுகில் பாரப் பெருமை இல்லாதவர்கள்
இத்தனையும் செய்தார்.
இனியும் பல செய்ய
எத்தனிப்போம் என்றார்.
இவை கண்டும்,
நாமோ
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை அத்தனையும்
சற்றே இறக்கிச் சலிப்பகற்றி, ஓய்வு பெற்றுப்
புத்தூக்கம் எய்திப் புறப்படவும் எண்ணுகிலோம்.

மேலிருக்கும் மூட்டை இறக்கி, அதை அவிழ்த்துக்
கொட்டி உதறி, குவிகின்ற கூழத்துள்
வேண்டாத குப்பை விலக்கி, மணி பொறுக்கி,
அப்பாலே செல்லும் அறிவு விழிப்பென்பதோ
சற்றேனும் இல்லோம்.
சலிப்பும் வலிப்பும் எழ,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர்படுத்த,
ஊருகிறோம்;ஊருகிறோம் ஓயாமல் ஊருகிறோம்.

பரந்த உலகோர் பலரும், சுமையைச்
சுருங்கும் படியாகக் குறைத்துச் சிறிதாக்கிக்
கைப்பைக்குள் வைத்துக் கருமங்கள் ஆற்றுகையில்,
வெற்றுக்கை கொண்டும் வியப்புகள் ஆக்குகையில்,

புத்தி நுட்பம்,செய்கை நுட்பம்,போக்கு நுட்பம் என்பவற்றால்
சித்தி பல ஈட்டிச் செகத்தினையே ஆட்டுகையில்,
நாங்கள் எனிலோ நலிந்து மிகவிரங்கி,
பின் முதுகைப் பாரம் பெரிதும் இடர் படுத்த
ஊருகிறோம்,ஊருகிறோம் ஓயவில்லை,
ஊருகிறோம்.

வேண்டாத குப்பை விலக்கி,மணி பொறுக்கி
அப்பாலே செல்லும் அறிவோ குறைவு
ஓ!
இரண்டாயிரம் ஆண்டுப் பழைய சுமை எங்களுக்கு;
பண்பாட்டின் பேரால் பல சோலி எங்களுக்கு.

கவிஞர் இ.முருகையன் சாவகச்சேரியிலுள்ள கல்வயலிற் பிறந்தவர். ஈழத்தின் புகழ்பெற்ற கவிஞர்களில் ஒருவர். கவிஞராக மட்டுமன்றி நாடக ஆசிரியர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் எனப் பலதளங்களிலே திறமையை வெளிப்படுத்தியவர். நெடும்பகல் என்னும் காவியம் ஒரு வரம். மாடும் கயிறுகள் அறுக்கும். முதலிய கவிதை நூல்கள் வந்துசேர்ந்தன. வெறியாட்டு முதலிய பாநாடகங்கள், கடூழியம், அப்பரும் சுப்பரும் ஆகிய நாடகநூல்கள், இன்றைய உலகில் இலக்கியம் முதலிய திறனாய்வு நூல்கள் என்பவை இவரது ஆக்கங்கள் ஆகும். கல்விப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இவரது கவிதைகள் அனைத்தும் முருகையன் கவிதைகள் என்னும் பெயரில் தொகுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழினம் இல்லாத நாடே இல்லை என்று கூறுமளவிற்கு இன்று தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். எனினும் எந்த நாட்டிலும் ஆட்சியாளர்களாக இல்லாமல் இரண்டாம் தரப்பிரஜைகளின் நிலையிலேயே உள்ளனர். உலகில் மிகக் குறுகிய கால வரலாற்றைக் கொண்ட இனங்களெல்லாம் தம்மை வலுவாக்கிக் கொண்டிருக்கத் தமிழர்கள் ஏன் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளனர் என்று விஞ்ஞானப் பட்டதாரியான முருகையன் அறிவியல் பூர்வமாகச் சிந்தித்ததன் விளைவே இக் கவிதை ஆகும்.

**“மூட்டை கட்டி அந்த முழுப்பாரம் பின் முதுகில்
போட்டுக் குனிந்து புறப்பட்டோம் நீள் பயணம்
தேட்டம் என்று நம்பிச் சிதைந்த பழம் பொருளின்
ஓட்டை, உடைகல் உளுத்த இறவல்கள்.
இப்படியான இவற்றையெல்லாம் சேகரித்து
மூட்டை கட்டி அந்த முழுப்பாரம் கண் பிதுக்கக்
காட்டு வழியிற் பயணம் புறப்பட்டோம்”**

என அறிவியல் பூர்வமற்ற பழமைவாதக் கண்ணோட்டத்துடன் பிழையான வழியிலே பயணம் புறப்பட்டமையே தமிழர்கள் முன்னேற்றமின்றி இருக்கக் காரணமானது என்று கவிஞர் கருதுகின்றார். ஆரம்பகாலத்தில் மேலைத்தேயத் தத்துவங்களும் கீழைத்தேயத் தத்துவங்களும் ஓரளவிற்கேனும் சமமான நிலையிலேயே இருந்தன.

ஆனால் கைத்தொழிற்புரட்சி ஏற்பட்ட 18 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிக்குப் பின் மேலைத்தேய தத்துவங்கள் அறிவியல் பூர்வமாக, விஞ்ஞான ரீதியாக வளர்ச்சி அடையத் தொடங்கின. புவி தட்டையானது என்ற கொள்கை, புவிமையக் கொள்கை, அணுவைப் பிளக்க முடியாது என்ற கருத்து என்பவை பொய்ப் பிக்கப்பட்டுப் புதிய கண்டு பிடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் தமிழிர்களின் தத்துவங்கள் பெரும்பாலும் முடிந்த முடிவுகளாகவே இருந்தன. சைவ சித்தாந்தம் சைவத்தின் முடிந்த முடிவு. வேதாந்தம் வேதத்தின் முடிந்த முடிவு. இவை ஆய்வுகளுக்கு, பொய்ப்பித்தல்களுக்கு இடம்கொடாத முடிந்த முடிவுகளாகவே கருதப்பட்டன. ஆய்வுகளுக்கு வரம்பு கட்டிவைத்தமையும் தமிழர் சிந்தனை மரவு முன்னேற்றம் பெற முடியாமைக்குக் காரணமாக இருக்கலாம்.

**“மூட்டை முடிச்சு முதலியன இல்லாதார்
ஆட்டி நடந்தார் இரண்டு வெறும் கையும்
பாதை நடையின் பயணத் துயர் உணரா
மாதிரியில் அந்த மனிதர் நடந்தார்கள்” எனக் குறுகிய காலவரலாறுகளைக் கொண்ட இனங்கள் முதுகை அழுத்தும் பழைய பாரங்கள் இல்லாத காரணத்தால் முன்னேறினார்கள் எனக் கவிஞர் குறிப்பிடுகின்றார்.
“மற்றும் சிலரோ வலிமையுள்ள ஆயுதங்கள்
பற்றி முயன்று பகைகளைத்து மேலேறி
விண்வெளியை எட்டி வெளிச் செல்லும் முன்பாக
மண்தரையில் வான வனப்பைச் சமைப்பதற்கும்
வாய்ப்பைச் சமனாய்ப் பகிர்ந்து சுகிப்பதற்கும்.
ஏய்ப்பை ஒழித்தே இணைந்து நடப்பதற்கும்
நெஞ்சம் இசைந்தார்
நிகழ்த்தினர் நின் பயணம்.**


கவிஞர்
இ. முருகையன்

இங்கு குறுகிய வரலாற்றையே கொண்டிருந்தாலும் வலிமையுள்ள ஆயுதங்களை கண்டுபிடித்து பகையழித்தவர்களை கவிஞர் மனக்கண்முன் கொண்டுவருகிறார். மனக் கண்ணின் ஒருபுறம் உலகில் யூத இனத்தையே இல்லாமல் செய்ய வேண்டும் என்று ஹிட்லர் பல லட்சக்கணக்கான யூதர்களை படுகொலை செய்த பின்னும் தப்பிப் பிழைத்தவர்கள் ஒன்றுசேர்ந்து உருவாக்கிய அரேபிய் நாடுகளையே ஆட்டிப்படைக்கும் குட்டி நாடான ஸ்ரேல் தெரிகிறது. மறுபுறமோ ரஷ்யா, அமெரிக்கா ஆகிய இரண்டு வல்லரசுகளாலும் நேட்டோப் படைகளாலும் வேட்டையாடப்பட்ட பின்னும் அமெரிக்கா வெளியேறிய அடுத்தவாரமே ஆட்சியைப் பிடித்த தலிபான்கள் தெரிகின்றனர். இந்த வெற்றிகளுக்கெல்லாம் காரணம் கிடைத்த வாய்ப்புகளைச் சமமாக பகிர்ந்து கொண்டு ஒருவரை ஒருவர் ஏமாற்றாமல் இணைந்து ஒற்றுமையாக நடந்தமையே என கவிஞர் குறிப்பிடுகிறார். கவிதையின் நிறைவிலே கவிஞர் உலகிலுள்ள பலரும் பழைய சுமைகளைக் குறைத்து கைப்பைக்குள் வைத்து கருமங்கள் ஆற்றுகின்றனர். புத்தி நுட்பம்,செய்கை நுட்பம், போக்கு நுட்பம் என்பவற்றால் சித்தி பல ஈட்டிச் செகத்தினையே ஆட்டுகின்றனர் எனக் கூறுகின்றார். எனவே நாங்களும் நுட்பமான வழிமுறைகளை கடைப்பிடித்து எம்மை வழி நடத்தும் ஆற்றல் மிக்க தலைவர்களைப் பெறவேண்டும். அவர்களின் தலைமையின் கீழ் வேண்டாத குப்பைகளை விலக்கி, நல்ல விடயங்களை தெரிந்தெடுத்து அப்பாலே செல்ல வேண்டும். உலக மக்களுக்குச் சமமாக நாமும் உயர வேண்டும் என்று கூறிக் கவிஞர் முருகையன் கவிதையை நிறைவு செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ ஆர்.லயனல்

# அஸ்வின் அரசியல்

விளையாட்டு

இந்திய அணிக்குள் உள்ளக முரண்பாடு மீண்டும் பூதாகரமாகி விட்டதா என்ற எண்ணவோட்டங்கள், வாக்குவாதங்கள் தொடங்கிவிட்டன. இந்திய டெஸ்ட் அணித் தெரிவையும் அதில் அஸ்வினின் புறக்கணிப்பையும் மையப்படுத்தித்தான் இந்த வாக்குவாதங்கள் உச்சம் பெறுகின்றன. அதிலும் இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஓவல் டெஸ்ட் ஆட்டத்துடன் கோலியின் தலைமைத்துவம் மீது எண்ணற்ற விமர்சனங்கள் கொட்டிக் குவிக்கப்படுகின்றன. அது ஏன்? அந்த விமர்சனங்களின் மீதுள்ள நியாயத்தன்மை என்ன ? இந்த விமர்சனங்களுக்கு கோலி கொடுக்கும் பதில் யாது ?

இங்கிலாந்து ஆடுகளங்கள் பொதுவாக வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை. இதனால் அஸ்வின், ஜடேஜா இருவரில் ஒருவர்தான் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் இருக்கமுடியும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், இந்த எதிர்பார்ப்பு முதலிரு ஆட்டங்களுக்கான அணித் தெரிவின் மட்டில்தான் இருந்தது. ஏனெனில் தொடரின் முதலிரு ஆட்டங்கள் நடைபெற்ற நொட்டிங்ஹாம் மற்றும் லோட்ஸ் ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்கு முழுவதும் ஒத்துழைக்கக்கூடியன. ஆதலால் அந்த ஆட்டத்துக்கான அணியில் அஸ்வினின் புறக்கணிப்பு கொஞ்சம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. மூன்றாவது ஆட்டம் நடைபெற்ற லீட்ஸ் ஆடுகளம் கொஞ்சம் சுழலுக்கு ஒத்துழைக்கும். இதனால் அஸ்வின் இந்த ஆட்டத்தில் களமிறங்க வேண்டும் என்று பலரும் விரும்பினார்கள். ஆனால், அந்த ஆட்டத்தில் அஸ்வின் புறக்கணிக்கப்பட்டார். அதுவே அதிர்ச்சியாக இருக்கையில், தற்போது நான்காவது டெஸ்ட் ஆட்டம் நடைபெற்றுவரும் ஓவல் டெஸ்ட்டில் இருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளார் அஸ்வின். ஆக, இது அதிர்ச்சி மேல் அதிர்ச்சி.

## ஓவல் சுழலுக்கானது

இங்கிலாந்தில் சுழல்பந்து வீச்சுக்கு ஏற்றதொரு ஆடுகளம் இருக்கின்றதென்றால், அது ஓவல்தான். எனவே இந்த மைதானத்தில் இந்திய அணி அஸ்வின், ஜடேஜா என்ற சுழல்க் கூட்டணியுடன் களமிறங்கும் என்று கருதப்பட்டது. விளையாட்டுலகமே அஸ்வினின் வருகையை எதிர்பார்த்தது. இங்கிலாந்து அணித் தலைவர் ரூட், ஓவல் டெஸ்டுக்கு முன்னதாக வழங்கிய செவ்வியொன்றில், 'அஸ்வினின் பந்துவீச்சை ஓவலில் எதிர்கொள்ளத் தயார்' என்று அறிவித்திருந்தார். ஆனால், அஸ்வின் நீக்கப்பட்டார். அவர் களமிறங்கவில்லை. ஜடேஜாவுடன் சர்துல் தாக்கூர் அணிக்குள் அழைக்கப்பட்டுள்ளார்.

தாக்கூர் முதல் இன்னிங்ஸில் அரைச்சதம் விளாசி இந்திய அணியின் ஓட்டக் குவிப்புக்கு உந்துசக்தியாக இருந்தார் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அஸ்வின் நீக்கப்பட்டமை பெரும் பின்னடைவு. மடமைத்தனம்தான்.

## கோலியின் புதுக்கதை

ஓவல் டெஸ்ட் ஆட்டத்தில் அஸ்வின் களமிறக்கப்படாமைக்கு சில காரணங்களை செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார் கோலி. இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசையில் இடதுகை வீரர்கள் அதிகம். ஆதலால் அஸ்வின் களமிறக்கப்படவில்லை என்றுள்ளார் கோலி. எவ்வளவு பெரிய முரண் பதில் இது. அஸ்வினின் பலமே இடதுகை பந்துவீச்சாளர்களுக்கு பந்துவீசுவதுதான். சகலதுறை வீரராக மூன்று வகையான கிரிக்கெட் ஆட்டங்களிலும் கொடிகட்டிப் பறக்கும் ஜடேஜாவுக்கு ஒரு பலவீனம் இருக்கின்றதென்றால் அது இடது கை துடுப்பாட்ட வீரர்களுக்குப் பந்துவீச சிரமப்படுவதுதான். ஐ.பி.எல். தொடர் முதல் ரஞ்சித் தொடர்வரை இதற்கு உதாரணங்கள் கொட்டிக் கிடக்கின்றன. இவ்வாறிருக்கையில், அஸ்வின் புறக்கணிக்கப்படுகின்ற மைக்கான உண்மைக் காரணம் என்ன என்பது கோலியைத் தவிர வேறு எவருக்கும் தெரியவில்லை. கோலியின் பெரும் பலமே அவரின் தன்முனைப்புத்தான் (ஈகோ). அவரின் பலவீனமும் அதுவேதான். தன்முனைப்பு உள்ள தலைவர்கள் டோனி, வில்லியம்சன், வில்லியர்ஸ் போன்றளவுக்கு வரலாற்றில் இடம்பிடிப்பதில்லை. கோலி வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும் என்பதுதான் கிரிக்கெட் ரசிகர்களின் பெருவிருப்பு.

**" அஸ்வின் என்ற அஸ்திரத்தை புஸ்வாணமாக்குதல் முறையோ?"**





# சர்வமும் சீன மயம்!

○ ஆர்.பிரகாஷ்

உலக வல்லரசான அமெரிக்காவுக்குப் போட்டியாக சீனா உருவெடுக்க ஆரம்பித்து பல தசாப்தங்கள். இந்தப் போட்டிக்கான அத்திபாரம் பல ஆண்டுகளுக்கு முன்னரே போடப்பட்டாயிற்று என்ற போதிலும் இதன் ஆகப்பெரிய நகர்வுகள் அண்மைக்காலங்களில்தான் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் ஆப்கானிஸ்தான்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் வெளியேற்றத்தின் பின்னர் எதிர்பாரா எழுச்சியைக் கண்டனர் தலிபான்கள். அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் கணித்ததை விடவும் மிகத் துரிதமாக ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் கொடியேற்றியது தலிபான் படை. இந்தப் பேரெழுச்சியின் பின்னணியில் சீனாவும் அதன் ஆயுத, தொழில்நுட்பமும் இருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. தற்போது அந்த கருதுகோள்கள் படிப்படியாக எண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்னர் தலிபான்களுக்கு அங்கீகாரத்தை வழங்கிய முதலாவது நாடு சீனாதான். தலிபான்களுடன் இணைந்து செயற்பட - பயணிக்கத் தயார் என்ற அறிவிப்பை சீன அதிபர் ஜி ஜின்பிங்தான் முதலில் விடுத்தார். பாகிஸ்தான்கூட சீனாவுக்கு அடுத்தபடியாகத்தான் தன் ஆதரவைத் தெரிவித்தது. அப்பொழுதே ஆப்கானிஸ்தானை வைத்து சீனா ஏதோ பெரிதாகத் திட்டமிட்டுவிட்டது என்பது புலப்பட்டது. தற்போது அதன் தொடர்ச்சியாக தலிபான்களிடம் இருந்து பெரியதொரு அறிவிப்பு வெளிவந்துள்ளது. 'ஆப்கானிஸ்தானை சீனாவின் நிதியைக் கொண்டு மீண்டும் கட்டியெழுப்பவுள்ளோம்' என்பதுதான் அந்த அறிவிப்பு.

உலக உலா

ஆப்கானிஸ்தான் தாமிர சுரங்கங்கள் நிறைந்த பூமி. இந்தத் தாமிர சுரங்கங்களைத்தான் சீனா அடுத்ததாக இலக்கு வைக்கும். இந்த சுரங்கங்களை ஒப்பந்தத்தின் அடிப்படையில் நவீனப்படுத்தி தன்னகப்படுத்த சீனா எத்தனிக்கும் என்பது பொதுவான எண்ணப்பாடு. அதைநோக்கித்தான் சீன தேசத்தின் நகர்வுகளும்கூட அமைந்துள்ளன.

கடன்பொறிக்குள் ஒருநாட்டைச் சிக்க வைப்பது சீனாவைப் பொறுத்தவரைக்கும் கைவந்த கலை. வீட்டோ அதிகாரமும் சீனாவிடம் உள்ளது. ஆதலால், தலிபான்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் மேற்கொள்ளப்படும் நகர்வுகளுக்கு இந்த வீட்டோவால் பதிலடி கொடுத்து தலிபான்களைக் காக்கும் வாய்ப்பும் சீனாவுக்கு உண்டு. அதனால், சீனாவை நம்பியிருக்க வேண்டிய கட்டாயத் தேவையும் தலிபான்களுக்கு உள்ளது. அத்துடன் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்குக் கடன்களைக் கொடுத்து அந்த நாட்டில் படிப்படியாக ஆதிக்கம் செலுத்தும் நுட்பங்களையெல்லாம் சீனாவுக்கு வேறு எந்தத் தரப்பும் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆசிய வட்டகையிலேயே ஏகப்பட்ட உதாரணங்கள் இதற்காக இருக்கின்றன. தற்போது சீனாவின் இந்த இருமுனைப் பொறிக்குள் சிக்கியிருக்கும் புதுவரவு ஆப்கானிஸ்தான். தலிபான்கள் சீனா தம்மை மீட்கும் என்று நம்புகின்றனர். உண்மையில் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்ததை விடவும் பேராபத்து இப்போதுதான் தலிபான்களுக்கு ஆரம்பிக்கின்றது. அதுவும் தலிபான்களின் விருப்பத்துடன் தனது பொறிக்குள் அந்த அமைப்பை வெகுவாகச் சிக்கவைக்கவுள்ளது சீனா. ஒரு கட்டத்தில் தலிபான்கள் விரும்பினால்கூட சீனாவை வெளியேற்ற முடியாத நிலை வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நகரத்தின் அடையாளங்களை மேம்படுத்தல்

ஐந்திரன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை உதயன்- சஞ்சீவி பத்திரிகையில் வெளிவந்த 'நகரபிதாவுக்குக் குடியானவன்' எழுதிய கடிதத்தை வாசிக்க நேர்ந்ததில் ஏற்பட்ட சிந்தனைகளை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளும் ஆசையின் விளைவே இச்சிறு கட்டுரை. யாழ்ப்பாண நகரத்தை, வீதி அகலிப்பு முதலிய பலநடவடிக்கைளால் அழித்துக் கொண்டிருக்கும் செயற்பாடுகள் மீதான கோபமும், மனவருத்தமும் கூட இந்தக்கட்டுரை எழுதக் காரணமாகும். ஏன் யாழ்ப்பாணத்தில் துறைசார் நிபுணர்களை எல்லா இடங்களிலும் அகற்றிவிடுதல் என்பதை அதிகாரிகள் ஒரு வியூகமாகக் கடைப்பிடிக்கிறார்கள் என்ற காரணம் கட்டுரையாளர் ஜீவன் தியாகராஜா வைப் போல எனக்கும் புரியவில்லை.

போருக்குப் பின்னரான மீள் கட்டுமானம் பற்றிய சிந்தனைக்கும் செயற்பாட்டுக்குமான தேர்ந்த முன்னுதாரணமாக இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய ஜெர்மனியையும், ஜப்பானையும் கூறுவார்கள். அவை தமது பொருளாதார அபிவிருத்தியோடு பண்பாட்டுத் தனித்தன்மையையும் - வரலாற்று அடையாளத்தையும் தக்க வைக்கும் முயற்சியையே அவற்றின் வடிவமைப்பின் பிரதானமான கொள்கையாகக் கடைப்பிடித்து இருந்தன என்று கூறுவார்கள். இந்தப்பின்னணியில் வைத்து, போருக்குப் பிற்பட்ட யாழ்ப்பாண நகரத்தை மீள்கட்டமைத்தல் என்ற விடயப்பரப்பினைப் எடுத்துப் பார்ப்போமாயின், அந்தச் செயற்பாடானது மிக மிகக் குழப்பமூட்டுவதாகக் காணப்படுகிறது என்பதை அடிப்படை நகரத் திட்டமிடல் பற்றிய பார்வையுடைய எவரும் புரிந்து கொள்வார்கள். அதேசமயம், யாழ்ப்பாண நகரத்தின் பண்டைய அடையாளங்களை, வரலாற்றுத் தடங்களை அழிப்பதை திட்டமிட்ட உள்நோக்கத்துடன் ' யாழ்ப்பாண நகர அபிவிருத்தி' என்றகவர்ச்சியான சுலோகத்துடன்செய்கின்றார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

ஒரு நகரத்தின் மீள் கட்டுமானத்தில் அதன் பார்வைத்தோற்றம் மிகப்பெரிய பங்காற்றுகின்றது. இந்தப் பார்வைத்தோற்றத்தைக் கட்டமைக்கும் பிரதான அமைப்புகளாக அவ் இடத்தின் தெருக்கள், பாதையோர நடைபாதைகள் , கட்டட முகப்பு அமைப்புகள் என்பன முக்கிய இடம் பெறுகின்றன. இங்கு கட்டட முகப்பு அமைப்பு (facade) என்பது இவற்றில் தலையானதாகும். இதுவே மனிதருக்கும் கட்டட சூழலுக்கும் இடையிலான பிணைப்பை உருவாக்கும் முக்கிய காரணியுமாகும். அதுவே நகரத்தின் பண்புகளைச் சிருஷ்டிக்கும் முக்கிய அலகுமாகும். அவ்வகையில், அவ்விடத்தின் கட்டடக் கலையின் தனித்தன்மையும் சிறப்பையும் அவை உருவாக்குவதுடன், அம் மக்களின் கலை, காலாசார வாழ்வியல் விழுமியங்கள், பொருளாதார நிலை , அறிவியல் சார் விழிப்புணர்வு என்பவற்றை ஒருங்கே வெளிப்படுத்தி நிற்பவையாகவும் காணப்படுகின்றன. இன்னொருவகையிற் சொன்னால் அந்த மக்களின் கீர்த்தியை -செழுமையை மற்றவர்களுக்கு காட்டி நிற்கும் தோற்ற அமைப்பாகவும் அவை காணப்படுகின்றன. இப்படி எல்லாம் இருக்கும்போது அதனைக் குழப்பிச் சிதைத்து அடையாளமற்ற ஒன்றாக்குகின்றோம். இது தமிழ் மக்களுக்கு வரலாறும் இல்லை; பண்பாட்டுச் சிறப்புமில்லை என நிறுவ முயலுபவர்களுக்கு இலகுவாக வழி சமைத்துக் கொடுக்கும் ஒன்றாகிவிடும் என்பதிற் சந்தேகம் இல்லை.


மனிதரால் உருவாக்கப்பட்ட மேற்பரப்புக்கள் அனைத்துமே குறிப்பிட்ட ஒரு கருத்தை அல்லது விடயத்தை வெளிப்படுத்தவும், கடத்துவதற்குமாகவே கட்டமைக்கப்படுகின்றன என்பது அறிஞர்களது கூற்றாகும் . எனவே, ஒன்றிணைந்த - கட்டட முகப்புத் தோற்றமானது பல்வேறுதரப்பட்ட பௌதிக இடஅமைவு நிலவுரு தொடர்பான ஒத்திசைவுகளைக் கொண்டதாக அடிப்படையில் காணப்படவேண்டும் என்பர். அது அவ்விடம் சார் கட்டடப் பாரம்பரியத்தை, அதனடிப்படைக் கோட்டுபாட்டு நிலைப்பாடுகளை, பாராம்பரியத்தை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும் என்பதில் நாடுகளும், சமூகங்களும் கவனமாயுள்ள நிலையில் அதற்கு எதிரான திசையில் நாம் பயணம் செய்கிறோம்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளை எடுத்து நோக்கினால், குறிப்பாக எங்களில் பலருக்கும் ஏதோவொரு வகையில் நன்கு பரிச்சயமான பரீஸ், லண்டன், பார்சிலோனா போன்ற நகரங்களின் பெயர்களைச் சொன்னவுடனேயே எமக்கு முதலில் அவற்றின் பார்வைத்தோற்றமே எமது மனக் கண்ணிற்தோன்றும். அதுதான் அதன் தனியடையாளமாகும். அது அவர்களால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது; அவற்றின் அழகான கட்டடவரிசைகளுடன் கூடிய, அதனுடைய திட்டமிட்ட தனித்துவமே அவற்றை நோக்கி உலகத்தை ஈர்க்கிறது என்பதைநாம்புரிந்துகொள்ள வேண்டும்.

போர்ச் சூழல் காரணமாக அங்கும் இங்கும் மூடப்பட்டு ஓட்டை ஒடிசலாக எம்மிடம் 'அபிவிருத்திக்காக' ஒப்படைக்கப்பட்டு ஏறத்தாழ 11 வருடங்கள் கடந்தநிலையில் இன்று நகரத்தில் எஞ்சியுள்ளது, தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும் வர்த்தக நிறுவனங்கள் காவிவந்த 'Alcobond Clading Sheet' எனும் பெரியளவிலான வர்த்தகத்தட்டிகளான முகப்புக் கலாசாரம் மட்டுமே. இதன் மூலமாக தென்னிலங்கையில் உள்ள இன்னொரு நகரத்தைப் போல யாழ்ப்பாணத்தை மாற்றி அதன் தனித்துவத்தையும் - அடையாளத்தையும் அழிக்க உதவியுள்ளோம். அது யாழ்ப்பாண நகரத்தின் காட்சிப்புலத்தை ஒத்திசைவற்ற சிறிய பெரிய வர்ண ஜால தட்டிகளின் நகராக்கிச் சீரழித்திருக்கிறது(படம் 02).


(படம் 01 குறிப்பிட்ட பண்புத்தொடர்ச்சியுடைய ஆஸ்பத்திரிவீதி கடைத்தொகுதிகள்)


படம் 02 ஆஸ்பத்திரி வீதி : ஒழுங்கற்ற விளம்பரத்தட்டிகள், ஒழுங்குகுலைக்கப்பட்ட நடைபாதைகள்


(படம் 03 ஆஸ்பத்திரி வீதி : ஒழுங்குநிலையில் அதன் தோற்றப்பொலிவு எவ்வாறு இருக்குமெனக் காட்டும் படம்)

காலனிய காலத்தின் பிற்பகுதியிலும், அதற்கு பிற்பட்ட முதற் காலகட்டத்திலும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட கட்டடக் கலை, நகர அமைப்பு சம்பந்தமான விழிப்புணர்வும் மேலாண்மையும் அக்காலப்பகுதியில் நிறுவப்பட்ட யாழ் நூல் நிலையம், யாழ்ப்பாண நகரமண்டபம், புகையிரத நிலையம் என்பனவற்றிலும், அதற்கு முற்பட்ட காலப்பகுதியில் கட்டப்பட்ட புகழ்பூத்த பல பாடசாலைகளின் கட்டடங்களிலும் காணப்படுகிறது . அதன் தொடர்ச்சியை இல்லாது ஆக்குவதைத்தான் இன்று நாம் முதன்மைப் போக்காக்கி உள்ளோம்.

இது எமது கல்வி முறையின் இயலாமையா அல்லது சிறுபான்மையினருக்கு எதிரான அரசியலின் வெற்றியா? அல்லது இரண்டும் தானா தெரியவில்லை. மிஞ்சி இருக்கும் கட்டடங்களில் இன்று நாம் செய்யும் ஒவ்வாத இணைப்புக் கட்டடங்கள், முகப்புக்கள் என்பன யாவும் யாழ்ப்பாணத்தின் அறிவுலக வங்குறோத்து நிலைமையைக் காட்டுகின்றது என்றால் அது மிகையாகாது.

ஒருபுறம் தென்னிலங்கையின் காலிக்கோட்டைக்கு சுற்றுலா சென்று அவற்றின் கட்டடக்கலை அம்சங்களையும் நகர அமைப்பையும் வியந்து வரும் நாம் அதே கட்டடப்பாணியும் நகர அமைப்பும் உடைய எமது யாழ் கோட்டையைச் சுற்றிய குடியிருப்புகளில் எஞ்சியவற்றையும் அழித்துக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசின் நேரடிக்கட்டுப்பாட்டுள் வரும் இந்தச் செயற்பாடுகளோடு தொடர்புடைய திணைக்களங்களை விடுத்துப் பேசினாலும் யாழ்ப்பாண மாநகரசபை மற்றும் யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் பங்கு இது தொடர்பாக யாது? ஒரு புறம் அரசின் நேரடித்தலையீட்டினால் காலிக்கோட்டை புனரமைக்கப்பட்டு யுனஸ்கோவின் அங்கீகாரம் பெற்ற பாரம்பரிய இடமாக விளங்கி பெருமையையும் அந்நியசெலாவணியையும் இலங்கைக்கு ஈட்டித்தருகிறது., இன்னொருபுறம் நமது அதே காலத்தினையும், கட்டடக்கலை மரபினையும் ஒத்த யாழ். நகரப்பகுதி அழிந்து கொண்டிருப்பதற்கு யார் பொறுப்புக் கூறுவார்கள்?

காலனிய நகரம் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் கோயில் நகரமாக அறியப்படும் வண்ணார்பண்ணைச்சிவன் கோவில் சார்ந்த கட்டட அமைப்புகளும் காலத்தின் கோலத்தில் சிக்குண்டு பொலிவிழந்து காணப்படுவது இன்னொரு வருந்தத்தக்க நிலைவரமாகும். காலனிய காலத்தில் மட்டுமன்றி அவற்றிற்கு முன்னேயே யாழ்ப்பாணத்தில் மிகச்சிறந்த நகர அமைப்பும் கட்டடக்கலைமரபும் காணப்பட்டதென இவற்றினை நேரடியாக பார்வையிட்ட ஆங்கில காலனித்துவ ஆட்சியாளர்களின் குறிப்பேட்டில் இருந்து அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அவ்வாறான அழகிய தோற்றத்தை, அதன் பண்பாட்டு அடையாளங்களை, வரலாற்றுச் சிறப்பை கொண்டிருந்த யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலையை அதிலிருந்து மீட்டெடுத்து முன்னேற்றுவது தொடர்பான முன்னெடுப்புக்களைச் சரியான முறையில் செய்யாது இருப்பது ஏன்? அண்மையில் நகரபிதாவின் தலைமையில் வீதி அகலிப்பு நடவடிக்கைக்கு வர்த்தகர்கள் பூரண ஒத்துழைப்பை நல்குவதாக தெரிவித்ததான செய்தி மகிழ்ச்சிக்குரியதாகும், எந்தவொரு நாட்டின் நகரத்தின் வளர்ச்சிக்கும் அவர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. இந்தச்சுமுகமான விழிப்புணர்வையும் பெருந்தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு யாழ் நகரத்தை மீட்டெடுக்க முடியும் என்பது எனது நம்பிக்கை (படம்03).

இவ்வாறான முன்னேற்றங்களில் முன்னுதாரணமாக திகழும் நகரங்களையும், அவற்றின் கட்டமைப்புக்களையும் ஆராய்ந்து நகரத்திற்குரிய முதன்மைத் திட்டத்தினையும் விரிவான திட்ட வரைபுகளையும் அமைப்பது இன்றிமையாததாகும். அவ்வாறனதொரு செயற்திட்டத்தினையே நமது மாநகரசபையும் மேற்கொண்டிருக்கும் அல்லது அதில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளும் என்பது எனது திடநம்பிக்கை.

என்னையும், என்னைப்போன்ற பொது மக்களையும் எமது சமூகத் தலைவர்கள், அரசியல்வாதிகள், நகரபிதா முதலியோர் கைவிட மாட்டார்கள் என்றே நம்புகிறேன். மாநகரசபைகளில் இவ்வாறான திட்ட வரைபுகள் மக்களின் எளிதான பார்வைக்கு - பெரியளவில் அதிக கட்டுப்பாடற்ற முறையில் பார்வையிடக்கூடியதாக இருக்கவேண்டும். அத்துடன், அவர்கள் அது தொடர்பான கருத்துக்களை பதிவுசெய்யக்கூடியதாகவும் இருக்கவேண்டும்; அதுதான் ஜனநாயகமானதும் கூட.

(15ஆம் பக்கம் பார்க்க)

○ வேலணையூர் சுரேஷ்

(கொரோனாக் காலப் பதிவுகள்)



# கொரோனா கற்றுத் தரும் வாழ்க்கைப் பாடம்

46 கண்ணீரில் விழிமுட்டும் காலம் முன்பும்
கருமநோய் அலைகிறது எம்முன் பின்பும்
தண்ணீரில் மீன்வாழும் நாம்வாழ்வோமா?
தணியாமல் நோய்சூழ உயிர் மீள்வோமா?
மண்கொள்ளாத் துயர்மேவி மமதை கொண்ட
மானிடர் பேரிடர் 'கொரோனா' ஆச்சே
எண்ணில்லா உயிர்போயும் நோய் போக
ஐயய்யோ இன்னுமேன் வழியைக் காணோம்

47 மண்ணுக்கு வினையீந்த தாலோ என்னோ
மரணத்தின் வாயில் சிக்கிப் போனோம்
விண்ணுக்கு வெங்கொடுமை செய்த தாலோ
விதிசறுக்கி விளையாடப் பலிக ளானோம்
பண்ணுகின்ற பழிபாவத் தாலே தானோ
படைத்தவனும் கைவிடப் பதறிப் போனோம்
நுண்ணுயிர்க் கிருமிக்கே அறிவு கெட்டு
நூலாகிக் கிடக்கிறோம் நுடங்கிப் போய்

48 ஊழ்வினைப் பயனிவ் உலகம் யாவும்
உறுத்தி உணர்த்துதே உயர்ந்த பாடம்
சூழ்வினை துயரும் சூழ்ந்து தாக்கி
சுத்தமாய்ப் புகட்டுது தக்க பாடம்
பாழ்வினை நோயால் பல இடர்பட்டும்
படிக்க வைக்குது பற்பல பாடம்
தாழ்வினை உயர்வினைக் கடந்து வாழ
கற்றுக் கொடுக்குது கொரோனா பாடம்

49 தப்பென அறிந்தும் தவறுகள் இழைத்தோம்
தப்பிட முடியா நோய்க்கு மலைத்தோம்
இப்புவி ஒழுங்கை மாற்றத் துடித்தோம்
இயல்நிலை குழம்பத் தடுமாறி விட்டோம்
எப்போதும் இயற்கை அன்னையாய்க் காக்கும்
எந்நோயையும் இயற்கை மருந்தே தீர்க்கும்
இப்போது புரிகிறதா மானிடா? உலகம்
இயற்கையின் கையில் உன்கையில் அல்ல

50 அறம் செய்து வாழாதார் வாழ்வில் என்ன
அறப்படித்தும் பயனில்லை. பிறர் வாழக்
கரம் கொடுத்து உதவாதார் போய் எந்தக்
கடவுளைக் கும்பிட்டும் பல னில்லை
தரம்நோக்க வாழ்ந்தென்ன நோய் துன்பம்
தரம்பார்த்து வருவதில்லை ஆதலினால்
புறம்போக்காய் வாழாமல் பகிர்ந் துண்டு
புண்ணியம் காணிலது பிறவிப் பலன்

(தொடரும்)

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

# கி.ரா.: நினைவுகள்



**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

33

இப்போது அவர் பெயர் புதுவை இளவேனில். புதுவையில் அறியப்பட்ட நிழற்படக்கூடத்தை நடத்திக்கொண்டிருக்கிறார். நிகழ்காலத்தில் நிழற்படக்கூடங்களுக்கு நல்ல வருமானம் இருக்கிறது என்பதால் அதை நிறுவி நடத்துகிறார். கல்யாணப் போட்டோ எடுப்பதைத் தாண்டி இப்போதெல்லாம் தொடர்ச்சியாகப் பிறந்தநாட்களுக்கு வெவ்வேறு இடங்களைத் தேர்வுசெய்து கொண்டாடும் நடுத்தரவர்க்கம், படங்களாகப் பதிவுசெய்யத் தொழில்முறைப் புகைப்படக்காரர்களை அணுகுகிறார்கள். கையிலிருக்கும் அலைபேசிக் காமிராக்களின் படங்களைத் தாண்டியும் வீட்டு விசேச நிகழ்ச்சிகளான பூப்புனித நீராட்டு, நிச்சயதார்த்தம், திருமணத்திற்கு முன் சந்திப்பு, வளைகாப்பு, அறுபதாம் கல்யாணம் என ஒவ்வொன்றையும் படங்களாகப் பதிவுசெய்து கணினியின் பக்கங்களில் தொகுத்து வைத்துக்கொள்கிறார்கள். முன்புபோல் ஆல்பம் போட்டு வைத்துக்கொள்வதில்லை.

இளவேனில் நிழற்படக்கூடத்தை நடத்தினாலும் அவர் ஒரு கலைஞர். மனிதர்களை - அவர்களின் பலவிதமான உணர்வுகளோடு படம் பிடித்த நிழற்படக்கலைஞர். அவரால் படம் பிடிக்கப்பட்ட தமிழ்நாட்டு ஆளுமைகள் பலவிதமானவர்கள். முன்னாள் முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியைப் பலவிதமாகப் படம் எடுத்தவர். அவரைக்கூட ஓர் எழுத்தாளர் என்ற அளவிலேயே படங்களாக எடுத்துத் தந்தார். எழுத்தாளர்கள் பலரும் அவரது காமிராவினால் பிடிக்கப்பட்ட படங்களில் புன்னகைக்கவும், நிற்கவும், நடக்கவும், நண்பர்களோடு பேசிக்களிக்கவும் விரும்பினார்கள். பிரபஞ்சன், ரவிக்குமார், ராஜ்கௌதமன், லெனின் தங்கப்பா,ரமேஷ் ப்ரேம், போன்ற புதுவையோடு தொடர்புடைய எழுத்தாளர்களுக்கு அப்படியான படங்களை எடுத்துக்கொடுத்திருக்கிறார். அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டு எழுத்தாளர்களான தேவதேவன், பா.செயப்பிரகாசம், ஞானக்கூத்தன், கனிமொழி, பாமா, இன்குலாப், கோவை ஞானி, ராசேந்திரச் சோழன், அழகிய பெரியவன், தியோடர் பாஸ்கரன், வண்ணதாசன், கலாப்ரியா, சாரு நிவேதிதா, ஆ.ரா.வேங்கடாசலபதி, சுகுமாரன், சல்மா முதலானவர்களைப் படங்களாக எடுத்து மகிழ்வித்தவர். என்னையும் அப்படியான படங்களில் பார்க்க ஆசைப்படுவதாகச் சொல்வதுண்டு.

புதுவைக்கு வரும்போது சொல்லுங்கள்; படம் எடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டே இருப்பார். அவர் எடுக்க விரும்பிய காட்சிகள் நானும் கி.ரா.வும் உட்கார்ந்தும் நடந்தும் பேசித்திரிந்த காட்சிகளை. அந்தக் காட்சிகளை விவரிப்பார். "அப்பா (கி.ரா.வை அவர் அப்பொழுதே இப்படித்தான் அழைத்தார்) இருந்த ஒவ்வொரு வீட்டிலும் அவரோடு உங்களைப் பார்த்திருக்கிறேன். திருநெல்வேலிக்குப் போன பிறகும் வந்து சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த காட்சிகள் எனக்குள் இருக்கிறது. நீங்களும் அவரும் தாகூர் கலைக்கல்லூரிக்குப் பின்புறம் விமான நிலையப் பாதைகளிலும் விளையாட்டு மைதானங்களிலும் நடந்துகொண்டே பேசிக்கொண்டு போவீர்கள். பல நேரம் அவர் முன்னே நடக்க, நீங்கள் ஓரடி பின்னால் போவீர்கள்.

சில நேரங்களில் நின்று கையை அசைத்து விவாதிப்பீர்கள். அவர் அதை அமைதியாகக்கேட்டுக்கொண்டிருப்பார். அந்தக் காட்சிகளையெல்லாம் இப்போது திரும்பவும் படமாக்க முடியாது என்றாலும் பல்கலைக்கழகம், கடற்கரை, கி.ரா. குடியிருந்த வீடுகள், காலை நடைக்குப் போகும் விமானநிலையப்பாதை எனப் பல இடங்களில் எடுக்கவேண்டும் என்று சொன்னார். என்னைப் படங்கள் எடுக்கலாம். என்னோடு கி.ரா. இருக்கும் படங்களை எடுக்க முடியாது.

இப்போது புதுவை இளவேனிலாக இருக்கும் இவரை முதலில் பாபுவாகவே அறிவேன். இலாசுபேட்டை தாகூர் கலைக்கல்லூரிச் சாலையில் இருந்த வீட்டிற்குப் போகும்போது தினசரிகள் வாங்கி வந்து கொடுக்கும் சிறுவனாகப் பார்த்தேன். பேப்பர் போடும் பையன் மேலே வந்து தந்துவிட்டுப் போகிறான் என்று நினைத்தேன். ஆனால் பேப்பரைக் கொடுத்துவிட்டுக் கணவதி அம்மாவிடம் காபி வாங்கிக் குடித்துவிட்டுப் பை ஒன்றை வாங்கிக் கொண்டு போனான். அவர்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்கித்தருவதற்காகத் தினசரி வந்துவிடுவான் என்பது பின்னர் தெரிந்தது.

பின்னர் ஒருமுறை பார்த்தபோது,அந்தச் சிறுவன் இளைஞனாக மாறிய தோற்றத்தில் இருந்தான். ஒரு ஆட்டோவின் பக்கத்தில் நின்றிருந்தான். கி.ரா. வீட்டின் வாசலில் நின்றிருந்த அந்த வண்டியைக் கவனிக்காமல் படியேறினேன். அந்த இளைஞன் எனக்கு வணக்கம் சொன்னான். நானும் வணக்கம் தம்பி என்று சொல்லிவிட்டு மேலே போய்விட்டேன். போனதும் எங்கேயாவது கிளம்பிறீங்களா? என்று கி.ரா.விடம் கேட்டேன்.

'ஏன் அப்படிக் கேட்கிறீங்க'



"கீழே அந்தப் பாபு ஆட்டோவோடு நிற்கிறாரே "என்று சொன்னேன். அவர்களுக்காக அவன் ஓர் ஆட்டோவை அழைத்துக் கொண்டுவந்திருக்கிறான் என்று நினைத்து அப்படிச் சொன்னேன்.


"ஓ.. அதுவா.. பாபுவோட வண்டிதான். வேலையில்லாமெ இருக்கிறானேன்னு வங்கியில் சொல்லி ஏற்பாடு செய்தேன். நானும் கொஞ்சம் பணம் கொடுத்தேன். இப்போ அவன் ஆட்டோவுக்குச் சொந்தக்காரன். காலையில் வருவான். எங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொடுத்து வண்டியெடுத்துட்டுப் போய் ஆட்டோ ஸ்டேண்டில் இருப்பான்" என்றார். நான் பாண்டிச்சேரியில் இருந்தவரை பாபு சொந்த ஆட்டோவை ஓட்டும் ஆட்டோக்காரராக இருந்தார். சில வருடங்கள் கழித்துப் பாண்டிச்சேரி போனபோது நண்பர் ரவிக்குமாரோடு அவரைப் பார்த்தேன். அவரை அறிமுகம் செய்தபோது 'அவரைத் தெரியுமே. கி.ரா.வீட்டில் பல தடவைப் பார்த்திருக்கிறேன்'என்றேன். "அப்போது அவர் பாபு ; இப்போது புதுவை இளவேனில்" என்று அறிமுகம் செய்தார். புகைப்படம் எடுப்பதில் தேர்ச்சிபெற்று புகைப்படக் கலைஞராக மாறிக்கொண்டிருக்கிறார் என்று சொன்னார். ரவிக்குமார் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அவரோடு நெருக்கமாக இருந்தார்.

அவர் எடுத்த படங்கள் பல இதழ்களில் வந்துகொண்டிருந்தன. கி.ராஜநாராயணனை மட்டுமல்லாமல், புதுவையின் அடையாளங்கள் பலவற்றை எடுத்து வைத்திருந்தார். கி.ரா.வையும் புதுவையும் இணைத்துப் படங்கள் எடுத்தார். அதை புதுவையின் பிரெஞ்சு அடையாளங்களைக் கொண்ட ஹோட்டல் டெ வில்லாவில் இருந்த மேரி ஹாலில் நடத்தினார் என்பது ஞாபகம். அதன் தொடக்கவிழா அல்லது நிறைவுவிழாவிற்கு வரமுடியுமா? என்று கேட்டார். என்னால் போகமுடியவில்லை. 2003 செப்டம்பரில் புதுவையில் நடந்த அந்தக் கண்காட்சி பிறகு கோவையில் மார்ச் 2004 இல் நடத்தப் பெற்றது. அதற்கு நடிகர் சிவகுமார், ஓவியர் ஆதிமூலம், மலையாள சினிமா இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணன் வந்து பாராட்டினார்கள். கி.ரா.வை படமாகத் தொகுத்தளித்த அந்தப் நிழற்படக் கண்காட்சிதான் புதுவை இளவேனிலைத் தேர்ந்த நிழற்படக்கலைஞராக உலகத்திற்கு அறிமுகம் செய்தது.

*(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான நண்பன்



ம.மயூரபாலன்

மனிதன் ஒருவன் நீண்ட தூரப்புகையிரத பயணத்தை மேற்கொண்டான். தான் போய்ச் சேர வேண்டிய இடத்தை அடைவதற்கு இரண்டு பகலும் ஓர் இரவும் எடுக்கும் என்பதை அவன் அறிந்திருந்தான். அதற்காகச் சில ஏற்பாடுகளையும் செய்திருந்தான். பயணத்தின் ஆரம்பத்திலே ஜன்னலின் அருகில் இருந்து கொண்டு வெளியே நடைபெறும் காட்சிகளைப் பார்த்து ரசித்தான். ஆனால் நேரம் செல்லச் செல்ல அந்தப் புகையிரதத்தின் உள்ளே இருப்பது அவனுக்கு மிகவும் சலிப்பை ஏற்படுத்தியது. அவன் எதிர்பார்த்தது போல பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கவில்லை. அவனுக்குச் சில நிமிடங்கள் கூட நீண்ட ஒரு பொழுதாக இருந்தது. இவ்வாறு மிகவும் சிரமத்துடனும் சலிப்புடனும் அவன் தனது பயணத்தை தொடர்ந்தான். இறுதியாக அவன் இறங்க வேண்டிய இடத்தை புகையிரதம் அண்மித்த பொழுது தனது மூடை முடிச்சுக்களை எடுத்துக்கொண்டு தனது இருக்கையை விட்டு வெளியே வந்தான். புகையிரதத்தின் ஆட்டத்திலே அவனது பை ஒன்று அங்கிருந்த சக பயணியின் மேலே விழுந்து விட்டது. உடனே அவன் அந்தப் பயணியிடம் மன்னிப்புக் கோரினான். அப்பொழுது இந்த மனிதன் அந்தப் பயணியை உற்றுப் பார்த்தான். அவ்வாறு பார்த்த பொழுது அந்தப் பயணி தனது இளம் பராயத்து நெருங்கிய நண்பன் என்பதைக் கண்டு கொண்டான். அப்பொழுது புகையிரதமும் அவன் இறங்க வேண்டிய நிலையத்தை வந்து அடைந்துவிட்டது. தனது நண்பனை அடையாளம் கண்டு கொண்ட சில வினாடிகளிலேயே அவனைப் பிரிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அவனுக்கு ஏற்பட்டது. அப்பொழுது அந்த மனிதன் "நான் முதலிலேயே எனது நண்பனை அடையாளம் கண்டிருந்தால் இந்தப் பயணம் முழுவதும் எவ்வளவு ஆனந்தமாக இருந்திருக்கும்' என எண்ணிக் கவலைப்பட்டான்.



நாம் விரும்பினாலும் சரி ,விரும்பாவிட்டாலும் சரி என்றோ ஒருநாள் இந்த வாழ்க்கை எனும் பயணம் ஒரு முடிவுக்கு வரத்தான் போகிறது. அதுவரை நம் உள்ளேயும் ஒரு நண்பன் இருப்பான். "உடம்பினுள்ளே உத்தமன் கோயில் கொண்டுள்ளான்" என திருமூலர் போன்ற ஞானிகள் கூறியிருக்கிறார்கள். நம் உள்ளே உள்ள உத்தமன் என திருமூலர் சொல்லும் பொழுது அதனை நம்மால் புரிந்துகொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் இதுவரை யாரும் நமக்கு அவ்வாறு தெளிவாகக் கூறியதில்லை. அத்துடன் நாமும் அவ்வாறு சிந்தித்துப் பார்த்ததில்லை. “உங்களின் உள்ளே உள்ள நண்பனை கண்டு கொள்ளுங்கள்" என எந்தவொரு தொலைக்காட்சியிலோ அல்லது எந்த ஒரு வானொலியிலோ நாளாந்தம் கேட்கமுடிவதில்லை. ஆனால் நாம் நம்முள்ளே உள்ள நண்பனைக் கண்டுகொண்டோம் என்றால் இந்த வாழ்க்கை பயணம் ஆனந்தமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும்.

ஒரு தடவை அன்னப்பறவையொன்று ஆந்தைக் குஞ்சுகளை சந்தித்தது. அது அந்தக் குஞ்சுகளுக்கு சூரியனைப் பற்றி மிகவும் அழகாக வர்ணனை செய்தது. அந்த ஆந்தைக் குஞ்சுகளுக்கும் சூரியனை பார்க்கவேண்டும் என்ற விருப்பம் தோன்றியது. அதற்கு அந்த அன்னப்பறவை "சரி நீங்கள் எல்லோரும் என்னுடன் வாருங்கள். இன்று இரவு நாங்கள் அந்த மலையின் மேலே ஏறியிருப்போம். நாளை அதிகாலை சூரியன் உதிக்கும் போது நம்மாலே அதனைப் பார்க்க முடியும்" என சொன்னது. அந்தக் குஞ்சுகளும் அன்னப்பறவையுடன் செல்ல பெற்றோரிடம் அனுமதி கேட்டன. அதற்கு அந்தப் பெற்றோர் "நாங்கள் அவ்வாறு ஒன்றைக் கேள்விப் பட்டதே இல்லை. நமது ஊர்த் தலைவர்களிடம் கேட்டு அதுபற்றி முடிவு எடுக்கலாம்" எனக் கூறின. ஊர்த் தலைவர்களும் ஒன்று கூடி , பேச்சுவார்த்தை நடத்தி இறுதியாகச் சூரியன் என்ற ஒன்று இல்லை என முடிவெடுத்தார்கள். அதனாலே அந்தக் குஞ்சுகளுக்கு சூரியனைப் பார்க்க செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் அன்று இரவு அந்தக் குஞ்சுகள் யாருக்கும் தெரியாது அன்னப்பறவையுடன் மலை உச்சிக்கு சென்றன. மறுநாள் அதிகாலை பார்த்தால் அன்னப்பறவை கூறியது போல மெதுவாக அந்தச் சூரியன் உதித்தது. அந்த ஆந்தைக் குஞ்சுகளும் அந்த அற்புதமான காட்சியை கண்டு குதூகலித்தன.

இவ்வாறு நாமும் நமது வாழ்விலே எல்லைக் கோடுகளை போட்டுவிட்டு நமக்கு என்ன சொல்லப்பட்டதோ அதுதான் வாழ்க்கை என வாழ்கின்றோம். ஆயினும் நமக்கு தெரிவுகள் உள்ளன. நாம் அமைதி, ஆனந்தம் அற்ற வாழ்க்கையை வாழ்ந்து ஒருநாள் இறந்து போகலாம் அல்லது இது எனது வாழ்க்கை. இதனை கொண்டு நடத்த வேண்டிய பொறுப்பு என்னுடையது என அறிந்து உணர்ந்து நமது முன்னோர்கள் “உன்னையே நீ அறிவாய்" என்று சொன்ன அறிவுரையை உள்ளத்தில் எடுத்து அவ்வாறு வாழ்வதற்கான முயற்சிகளைப் போடலாம்.

பலரிடமும் நமது வாழ்வில் இது எவ்வாறு சாத்தியமாக முடியும் என்ற கேள்வி இருக்கலாம். இந்த கேள்விக்கான பதிலை நாம் நம் உள்ளேதான் கண்டுகொள்ள முடியும். “தேடித் தேடி தேடொணாத் தேவனை என்னுள்ளே தேடி கண்டுகொண்டேன்" என திருநாவுக்கரச சுவாமிகள் கூறுகின்றார். எவ்வாறு ஒரு கிணற்றின் படிக்கட்டாக உள்ள கல்லின் மேலே தண்ணீர் எடுக்கும் வாளிக்கயிறு மீண்டும் மீண்டும் உரசும் போது அது அந்தக் கல்லிலே ஒரு குழியை உருவாக்குகிறதோ அவ்வாறு நாமும் மீண்டும் மீண்டும் இவ்வாறான விஷயங்களை கேட்டு அது பற்றி சிந்திக்கும் பொழுது அதனை அடையகூடிய வழியை நாங்களும் கண்டுகொள்ள முடியும். வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை காணமுடியும். வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும் நமது கையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதன் இடையிலே வருகின்ற ஒவ்வொரு நாளையும் எவ்வளவு இயலுமோ அவ்வளவு ஆனந்தமாக வாழ்வது நமது கையில்தான் உள்ளது.

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)



## பிரபாகரனைத்...

மேலும் இந்தியப் படைகள் இலங்கையில் இருந்து வெளியேறவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் புலிகளின் தலைமை ஜனாதிபதி பிரேமதாசவுடன் கைகோர்த்து அவரிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று இந்தியாவுக்கு எதிராக இயங்கத் தயங்கவில்லை.

இந்தியா ஒரு நாடு. விடுதலை புலிகள் என்பது ஒரு இயக்கம். இந்த நிலைப்பாட்டை மறந்து இரண்டையும் ஈடுகட்டி விவாதம் செய்வதில் பயனில்லை.

**கே: கடந்த மூன்று தசாப்தங்களில் பசுபிக் – இந்தியப் பிராந்தியத்தில் வளர்ந்துவரும் சீனாவின் வலிமை, பாதுகாப்பு சூழ்நிலையில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளது. ஈழத்தமிழர்களுக்கு என்று ஒரு நாடு இருந்திருந்தால், அது இந்தியாவின் பாதுகாப்புக்கு பலமானதொன்றாக இன்றைய சூழ் நிலையில் விளங்கியிருக்குமல்லவா? அத்தகைய வாய்ப்பை இந்தியா இழந்துவிட்டதாகக் கருதுகிறீர்களா?**

ப: இத்தகைய கற்பனைக் குதிரையில் பயணம் செய்யும் கேள்விகளுக்கு நான் என்ன பதில் சொல்வது? ஒருங்கிணைந்த இலங்கையைக் கூறுபோட்டால் அதனால் எவ்வாறு இந்தியாவின் பாதுகாப்பு அதிகமாகும்? அதற்கு மாறாக இந்தியாவின் பாதுகாப்புத் தலைவலிகள்தான் அதிகமாகும். இந்தோ- பசுபிக் பாதுகாப்பு என்பது பூகோள அரசியல் சார்ந்தது. அதில் உள்ள கூறுகள் எவ்வளவு ? ஆனாலும் ஒட்டுமொத்தமாக அதன் பாதுகாப்பை பூகோளத்தின் அடிப்படையே தீர்மானிக்கும்.

## யாழ்ப்பாண...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் பலர் அறிந்தது போல மேலை நாடுகளில் முதன்மை வரைபு, விரிவான வரைபுகள் என்பன மிக விரிவான வகையிலே செய்யப்பட்டு, அவை மக்களின் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளமையைக் காணமுடியும் அதுமட்டுமின்றி அவை இணையத்தின் மூலம் பார்வையிடக்கூடிய வசதியுடன் உள்ளமையையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக தற்போது முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திக்குரிய திட்டமிடல் வரைபுகள் மீது எவ்வளவு தூரம் பொதுமக்களின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன எனத் தெரியவில்லை. வெறும் கண்துடைப்பு மக்கள் கருத்துக் கணிப்பு கூட்டங்களை நான் குறிப்பிடவில்லை. பதிலாக உண்மையான சமூக மற்றும் நிபுணத்துவ ஊடாட்டங்களை மட்டுமே நான் இங்கே குறிப்பிடுகிறேன். யாழ். நகரம் மட்டும் அல்லாது யாழில் உள்ள மற்ற வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரங்கள் ஊர்களும் தமக்கான முதன்மை, விரவான திட்டமிடலைச்செய்து தமது விழிப்புணர்வையும் பெருமையையும் நிலைநாட்ட வேண்டும். அதற்கு அந்தத்திட்டங்கள் நேர்த்தியான முறையிலே துறைசார்ந்த அறிஞர்களால் வடிவமைக்கப்பட்டு. பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.


நமது நோக்கம் இன்னொரு லண்டனை உருவாக்குவதோ காலனிய கால கட்டடத்தை மீளக்கட்டுவதோ இல்லை. மாறாக காலத்தின் தேவை கருதி எமது தனித்துவமான தன்மைகளை பாதுகாத்து, அவற்றில் இருந்து எடுக்கப்பட வேண்டிய பண்புகளை உள்ளடக்கி, எமது தேவைகளுக்கு ஏற்புடைய எதிர்காலத்தையும் மனதில் கொண்டு வடிவமைக்கப்பட நகரமே ஆகும். இவற்றை செயற்படுத்த பெரும் பணச்செலவு தேவையென்பதைவிட அதற்கான மனநிலையும் மற்றவர்களையும் செவிமடுக்கும் பண்பும்தான் அடிப்படைத் தேவை. உதாரணமாக 1950 களின் பிற்பாடு அமைக்கப்பட்ட சத்திரச்சந்தியை அண்மித்த 34 மாடி கடைத்தொகுதிகளை உற்றுநோக்கில், அவற்றுக்கிடையிலான முகப்புசார்ந்த சந்தமும், ஒப்புவமையும் அதேசமயத்தில் அவற்றின் தனித்தன்மையும் முன்மாதிரிகையாக கொள்ள கூடியவை (படம்01). இன்று அவை பெரும் விளம்பரபலகைகளினால் திரைசெய்யப்பட்டு ஏதோ ஒரு அவமானச்சின்னம் போல மூடிமறைக்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் தனது பண்டைய கட்டடங்களைப் பாதுகாத்து அவற்றை வரலாற்று பெட்டகமாக்கியுள்ளது. ஆனால், அதே காலகட்டத்துக்குரிய எம்மத்தியிலுள்ள கட்டடங்களை நகரத்துக்கு உள்ளேயே அழித்தும், விளம்பரத் தட்டிகளாலும் திரை போட்டு மறைத்துள்ளோம். இவற்றை சீர்செய்து , விளம்பரப்பலகைகளை அமைப்பதற்குரிய அளவுத்திட்டங்கள் முறைமைகளை வகுப்பதன் மூலமும் இவ் வகையான கட்டுமானங்களுக்கான வழிகாட்டும் கொள்கைமுறைகளை அமைத்து வழிநடத்துவதன் மூலமும் ஒழுங்கற்றமுறையில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கட்டுமான அலகுகளை அப்புறப்படுத்தி பாதசாரிகளுக்குரிய இடங்கள், வாகனத்தரிப்பிடங்கள் சரியான முறையில் உபயோகப்படுகின்றன என்பதை ஆளுமைசெய்வதன் மூலமும் இவற்றை சரிசெய்ய முயற்சிக்கலாம் எனபதுவும் எனது கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிணங்களின் ரயில் 5

விறுவிறுப்பான திகில் சித்திரக் கதை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org